1122

. M. 2210

வருஷ சந்தா ரு. 1-8-0

AUTHOR & PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JEGAN MOHINI

ஜகன்மோகினி

மலர் 8 JAN.-FEB. 1931 இதழ் 2-3



ஜகன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

தனிப் பிரதி 3.

JL
ைவ11, N24J9
N31'8'2,3
210029

எட்டாவது ஆண்டு !　　　　　　எட்டாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 8-வது ஆண்டு 1930௵ டிசம்பர்௴ முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட **சாமளநாதன்** என்னும் அற்புதமான நாவலின் தொடர்ச்சியும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவரும். இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலி உள்பட ரூ. 1-8-0 தான். "**சாமளநாதன்**" சென்றவாண்டின் ஏழாவது சஞ்சிகையிலிருந்து ஆரம்பமானதலால் புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் அந்த ஆறு சஞ்சிகைகளுக்காக 12 அணா கூடச் சேர்த்து ரூ 2¼ அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை வி. பியில் **அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாகு மாதலால் முன்பண மனுப்புவதே நலம்.**

(2) சந்தா நேயர்கள் நமக்கு எழுதும் கடிதங்களில் **சந்தா நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, **மூன்றணா ஸ்டாம்பு** அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும். 15 தேதிக்குமுன் சஞ்சிகை வரவில்லையென்று வரும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் **தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் **ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனாமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

மானேஜர்.

26 FEB 19

13-வது அதிகாரம்

மாசற்ற நங்கை—மோசச் செய்கை.

தன் தாயும் தமக்கையும் விபத்திற்கு ஆளாகி விட்டார்கள் என்பதைக் கேட்டு மனவருத்தமும், சுலோசனுவைப் பிரிந்துவிட்டதினுலுண்டாகிய ஆத்திரமும் ஒன்றுகூடிய இராமசந்திரன் நேரே ஜனரல் ஆஸ்பத்திரிக்கு வெகு வேகமாகச் சென்றான். அங்கு சென்று விசாரித்ததில் அவனுடைய தாயாராவது, சகோதரியாவது அத்தகைய நிலையில் அங்கு வரவில்லை என்றும் பெரிய லேடி டாக்டராகிய அந்தஅம்மாளை ஆஸ்பத்திரியில் அறியாதாரில்லை ஆகையால் இங்கு எந்த விடத்திலும் அவர்கள் சிகிச்சைபெறவில்லை என்றும் திட்டமாகக்கூறிவிட்டார்கள்.

இந்த வார்த்தையைக் கேட்ட இராமசந்திரன் திடுக்கிட்டான். "இதென்ன ஆச்சரியம்! அவர்களுக்கு பெரிய ஆபத்து வந்துவிட்டதாக நம்மிடம் தெரிவித்தது பொய்யான சூழ்ச்சியா! என்ன வேடிக்கை இது. அவர்கள் இவ்வாஸ்பத்திரியில் இல்லையா! இவ்விதமான கட்டுக்கதையை நம்மிடம் யார் தெரிவித்திருப்பார்கள். ஒருகால் அந்த சுலோசனுவே தான் தப்பித்துச் செல்லவேண்டும் என்கிற நோக்கத்துடன் இவ்விதம் எவர் மூலமாகவேனும் தெரிவிக்கும்படி சொல்லியிருப்பாளா?..............'சேச்சே; அப்படி நினைப்பதற்கில்லை; அவள் இன்று மாலையில் கடற்கரைக்குச் சென்ற பிறகு வேறு எங்கும் செல்லாது திடீரென்றுஉண்டாகிய மயக்கத்தினுல் நம்

அசட்டுத்தனமாயும் அசம்பாவிதமாயும் பேசிக்கொண்டு சிலர் வருகிறார்கள். அவர்களின் சம்பாஷணையைக் கேட்பதற்கே பிடிக்காததால் அவர்களை எவ்விதமேனும் அனுப்பிவிட நாம் ஏற்பாடு செய்கையில் அவர்களோ இடத்தைவிட்டு அசையாத கல்லாக உட்கார்ந்து விடுகிறார்கள். அன்றைய பொழுதுமுற்றும் வ்யர்த்தமாகி விடுகிறது.

210629

வீட்டிற்கல்லவா கொண்டுவரப்பட்டாள். இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது. அவளுடைய நிலைமையைக்கண்டு அவளுக்காக உபகாரம் செய்வதற்கு முன் வருபவர் யாரிருக்கிறார்கள். அந்தப்பயல் விமலநாதன் தான் ஒருவன் திண்டாடுகின்றான். அவனுக்கு நாம் சுலோசனாவைக் கொண்டுவந்த விவரம் எப்படித்தெரியும்............... சற்று முன் சுலோசனா இங்கு இருக்கிறாளா! என்று யாரோ டெலிபோனில் கேட்டார்களே! அவ்வாறு கேட்டது அந்த வக்கீலாகத் தானிருப்பானோ. நாம் இங்கு சுலோசனாவை வைத்துக்கொண்டே இல்லை என்று கூறியதை அறிந்து அவ்வாறு செய்திருப்பானோ! ஒன்றும் தெரியவில்லையே! எதற்கும் வீட்டிற்குச் செல்வோம்" என்று தனக்குள் பலவாறு எண்ணியபடி அவ்விடத்திற்குத் தகுந்த பதிலளித்துவிட்டு அங்கிருந்து நேராகத் தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

அப்போது காற்று மழை பலத்துவிட்டதால் அவனால் எதுவும் செய்ய வியலவில்லை. மனம் பதறுகின்றது. அவனுடைய தாயும் சகோதரியும் வரவில்லை. விஷயம் இன்னதென்று தெரியாது மயங்கினான். சுலோசனாவின் வீட்டிற்குப் போய் விஷயங்களைத் தெரிந்து கொள்வதென்று தீர்மானித்து புறப்பட்டு மோட்டாரில் சிறிது தூரம் செல்வதற்குள் வண்டியின் டயர் படாரென்று ஒரு கல்லில் மோதி கிழிந்து விட்டது. ஆதலின் அவன் தலைவிதியேயென்று நடந்து வந்து சேர்ந்தான். வண்டியை ஆட்களின் மூலம் தள்ளிக்கொண்டு வரச்செய்தான். இனி தான் என் செய்வதென்று யோசித்திருக்கும் தறுவாயில் அவனது தாயாரும் சோதரியும் வந்து சேர்ந்தார்கள்.

அவர்களைக் கண்ட இராமச்சந்திரன் "அம்மா! ஏனம்மா! இத்தனை நேரம்?" என்றான். இது கேட்ட அவன் தாயார் "சென்ற விடத்

மார்கழி மதியில் அதிகாலையில் எழுந்து நீராடிப் பின் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்வதும் அங்குள்ள பலவிதமான குதூகலங்களும் குழந்தைகள் பொங்கல் வாங்குவதற்குச் செய்யும் ஆரவாரமும் பெரியவர்கள் அந்த வினியோகத்திற்கு சண்டையிட்டு மேல் விழுந்துச் செல்வதும் ஓர் வேடிக்கையாயும் ஆநந்தமாயு மிருக்கிறது.

தில் கேஸ் மிகவும் கஷ்டமாய் விட்டது. வேலை இப்போதுதான் முடிந்தது வந்தேன்.'' என்றாள்.

ராம:—அம்மா! சற்று நேரத்திற்கு முன் ஓர் பெரிய தடபுடல் நடந்துவிட்டது. அதாவது நீங்கள் கேஸை முடித்துக்கொண்டு வருகையில் வழியில் வேறொரு மோட்டாரினால் உங்கள் வண்டி மோதப்பட்டு அதனால் உங்களுக்குப் பலத்த காயமேற்பட்டு விட்டதாகவும் உங்களிருவரையும் ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டிருப்பதாயும் உடனே என்னை வரவேண்டுமென்று தெரிவித்ததாயும் யாரோ ஒருவன் வந்து சொன்னான். இந்த வார்த்தையைக் கேட்ட நான் மிகவும் நடுநடுங்கிப்போனேன். உடனே சுலோசனாவை அவள் வீட்டிற்கு அனுப்பிவிட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்க்கையில் அங்கு ஒருவிதமான தகவலுமே கிடைக்கவில்லை. 'உங்கள் தாயார் இங்கு வரவில்லை' என்று கூறிவிட்டார்கள். இதென்ன அனியாயக்கட்டுக் கதையம்மா! நான் நீங்கள் சென்றிருக்கும் விலாசம் தெரிந்திருந்தால் அங்கும் அவசியம் வந்திருப்பேன். விலாசமும் தெரியாது ஆகையினால் தத்தளித்துக்கொண்டே இருக்கிறேன்; மீண்டும் எங்கேனும்; தேடிச்சென்று பார்ப்போம் என்று புறப்பட்டேன். இந்தப் பெருங்காற்று மழையினால் டயர் கிழிந்துவிட்டது. அதனால் திரும்பி வந்துவிட்டேன். இது முதல் தவித்துக்கொண்டு இருக்கிறேன்'' என்றான்.

இதைக்கேட்ட அவன் அன்னையும் சகோதரியும் மிக்க ஆச்சரியமுற்று ''ஆ! இப்படியும் நடந்ததா! இதென்ன வேடிக்கை! நான் வெளியில் சென்றிருப்பதை யாரோ அறிந்து இவ்விதம் கூறி, உன்னைக் கலவரத்திற்குள்ளாக்கி இருக்கிறார்கள். இதை நான் பிறகு கவனிக்கிறேன். கண் உறங்க ஆரம்பித்துவிட்டது; வெகு நேரமாய்

கோவில் துரையார்கள் எத்தனை சிடுசிடுத்துக் கடுமொழிகளைக் கூறி திட்டிய போதிலும் ஸ்திரீகளின் கூட்டத்தை அடக்கவும் அவர்களின் பேரிரைச்சலை தடுக்கவும் முடிவதில்லை. அவர்களோ! ரோஷமின்றி இத்தகைய சுடுச் சொற்களைக் கேட்டும் கேளாத மூடமாகவே நடக்கின்றார்கள் இவர்களின் செய்கையினால் ஆடவர்கள் நகைக்கும்படியாக ஆய்விடுகிறது.

விட்டது. சுலோசனாவுக்கு நன்றாக தெளிந்துவிட்டதா! அவள் சவுக்கியமாக வீடு போய் சேர்ந்தாளா!" என்றாள்.

இதனைக்கேட்ட இராமசந்திரன் தனது கபடபுத்தியை படக்கிச் சரியானபடி பதில் சொல்லிவிட்டுப் படுக்கைக்குச் சென்றான். அன்று இரவு கழிவது அவனுக்கு பெரும் யுகமாக விருந்தது. மறுநாள் பொழுது விடிந்ததும் தன் மோட்டாரைச் சீர்திருத்திக் கொண்டு அதில் அமர்ந்து சுலோசனாவின் வீட்டிற்கு சென்றான். அங்கு விசாரித்ததில் சுலோசனா இல்லை என்கிற செய்தியைக் கேட்டான். உடனே அவன் மனது விமலநாதன் வீட்டைத் தாவிச் சென்றது. எனினும் அவள் எங்கு சென்றிருக்கிறாள் என்பதைத் தீர விசாரித்துக் கொள்ளவெண்ணி "கோபிநாதன் எங்கே!" என்றான்.

அங்கிருந்த வேலைக்காரன் அவரும் எங்கேயோ வெளியில் சென்றிருப்பதாக மட்டும் கூறினான். பிறகு இராமசந்திரன் ஏதும்பேச மாட்டாமல் வெளியில் சென்றான். தனக்கும் விமலநாதனுக்கும் நேரில் பரிச்சயமில்லையாதலால் திடீரென்று அங்கு செல்வதற்கு யோசித்தவாறு நின்றான். பிறகு ஏதேனும் ஒரு பொய் விஷயத்தை கேல் ஜோடிப்பது போல ஜோடித்துக்கொண்டு செல்வோம் என்று தீர்மானித்து நேரே விமலநாதனின் வீட்டிற்குச் சென்றான்.

நாம் முன் அதிகாரத்தின் இறுதியில் விட்டுவந்த விமலநாதனை இனிக் கவனிப்போம். சுலோசனா கையில் பிடித்திருந்த தர்மாமீட்டரை அப்படியே பிடித்தபடி கண்ணீர் வடித்தவாறு நின்றுவிட்டாள். இவள்நிற்கும் பரிதாபகரமான காட்சியைக்கண்ட பரிமளாவின் உள்ளம் புழுங்குகின்றது. என்ன சொல்வதென்றும் தோன்றவில்லை. தன் மாமியும் மாமனும் எதிரில்நிற்பதால்! அவர்கள் முகத்தையும் நோக்குகின்றாள். சுலோசனாவின் மீது தன் அன்பன் வைத்துள்ள காதல் ஒருதலைப்பட்டதோ, இருதலைப்பட்டதோ! என்பதை அறியாது இதுகாறும் மனதுக்குள் சந்தேகப்பட்டமை அந்த நிமிடம் பறந்துவிட்

சூரியன் கிளம்பியபிறகு எழுந்திருக்கும் மனிதர்களையுங்கூட மார்கழித் திங்களின் பொங்கல் மதியை உண்டாக்கி அதி விரைவில் எழுப்பிவிடுகிறது.

டது. சுலோசனவின் அகத்திலுள்ள அந்தரங்கமான எண்ணத்தை அப்படியே அடுத்தது காட்டும் பளிங்கு போன்று எடுத்து அவள் முகம் காட்டிவிட்டது. இதனல் பரிமளாவின் சந்தோஷம் இன்னும் உச்சநிலையை அடைந்தது. தேனும் பாலும் போன்ற இவ்விருவருடைய மனமும் ஒன்றுதான் என்பதைத் தெட்டென அறிந்தாள். தன் நாயகனை நோக்கி "நாதா! இதோ சுலோசன வந்திருக்கிறார்கள். கண் திறந்து பாருங்கள். உங்களுக்கென்ன உடம்பு?" என்று கேட்டவாறு அவன் முகத்தை உற்றுக் கவனித்தாள்.

அதே சமயத்தில் அவன் தாயார் அருகில் வந்து "என் செல்வா! விமலநாதா! என்னடா கண்திறவாது படுத்திருக்கிறாய்! என்ன செய்கிறதப்பா உனக்கு. குழந்தாய்! செல்வமணி புலம்புகிறான் பாரடா! விமலநாதா! என்று வெகு வாஞ்சையுடனும் விசனத்துடனும் விளம்பினள். அப்போது விமலநாதன் வழக்கம்போல பிதற்றினனேயன்றி தெளிவாகப் பேசவில்லை. விமலநாதனின் தாயார் "என்னடா! விமலநாதா! சுலோசன இதோ இருக்கிறாள் பாரடா! அம்மா! சுலோசன! என்ன ஆபத்து வந்துவிட்டதம்மா! எங்களுக்கு ஒன்றும் தைரியம் கூறுது நீயும் இவ்விதம் புலம்பிக் கொண்டே இருந்தால் நாங்கள் எவ்விதம் தேறுவது. சுலோசன! எல்லோருக்கும் உயிர்ப்பிச்சை யளிக்கவல்ல நீ இவ்விதம் கலங்கலாகுமா! இது உன் தொழில் முறைக்கு அடுக்குமா! என்னதான் வந்துவிட்டது சொல்லேன். விமலநாதன் பிழைப்பான! எங்களைக் காப்பாற்றுவான!" என்று கதறியவாறு கேட்கிறாள்.

அதுபரியந்தம் சிலைபோன்று நின்ற சுலோசன அப்போதே உணர்வு பெற்றவளாகிப் பேசத்தொடங்கி "பாட்டி! கவலை கொள்ளாதீர்கள். அவருக்குக் சிறிதும் பயமில்லை. மகா பாவியாகிய என் பெயரை அடிக்கடி உச்சரிப்பதனல், என்னகாரணமாக விருக்கலாம் என்று சற்று நிதானித்து யோசித்தேனே யன்றி வேறில்லை. இதோ

சங்கீதத்தின் அருமையையும் காலப்போக்கின் நிலைமையையும் மனிதருடைய யோக்யதாபக்ஷத்தின் மகிமையையும் அறியாத சில மூடர்கள் மேல் குறித்தவைகளைக் கண்டு வித்யாசமாகப் பேசி விடுகிறார்கள். வித்தையின் மகிமையை அறிந்தவர்களோ! வாய் திறப்பதில்லை.

ஒரு மருந்தை இன்ஜெக்ஷன் செய்கிறேன். உடனே ப்ரக்ஞை வரும்'' என்று கூறியவாறு ஊசி குத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு உடனே இன்ஜெக்ஷன் செய்தாள். உள்ளுக்கும் மருந்துகளைச் செலுத்தினாள். சாகரத்தின் அலைகளுக்கொப்பான அவளுடைய எண்ணங்களை மனத்தினுள்ளடக்கிக்கொண்டு தனக்குள் ஏதேதோ சிந்தித்தவாறு வீற்றிருந்தாள். அந்த நிலைமையின் இடையில் கோபிநாதனையும் கவனித்துக்கொண்டு வந்தாள்.

சுமார் அரைமணி நேரம் சென்ற பிறகு விமலநாதன் சிறிது தெளிவுகொண்டு கண்ணை விழித்தான். "ஹா! சுலோசனா! சுலோசனா! நீ எங்கிருக்கின்றாய்! உன்னை இனி எங்குத் தேடுவேன்?'' என்று புலம்பியவாறு நாற்புறமும் சுற்றி ஒரு பார்வை பார்த்தான். உடனே சுலோசனா "மாமா இதோ! நான் இருக்கிறேன். என்ன உடம்பு! ஏன் இவ்விதமிருக்கிறீர்கள்?'' என்று வெகு நயமாயும் அன்பு ததும்பியும் கேட்டவாறு அவன் அருகில் சென்று நின்றாள். பரிமளம் மிகுந்த பரிமளாவும் அதே நிமிடத்தில் "நாதா! இதோ சுலோசனா இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒருவிதமான அபாயமுமில்லை. நீங்கள் கவலைப்படவேண்டாம். இதோ பாருங்கள்!'' என்றாள்.

அதுவரையில் ப்ரக்ஞை அற்றிருந்த விமலநாதனின் செவியில் இந்த வசனங்கள் விழுந்ததும் ஆவேசங்கொண்டவன்போல கைகளை உதறிக்கொண்டு "ஹா! எதோ! எதோ! சுலோசனா! சுலோசனா! என்னகத்தைவிட்டு அகலாதிருக்கும் அன்பான சாமளா! எங்கே!'' என்று கூவிக்கொண்டே எழுந்து உட்கார்ந்து சுலோசனா உட்கார்ந்திருந்த விடத்தைப் பார்த்தான். அவ்வளவுதான் அளப்பரிய சந்தோஷத்துடன் சுலோசனாவின் இருகரங்களையும் பற்றிக்கொண்டு ஒன்றுமே பேசமாட்டாது கண்ணீர் உகுத்தவாறு கற்சிலையைப் போன்று நின்றுவிட்டனன்.

பெண் பிள்ளைகளுக்கென நியமிக்கப்பட்ட எந்த காரியத்திலும் ஆண் மகன் தலையிட்டுப் பேசுவதாவது அந்தப் பெண்களின் கூட்டத்திற்கே ஓர் அவமானமும் இழிவும் உண்டாக்கி விடுகிறது. அத்தகைய சங்கங்களுக்கு மற்றப் பெண்கள் வருவதற்கும் அஞ்சும்படியாகவே நேர்ந்து விடுகின்றது.

அந்தச்சமயமே நமது இராமசந்திரன் விமலநாதன் பங்களாவிற்கு வந்து "வக்கீலிருக்கிறாரா!" என்று வினவினன். வாயிற் காப்போன் "அவருக்கு உடம்பு சீக்கு. டாக்டர் சுலோசனம்மாள் வந்திருக்கிறார்கள்" என்று உண்மையைக் கூறிவிட்டான். இதைக் கேட்டதே அவன் மனம் திடுக்கிட்டது. "ஆ! நினைத்தவாறே ஆயிற்று" என்று எண்ணியவாறு நேரே உள்ளே புகுந்தான். இவன் இருக்கும் இடத்திற்கு வலதுபுறமாயுள்ள ஹாலில் விமலநாதன் படுத்திருப்பதால் அந்த ஹாலுக்கு வெளிப்புறத்தில் மாட்டப்பட்டிருந்த பெரிய நிலைக்கண்ணாடியில் சுலோசனையின் கரத்தை விமலநாதன் பற்றி இருக்கும் காட்சி இப்பாவியின் திருஷ்டியில் நன்ருகப்பட்டது.

இந்த அலங்காரமான காட்சியைக் கண்ட இராமசந்திரன் இருதயத்தில் அனல் மூண்டுவிட்டது. அக்னி ஜ்வாலையின் மத்தியில் நிற்பவன்போலானான். கடகடவென்று பல்லைக் கடித்தான். மீசையை முறுக்கினன். கைகளிரண்டையும் ஒன்ருேடொன்று சேர்த்துப் பிசைந்தான். அவனுடைய ஆத்திரமுற்றும் மூண்டு பொங்கி எழுந்த ஆவேசத்துடன் பெருத்த மூச்சு உஸ் என்று விடுகிறான். இச்சமயத்தில் தான் அங்கு உள்ளே செல்வது தவருதலென்று எண்ணி சில நிமிடங்கள் அவ்விடத்திலேயே நின்ருன். அங்கு நிற்பதைத் தற்செயலாக பார்த்துவிட்ட பரிமளா தன்னாயகனிடத்தில் வந்து "நாதா! இராமசந்திரன் வந்திருக்கிருர்," என்ருள்.

இதனைச் செவியுற்ற சுலோசனை நடுக்கமுற்று விழித்தாள். விமலநாதனுக்கு அப்போது நன்ருக நினைவு வந்துவிட்ட தாகையினல் இராமசந்திரன்மேலுள்ள வெறுப்பினல் "யார் இராமசந்திரனு! அயோக்யப் பயல் அவனை இப்போது நான் பார்க்கக்கூடிய நிலைமையில்லை, என்று வேலையாளிடம் கூறித் தெரிவி," என்ருன். இவ்வார்த்

அனுவசியமாக ஒரு ஆடவன் பெண்களின் மத்தியில் வந்து சம்பந்தமில்லாது பேசுவதும் ஏளனம் செய்வதும் நிரம்பவும் அசம்பாவிதமான செய்கையாகும். அத்தகைய செய்கைகளுக்கு இடம் கொடுக்கும் மனிதர்களின் மீது தான் குற்றமெனலாம்.

தைகள் இராமசந்திரன் செவியில் நன்றாக விழுந்துவிட்டதால் அவனுடைய வீராவேசம் முன்னிலும் அதிகரித்துவிட்டது. "ஆ! விமலநாதனின் மண்டைத்திமிர் இவ்வளவு தூரம் விஞ்சிவிட்டதா! இருக்கட்டும் ஒருகை பார்த்துக்கொள்கிறேன்." என்று மனத்தில் எண்ணியவாறு கனைத்துக்கொண்டே மீண்டும் விமலநாதனிருக்கும் அரைப்பக்கமாகச் சென்று அவர்களை உற்று கவனித்துப் பின் ஏதோ நினைத்தவனாய்ச் சடக்கென்று போய்விட்டான்.

விமலநாதனுக்கு இத்தகைய உடம்பு வந்ததற்கு யாது காரணம் என்று பரிமளாவும் சுலோசனாவும் அறிய ஆவல் கொண்டு விமலநாதனைக் கேட்டார்கள். விமலநாதன் நடந்த விஷயங்களை அப்படியே கூறி "நான் அங்கு கதவின் இடுக்கினால் பார்த்தேன் உள்ளே இருந்தது ஒரு பெண் பிள்ளையின் உருவந்தான் என்று மட்டும் தெரிந்துகொண்டு, அவள் யார் என்று கவனித்தேன். அந்த பெண் பிள்ளை அவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவள் தான். அவள் அதிகமாகக் குடிக்கின்ற பழக்கம் உண்டாம். அவ்வாறு தலைகால் தெரியாமல் உயர்ந்த மது வகைகளைக் குடித்துவிட்டதால் இரயிலில் மயக்கமாக விழுந்து விட்டாளாம். இதை அவர்களின் சம்பாஷணையினால் தெரிந்துகொண் டிருக்கையில் என் தலையில் ஒரு அடி விழுந்தது. உடனே நான் நிலை கலங்கி விழுந்தேன். பிறகு சற்று நேரத்திற் கெல்லாம் சிறிது தெளிவு உண்டாகியது. அப்போது எனது கக்ஷிக்காரர் ஒருவருடன் நான் இருக்கக் கண்டேன். அவரிடம் விஷயங்களை விசாரிப்பதற்குள் மீண்டும் மயக்கமாக விழுந்துவிட்டேன். இப்போது தான் நான் கண் திறந்து தெளிவு பெற்றுள்ளேன்! இதிருக்கட்டும். சுலோசனா! உன்னை எடுத்துச் சென்றதாக நான் கேள்வியுற்றது உண்மையா! அல்லவா! அதன் விவரம் அறியவே நான் இத்தனை பாடு பட்டேன்" என்றான்.

நமக்குச் சம்பந்த மில்லாத விஷயங்களைப் பிறர் எடுத்துக் கூறும்போது 'உனக்கு இந்த விடத்தில் சம்பந்த மில்லை வெளியே செல்லலாம்' என்று அங்கு முதன்மையானவர்கள் தெரிவிக்காது அந்த அன்னியன் பேசியதற்கு அனுகூலமாகவே பேசிவிடுவது மற்றவர்களை வேண்டுமென்று அவமானப் படுத்தியது போலவே ஆகின்றது.

சுலோசனா:—நடந்த வரலாற்றைக் கூறி, கடவுளின் கருணை என்பால் ஒருபுற மிருக்கின்றதென்பதற்கு அத்தாக்ஷி, இந்த ஆபத்துக்களினின்றும் தப்பியதே யாகும். அந்தப் பாவியின் வசம் சிக்கிய என்னைக் கடவுள் இம்முறையும் விடுவித்தார். மகா பாவியாகிய என்னால் தங்களுக்கு இத்தகைய கதியாகிவிட்டது—என்று பேசிக்கொண் டிருக்கையில், அங்கு விமலாநதனுடைய கக்ஷிக்காரர் வந்தார் அவரைக் கண்ட விமலநாதன், "ஐயா! அங்கு நடந்த வரலாற்றையும் தயவுசெய்து கூறும்" என்றான்.

இதுகேட்ட அம் மனிதன் பேச வாரம்பித்து "ஐயா! நான் எனது வியாபார விஷயமாக அடிக்கடி அனேகக் கிராமாந்தாங்களுக்குச் செல்வது வழக்கம். அவ்வாறே நான் நேற்று அந்த வூருக்கு வந்து அச் சத்திரத்தில் தங்கினேன். காற்று மழையின் கொடுமையைக் கூறவேண்டியதில்லை. அது யாவரும் அறிந்த விஷயம். தாங்கள் அந்த சத்திரத்தின் அறைகளைக் கவனித்துக் கொண்டே வந்ததை அங்குள்ள ஒருவன் முதலில் கண்டு உங்களைக் கள்ளனென மதித்து தலைமீது அடித்துவிட்டானும். நீங்களிட்ட சத்தத்தைக் கேட்டு நானும் மற்றும் சிலரும் வந்து பார்க்கையில் தங்களை இன்னாரென்று நான் தெரிந்துகொண்டு அலறிப் போய் விட்டேன். 'உங்களுக்கா இந்த கதி வந்தது!' என்று எண்ணி வருந்தினேன். உடனே உங்களைத் தூக்கிக்கொண்டுபோய் என்னுடைய அறையில் வைத்துக்கொண்டேன். என் மனிதர் இவர் என்று எல்லோருக்கும் கூறி அவர்களை அனுப்பிவிட்டேன். பின்னர் ஒருவித கலாடாவும் நடவா தொழிந்தது. அங்குக் கூடியிருந்த சினிமாக்காரர்களின் செட்டு ஒன்று உங்களைப் பார்க்க விரும்பி ஓடி வந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்ட மாதிரியிலிருந்து அவர்களுக்கும் உங்களுக்கும் முன்னரே பரிச்சயமோ, மனஸ்தாபமோ இருக்கவேண்டுமென்று யூகித்துக்கொண்டேன். ஆகையினால் அவர்களிடம் தங்களைக் காட்டிக் கொடாமல் மறைத்துவிட்டேன். அந்த சத்திரத்து சொந்தக்காரர் எனக்குத் தெரியுமாகையினால் நான்

மரியாதை என்பது பொது விடங்களுக்கு மிகவும் இன்றியமையாதது. அத்தகைய விடங்களில் மரியாதைத் தவறிவிட்டால் அந்த இடத்தின் மதிப்பே கெட்டுவிட்டது போன்றுதான் ஆகும்.

அவரிடம் சென்று சற்று மோட்டார்கார் வேண்டுமென்று கேட்டேன். அவரும் தடையின்றி கொடுத்தார். வழிகளில் எவ்வளவோ கஷ்டப்பட்டு மோட்டாருடன் உம்மை இங்கு கொண்டுவந்து சேர்த்தேன். உம்மைக் கள்ளனென்று எண்ணி அடித்துவிட்ட மனிதன், தான் தெரியாது செய்துவிட்ட காரியத்திற்காக மிகுந்த வருத்தமுற்றுத் தவித்தான். நடந்த விஷயங்கள் இதுதான்" என்றான்.

இதுகேட்ட எல்லோரும் வியப்புற்றார்கள். சுஷிக்காரனுக்கு அனேக உபசார வார்த்தைகளைக் கூறினார்கள். அவனும் உத்தரவு பெற்றுக்கொண்டு சென்றுவிட்டான். பிறகு சுலோசனா "நானும் சென்று வரட்டுமா!" என்று கேட்டாள்.

பரிம:—என்னம்மா அவசரம்! கோபிநாதன் இங்கிருக்கையில் நீ ஏன் விடு செல்லவேண்டும். நீ இங்கிருந்தால் என்ன! நாளைக்கு வேண்டுமாயின் செல்லலாம்.

சுலோ:—அம்மணி! நான் எனது தொழிலின் முறைக்காகச் செல்லவேண்டுமே, என் செய்வேன்? அங்குச் சென்று அக் காரியங்களை கவனித்துக்கொண்டு வேண்டுமானால் பிறகு மீண்டும் வருகிறேன். கோபிக்கு நீங்களிருக்கையில் குறைவு என்ன......மாமா! நான் சென்று வரட்டுமா! என் மனம் சற்று முன்னர் இருந்ததற்குக் கடவுளின் கருணையினால் இப்போது சிறிது தெம்பாகவே இருக்கிறது. ஆகையினால் நான் சென்று வருகிறேன். எனக்கு உத்தரவா!" என்று வெகு வணக்கத்துடன் கேட்டாள்.

விமல:—எனது அருமைச் சுலோசனா! நான் நேற்றைய தினம் இருந்த நிலைமையில் உன்னை உயிருடன் மீண்டும் காணப்போகிறோம் என்று நினைக்கவே இல்லை. இன்றோடு நமது முடிவே தீர்ந்துவிட்டதென்று எண்ணினேன். கடவுளின் அருளால் மறுபடியும் காணும்

நமக்கு மிகவும் உயிருக்கு உயிரானவர்கள் உண்மை யறியுமுன்னர், நினைத்திருந்த விஷயத்தையே உண்மை யறிந்த பின்னரும் அவ்விஷயத்தின் உண்மையை நம்பாது தாம் எண்ணியதையே சாதித்துப் பேசுவதானது, மனம் அபாரமான வருத்தத்தை யடையச் செய்துவிடுகிறது.

பாக்கியம் பெற்றேன். நீ இப்பொழுதே போகவேண்டுமோ! இன்று பூராவும் இங்கிருந்து என் பிணியை முற்றும் அகற்றமாட்டாயா! உன் சகோதரனுக்கும் இன்னும் குணப்படவில்லை—........அதிருக் கட்டும். அந்த அயோக்கியப் பயல் இங்கு எதற்காக வந்தான்; தெரியவில்லையே!

சுலோ:—டியர் மாமா! இங்கு நம்மைத் தவிர வேறு யாரையும் காணவில்லை. நான் இங்குத் தனிமையில் பேசுவதைக் கண்டால் உங்கள் பெற்றோர் வித்தியாசமாக எண்ணுவார்களோ என்னவோ எனக்கு அது பயமாக விருக்கிறதே!

விமல:—உம். நீ இதற்காகவா பயப்படுகின்றாய்! என் பெற்றோர் எனக்குச் செய்த பல உபகாரங்களாகிய க்ஷீரத்தில் உன்னை எனக்கு மணம் புரிவிக்காததான விஷத்தைக் கலந்துவிட்டதை அவர்கள் இப்போது நினைத்து வருந்தாமலில்லை. அதைப் பற்றி அடிக்கடி அவர்களே பேசிக்கொள்வதும் என் செவியில் விழுகின்றது. மேலும் உன்மீது அவர்களுக்குள்ள அன்பும் மதிப்பும் கூறத்தரமன்று. அபாரமான அன்பை அவர்கள் உன்மீது செலுத்தும்படியாக உனது அமிருதம் போன்ற குணமே செய்துவிட்டது. நீ சற்றும் வித்தியாசமே எண்ணமல் இன்று தயவுசெய்து இங்கிருக்க வேண்டும்.

சுலோ:—டியர்! நான் இந்த வார்த்தைக்கு என்ன பதில் கூறுவேன்; உங்கள் இஷ்டப்படியே இருக்கிறேன். இந்தப் பாவிக் கட்டையைத் தாங்கள் இவ்வளவு வேண்டிக்கொள்கையில் நான் எவ்விதம் மறுப்பேன்? ஆனால் இன்று ஆஸ்பத்திரிக்கு அவசியம் சென்று வரவேண்டும். அங்கு மட்டும் சென்று வருகிறேன். பாவி

உலகத்தில் சற்று பிரபலஸ்தர்களா யுள்ளவர்களின் பெயர், மற்ற யாருக்கேனு மிருந்து, அந்த மனிதர்கள் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்தால் அதைமேல் குறித்த ப்ரபலஸ்தர் தான் செய்து விட்டதாக சிலர் எண்ணி நிச்சயித்துவிடுவது, வேடிக்கையிலும் வேடிக்கை. ஒருவருக்குள்ள பெயர் உலகில் மற்றவர்களுக்கு இருக்கா தென்பதே அவர்களுடைய தீர்மானமோ என்னவோ தெரியவில்லை.

இராமசந்திரன் இங்கு வந்ததை நினைக்க எனக்கு ஏதோ ஒருவித மான அச்சம் உண்டாகின்றது. ஒருநாளுமில்லாது அப் பாவி இங்கு எதற்காக வரவேண்டும்.

விமல:—அதுதான் எனக்கும் யோசனையாக விருக்கிறது. பார்ப்பவர்களுக்கு உபகாரம் செய்வது போன்று பாவனைக் காட்டி உன்னை அபகரித்துச் சென்ற அவனது மோசத்தை நினைக்கின் பகீர் என்கிறது. சுலோசனு! எதற்கும் பயப்படாதே! கடவுளிருக்கிறார், அவர் உன்னைக் காப்பாற்றுவார். நேற்று பட்ட பாட்டில் என் தேகம் முற்றும் ரணமாக வலிக்கின்றது. நித்திரையும் கொள்ளவில்லை என்ன செய்வேன். என்னுடைய துரதிர்ஷ்ட வசமே என்னை இவ் வித மெல்லாம் ஆட்டுகின்றது என்கிற தீர்மானமே என்னைக் கப்பிக்கொண்டு விட்டது. சுலோசனு! இதோ இக் கடிதத்தைப் பார்—என்று கூறி சுலோசனுவிடம் தனக்கு பரிமளா எழுதிக் கொடுத்த கடிதத்தைக் கொடுத்தான்.

அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்த சுலோசனு அப்படியே ஆச்சரியப் பதுமையானுள். இன்னது பதில் பேசுவதென்று தெரி யாமல் விழி மழை பொழிந்தவாறு உட்கார்ந்துவிட்டாள். சில நிமிடங்கள் ஊமை போலானுள். பிறகு பேசத் தொடங்கி, "மாமா! இந்த உலகத்தில் இந்த அம்மாளைப் போன்ற உத்தமியும், அபூர்வ மான குணவதியும் இவர்களைத் தவிர வேறு கிடைப்பார்களா! இல்லை! இல்லை!! இந்த அம்மாளின் குணத்தின் மகிமையை நான் முனபே ஒருதரம பார்ததிருக்கிறேன். அது விஷயம் உங்களுக்கு இது வரையில் தெரியாது. என்னைக் கூறவேண்டா மெனறு அந்த அம்மாளே சொல்லி இருக்கிறார்கள்; எனினும் இனிமேல் அதைக் கூறுவதில் பிழை இல்லை என்று தோன்றுவதால் தெரி விக்கின்றேன். முன்பொரு நாள் இந்தம்மாளின் தாயாரும் அத்தையும் என் வீட்டிற்கு வந்து என்னைக் கண்டவாறு திட்டி னார்கள். அத்தருவாயில் இந்தப் புண்ணியவதி அங்கு வந்து தன்

பல வருடங்களாகப் பிரிந்துப் பாராதிருந்த சினேகிதையைக் கண்டு கட்டு மீறிய ஆநந்த வெள்ளத்தில் மிதக்குகையில், உடனே மன வருத்தத்தை யடை யக் கூடிய விஷயங்களும் எவ்விதமோ சேர்ந்து விடுகின்றன.

சொந்த மனிதர்களையே திட்டி அனுப்பிவிட்டு, எனக்கு தேறுதல் கூறினர்கள். அவ்வாறு செய்பவர்கள் யாரேனு முளரா! தங்களுடைய பாக்கியமே தங்களுக்கு இத்தகைய உத்தமி பத்தினியாக வாய்த்துள்ளார்கள்.

விமல:—சுலோசனு! இச் செய்தி எனக்கு இதுபரியந்தம் தெரியாது, இவ்விதமும் நடந்ததா! அந்தத் துஷ்டர்களின் மண்டைத் திமிர் இவ்விதமும் மிஞ்சிவிட்டதா! எனக்குத் தெரிந்திருக்குமாயின் அவர்களை அதம் செய்திருப்பேனே!

சுலோ:—உங்களைவிட ஆயிரம் பங்கு அதிகமாக அவர்களைத் தங்கள் தேவியார் கண்டித்து 'இனி என் வீட்டிற்கு நீங்கள் வர வேண்டியதில்லை' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். ஏன்! அவர்கள்மீது சற்றும் தப்பிதமே இல்லை. நான் ஒருத்தி இருப்பதால் அன்றோ உங்கள் மனம் இவ்விதமாகிவிட்டது. அதற்குக் காரணம் நான் தானே!

விமல:—ஓ! அவ்வாறு ஒருகாலும் இல்லை. நான் பரிமளாவை மணந்தபிறகு இவ்விதமான பேத புத்திக்கு இடங் கொடுத்திருப்பின் நீ சொல்வது வாஸ்தவமே! என்னுடைய அறிவு எனக்குத் தெரிந்த நாள் முதலாக நான் என்னுருயிரினிடத்தில் என்னென்பை பறிகொடுத்துவிட்டு அந்த ஆனந்தத்தோற்றத்திலேயே உயிர்வாழ்ந்து வருகிறேனே! அதற்குக் காரணம் நீயல்ல, நானு மல்ல, நம்முடைய முற்பவத்தின பயன் இது!—என்று பேசிக்கொண்டே இருக்கையில், சுலோசனுவின் வேலையாள் வந்து, அவள் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்து "அம்மா! இதை இப்போதே உங்களிடத்தில் சேர்க்கும்படியாக இதைக் கொடுத்தவர் தெரிவித்தார்; ஆகையினுல் இப்போதே கொணர்ந்தேன்" என்று சொன்னுன்.

சுலோசனு அக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். அதன் விஷயமாவன: அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு ஒரு சங்கீத்

சங்கீத மகா நாட்டின் சிறப்பே ஓர் தனித்தது. அதில் நடக்கும் சங்கீத விஷயமான வாத தர்க்கங்களும், தீர்மானங்களும், சங்கீத வித்வத் கோஷ்டிகளின் சிறப்பும் வெகு எழிலுடன் விளங்குகின்றன. எந்த விஷயத்திற்கும் ஆனந்தமென்பது இல்லாமலில்லை.

தின் வருடக் கொண்டாட்ட தின மென்றும் அதற்கு சுலோசனவை உபன்யாசம் செய்வதற்காக அவசியம் வரும்படியாகவும் எழுதி இருந்தது. அதை விமலநாதனிடத்தில் காண்பித்தாள். பிறகு சற்று நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அன்று பூராவும் விமலநாதன் பூர்ணமான ஓய்வுடன் இருக்கும்படிக்குக் கூறிவிட்டு, அவ்விடத்தில் மற்றையோரிடமும் விடை பெற்றுக்கொண்டு, வெளியில் சென்றாள். தனது ஆஸ்பத்திரி வேலையை முடித்துக்கொண்டு, மீண்டும் இங்கு வந்து கோபிநாதனுக்கு மருந்து கொடுத்துவிட்டு, பிற்பகல் சங்கத்திற்கு வந்து சேர்ந்தாள்.

அந்தச் சங்கம் வெகு மேன்மையான நோக்கங் கொண்டு பல ஆண்டுகளாக நடைபெறுகின்றதாகையினால் அனேக சீமாட்டிகளும் பெருமாட்டிகளும் விஜயம் செய்திருந்தார்கள். முதலில் கடவுள் வணக்கம் செய்பலானார்கள்.

ஏழை முகம் பாரய்யா! என்ற மெட்டு

கோரிய வரமருள் நாங்கள் வேறு கதி கண்டிலேம் கோ
ஆறுமுகன் சோதரா! எம்மை சீருடன் காத்தருள்வாய் கா.
வள்ளிமணாளா! குகா! எழில் புள்ளிமயில் வாகனா! கா.
நீலமேக ச்யாமளா! பால கோபால கோலாகலா கா
பதுமாஸனி இந்திரே! அருள் சதமாயளித்திடுவாய் கா.
கல்வித் தருவே வாணி! எங்கள் வல்வினை தீர்த்தருள்வாய் கா.
சங்கம் ஓங்கி வாழ்ந்திட என்றும் பொங்கிக் களித்தோங்கிட கா.

என்று மேற்படி பாடலை யாவரும் ஒன்று கூடி பாடி முடித்தபின், 'தெய்வபக்தி' என்ற விஷயத்தைப்பற்றி ஒருமாது உபன்யஸிக்கத் தொடங்கினாள்.

கோயிலுக்குச் சென்றால் சில பெண்கள் கும்பல் கும்பலாக கூட்ட மிட்டுப் பேச்சை அளக்க வாரம்பித்து விடுகிறார்கள். அந்தக் கூட்டங்களை சற்றுக் கவனித்தால் வீண் வம்பும், ஊர் விஷயங்களும், மனஸ்தாப வார்த்தைகளும் நிறைந்திருக்கின்றனவே யன்றி, புத்தி விஷயமாயும், அறிவு வளர்ச்சி சம்பந்தமாயும் பேசும் கூட்டத்தைக் காணவில்லை. இத்தகைய வம்புக் கூட்டத்திற்கு ஏற்றவிடம் கோயில் தான் போலும்.

"சகோதரிகளே! தாய்மார்களே!

எம்பெருமானுடைய லீலா விநோத கோலாகல மகிமையையும், அவருடைய ஒவ்வொரு அற்புத சரிதையையும், செய்கையையும், அவரை அனன்யபாவமாக பக்தி செய்து அன்னவரின் பாதாம்புயத்திற்குப் பாத்திரமாகிய பக்தர்களின் மகத்துவத்தையும் கரைகாணாத கடலைப் போன்றதென்னலாம். அத்தகைய அபாரமான விஷயங்களை கேவலம் ஒன்றுந் தெரியாத பேதையாகிய நான் எடுத்துக் கூறுவதென்பதுவும் பரிகசிக்கத்தக்க விஷயமே. அந்த அளப்பரிய ஆநந்தமூர்த்தியின் வைபவத்தை எடுத்து இயம்ப அருகதை எனக்கில்லை என்பது உண்மையே! எனினும் அத்தகைய உத்தமனின் நாமத்தை நேமத்துடனே, பாமரத்தன்மையுடனே அனவரதமும் அனன்ய பாவமாக பஜித்தால் நம்முடைய பிறவிப்பிணி என்னும் சாகரத்தைத் தாண்டி நித்தியமென்னும் கரையைச் சேர்ந்து எம்பெருமானின் பாத கமலங்களுக்கு இலக்காகலாம் என்கிற ஒரு நோக்கத்தைக்கொண்டு (பெரியாரின் வாக்கைக் கொண்டு) நான் இக் கட்டுரையைப் பற்றிப் பேசலானேன்.

நீலமேக ச்யாமளனும், நிர்மல ஹ்ருதயனும் நித்ய கல்யாணகுண வைபவனும், நிகிலரக்ஷகனும், நீரஜ நேத்திரனும், பூவைசேர் மார்பனும், தேவர் போற்றும் தீனதயாளனும், தனஞ்சயனுக்கு சாரத்தியம் செய்த அன்பனும் விளங்கும் ஸ்ரீ பார்த்த சாரதியின் மகிமை அந்த ஸாரத்யம் செய்துக் காட்டிய ஒரு ரகஸியத்திலிருந்து நன்கு விளங்கவில்லையா! சாதாரணமாக வண்டிக்காரப் பயல் என்று எளனமாக உரையாடும்—தொழிலை—பதத்தை அந்த செய்கையினால் எடுத்துக் காட்டிவிட்டார். அதாவது தன்னிடத்தில் யார் ஒருவர் நம்பிக்கையுடன் பரிபூர்ணமான மனத்துடன் பக்தி செய்கிறார்களோ, அவர்களுக்குத் தான் தாசானுதாசனாக நின்று சேவகத் தொழில்—சாரதித் தொழில்—புரிவேன், என்று

தவமாமுனிவரும் யோகிகளுந்தான் உலகத்தை வெறுக்கின்றார்கள் என்பது வழக்கம். ஆனால் மனமற்ற மணத்தினால் மனமுறுகித் தவிக்கும் ஆணே! பெண்ணே! ஒருவித யோகமும் இன்றி உலகை வெறுத்து, மரணத்திற்குச் சித்தமாக விருக்கின்றார்கள்.

கண்கூடாக விளக்கிக் காட்டி இருக்கிறார். கருணைவாரிதியாகிய பரமன் சாரதி வேலை செய்யும்படியான பாக்கியம் பெற்ற பார்த்தனின் பக்தியைக் கூறவேண்டுமோ! அவ்வாறு பக்தி செய்து முக்தியடைந்த பக்தர்கள் அலகிலாமலிருப்பினும் பார்த்தனின் பாக்யம் ஓர் தனித்த தென்று கூறலாம். கடவுளின் செயலின்றி இக்கடலுலகில் வேறெதுவுமில்லை. அவனால் படைக்கப்பட்ட நாம் அவனடியை என்றும்—எப்பொழுதும்—எக்காலமும் தொழுது பஜித்துவந்தால், நமது துன்பம்அகன்று, இன்பப்பெருக்குடன் இனிதுவாழலாம். நாம் எந்தக்காரியம் செய்யப்புகினும் ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்து அவனடியைச் சிந்தித்து அவன் ஆக்ஞை என நம்பிச் செய்யும் எக்காரியத்திற்கும் பழுது நேராது. பாஞ்சாலி, ராமதாஸ், நந்தனர், மார்க்கண்டேயர், கபீர்தாஸ் முதலிய பக்தர்களின் சரித்திரமே இதற்குச் சான்றாகும். அவர்களைப் போன்ற ஒருமனப்பட்ட பக்தியைச் செய்ய நமக்குத் திறமில்லை எனினும், நம்மால் கூடியமட்டில் கடவுளைச் சதா பஜித்து நாமரூபமாயும், த்யானரூபமாயும், கான ரூபமாயும்; பூஜித்து அவன் பொன்னடி பணிந்து முக்தி யடைவோமாக. நேரமாகிவிட்டபடியால் இம்மட்டோடு என் உபன்யாஸத்தை முடிக்கின்றேன். குற்றம் பொறுத்து மன்னிக்கவும்"—என்று பேசி முடித்தாள். கரகோஷம் தாண்டவ மாடியது. பிறகு மற்றொரு மாது கைத்தொழிலைப் பற்றிப் பேசத் தொடங்கினாள்.

"சகோதரிகளே! தாய்மார்களே!

கைத்தொழில் என்கிற விஷயத்தில் எனக்குத் தெரிந்தவற்றை இங்குரைக்கின்றேன். கைத்தொழில் என்பதில் பலவிதமான பிரிவு வேலைகள் இருக்கின்றன. அவற்றில் நமது பெண் மணிகளின் வகுப்பாருக்கு அத்யாவசியமானவற்றைக் கூறுகிறேன். முற்காலத்திற்கும் இக்காலத்திற்கும் அனேக மாறுதல்களும், திருத்

மன்னர்பிரானின் புதிய வருடப் பிறப்பன்று, ஆப்தமான ஒவ்வொருவரும் சந்தித்து ஆநந்தமாகப் பேசிக்கொள்வதும், இயன்றவளவு பரிசு அளிப்பதும், வாழ்த்துக் கடிதங்கள் வரைந்துகொடுப்பதும், ஒரு தமாஷாகும். இந்த முறையை நம் அருந்தமிழ் மக்கள், தமது புதிய வருடப்பிறப்பாகிய தமிழ் வருடப்பிறப்பன்று கைப்பற்றிச் செய்தால் நன்றாக விருக்கு மன்றோ!

தயவுசெய்து
எல்லோரும் கவனிக்கவும்.

எமது அன்பார்ந்த சந்தாநேயர்களான சகோதர சகோதரிகளுக்கு!

இவ்வாண்டின் இரண்டாவது இதழாகிய ஜனவரி மாதத்துச் சஞ்சிகை பிப்ரவரி மீ" முதல் தேதி அன்றே வழக்கம்போன்று தமது கரமலர்த் தாவி நிற்கும் பாக்கியம் பெருது தாமதப்பட்டுவிட்டதைப் பற்றி வருந்துகின்ரோம். எதிர்பாராத விதமான இடையூறுகள் நேரிட்டு, இரண்டாவது இதழுக்குத் தாமதத்தை உண்டாக்கிவிட்டதால், தாமதப்பட்டும் நீங்கள் ஒரு சஞ்சிகையைப் பெறுவதைவிட, இரண்டு-மூன்று (2—3) ஆகிய இரு இதழ்களேயும் ஒன்ருக வெளியிட்டு "சாமளநாதன்" கதையைப் பூர்த்தி செய்துவிடுவது நலமென்றெண்ணி அவ்வாறு செய்துள்ளோம். பிப்ரவரி மாதத்திய 3-வது இதழ் இப்போது தங்கட்குச் சேர்ந்துவிட்டதால் மார்ச்சு மாதத்திய 4-வது சஞ்சிகை வழக்கம்போன்று அம்மாதக் கடைசித் தேதியில் தமக்கு அனுப்பப்படும். தயவு செய்து இதை யாவரும் கவனிக்கக் கோருகிறோம். இச்சஞ்சிகையில் குறைவுபட்டிருக்கும் சில பக்கங்களே அடுத்த கதையில் அதிகப்படுத்திவிடுகிறோம்.

ஒரு ஆண்டில் ஆரம்பித்த நாவல் அடுத்த ஆண்டில் தொடரின் சந்தா செலுத்துவோருக்கும், நமக்கும் கணக்கு வைப்பது மிகுந்த கஷ்டமாயிருப்பதால், அடுத்த 4-வது இதழில் ஆரம்பிக்கப்படும் புதிய நாவலை இவ்வாண்டின் 12-வது இதழில் எப்படியும் முடித்துவிடத் தீர்மானித்துள்ளோம்.

ஒரு சஞ்சிகை தாமதமாயினும் நாம் இரு சஞ்சிகைகளே அளித்துவிட்டதால் நேயர்களின் கோபம் சாந்தமடைந்து மன்னிப்பார்களென்று மோகினிச் செல்வி எதிர் பார்க்கிருள்.

மானேஜர்.

மதிப்புரை

இராஜபக்தி

ஆசிரியர்:—ஸ்ரீமான் வீ. ஸீ. கோபாலரத்னம்

"லக்ஷ்மீ விலாசம்" மைலாப்பூர். விலை ரூ. 1-0-0

இப்பெயர்கொண்ட தமிழ் நாடகம் ஒன்று நமது பார்வைக்கு வெகு அன்புடன் வரப்பெற்றோம். அப்புத்தகத்தின் முன்னுரையினால் அது முதலில் மஹாராஷ்டிர பாஷையிலும், பிறகு கன்னட பாஷையிலும் இருந்ததாயும் தற்போது மஹாராஷ்டிர பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்ததாயும் தெரிகின்றது. இந்த நாடகத்தின் வசன நடையின் அழகும், பதப் பிரயோகத்தின் அமைப்பும் வெகு மனோகரமாக இருக்கின்றன. நாடகங்களுக்கு முக்கியமாக நவரசங்களும் அடங்கியிருப்பது மிகவும் அவசியம். அவ்விதமாக நவரசங்களும் ஒருங்கே அமையப்பெறுவதை சில நாடகங்களில்தாம் நாம் கண்டுள்ளோம். இந்த இராஜபக்தி என்னும் நாடகம் நவரஸங்களும் ஒருங்கே அமையப்பெற்றுப் படிப்பவர்களுக்கு ஒவ்வொரு ரஸத்தின் பாவமும் மனத்தில் நன்குபடியச் செய்து, அந்தந்த ரஸத்திற்கேற்றதான சுவைகளைப் பூர்ணமாக அளித்து அவர்களைப் பரவசமுறச் செய்கின்றது. சந்திரசேகரன் என்னும் இளவரசனைக் காக்கும்பொருட்டு தன் உதிரத்திலுதித்த புத்திரசிகாமணியையும் பலிகொடுத்து, தன் உயிரையும் தருணமாக எண்ணித் தியாகம் செய்த தேவாங்கனையின் செய்கை மிகவும் போற்றத்தக்கது. விக்ராந்தனின் வீர, சூர பராக்கிரமமும், தன் அரசனுக்காகத் தன் உடல், பொருள், ஆவி போன்ற அருமை மகன், மனைவி, முதலிய யாவையும் இழந்து ராஜபக்தியை நிலைநாட்டச் செய்யும் அதி அற்புதமான செய்கைகளும் படிப்போரை பிரமிக்கவும் பூரிக்கவும் செய்கின்றன. விக்ராந்தனைக் காதலித்தும் சித்தியடையாத மங்களாளினியின் முடிவு மகா துக்ககரமானது. ஸரோஜனி சந்திரசேகரனைப் பாதுகாத்த விதம் மிகவும் வியக்கத்தக்கது.

ராஜ்யத்தைத் தன் வசப்படுத்தும் பொருட்டு மதாலஸை செய்யும் அக்கிரமச் சூழ்ச்சிகள் யாவும் பலனளியாது, 'வினை விதைத்தவன் வினையே அறுப்பான்' என்கிற பழமொழிக்கு ஏற்ப அவளுடைய முடிவு சேர்ந்தது ஒரு படிப்பினையைக் கற்பிக்கின்றது. தேவ தேவாங்கனையின் தியாகத்திற்காகத் தனது ராஜ்யபாரம் அதன் தனயனின் திவ்ய நாமத்தாலேயே நடைபெறவேண்டுமென்று ஏற்பாடு செய்த சந்திரசேகரனின் உத்தமமான நன்றியறிதல் புகழத்தக்கது.

இதைப் படிக்கும் விழிகள் தாமாக மழை பொழியாமலிரா. புத்தகத்தைப் படிப்பதைவிட இந்த நாடகத்தை நேரில் கண்டு ஆநந்திக்கும் காட்சி கூறத்தரமன்று. ஒவ்வொருவரும் இந்த அற்புதமான நாடகத்தைப் படிக்கவும், பார்க்கவும் வேண்டியது அவசியமே. தேசபக்தியும், இராஜபக்தியும் தானுகவே உண்டாகும். இத்தகைய அருமையான நூலை நமது தாய்ப்பாஷையில் மொழிபெயர்த்துத் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஆநந்தமான நல் விருந்தளித்துள்ள இதன் கிரந்தகர்த்தாவுக்கு எல்லோரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆரோக்கிய தீபிகை

ஆசிரியர்:—டாக்டர் யூ. ராமராவ்; யூ. கிருஷ்ணராவ், எம்.பி.பி. எஸ்.

வருஷ சந்தா: உள் நாடு ரூ 1-8-0 வெளி நாடு ரூ 2-0-0. ஆபீஸ்: 323. தம்புசெட்டித்தெரு. சென்னை.

இதன் 8-வது ஆண்டின் முதல் இதழ் வரப்பெற்றோம். இதன் மேலட்டையில் பிரபல சிவஸ் தலமும், ஆரோக்கிய வாசஸ்தலமுமான திருக்கழுக்குன்றத்துக் கோயிலின படம் அமைந்துளளது. மலை மீதுளள ஹிந்து கோயில்களைப் பற்றியும், மலைவாசத்தினுலுண்டாகும் அனுகூலங்களைப் பற்றியும் எழுதியுள்ள வியாசததிலிருநது நமது முனனோர்கள் எவ்வளவோ தூர திருஷ்டியுடன தான மலைமீது கோயிலகளைக் கட்டி அங்கு பக்தர்கள் போக வேண்டுமெனறு ஏறபாடு செயதுள்ளார்கள் என்பது நனகு விளஙகுகினறது. தேக ஆரோக்கியததிற்கு மனததின ஆரோக்கியம அத்தியாவசிய மௌனததைப் பற்றிய வியாசமும், நமது பற்களையும் கணகளையும் பாதுகாககும் முறைகளைப் பற்றிய வியாசஙகளும் ஊனறி படிக்கத் தகுநதன. மாமிச பதார்த்தங்களை விட மரக்கறி பதார்த்தங்கள் தேகத்திற்கு ஆரோக்கியத்தை யுண்டாக்கு மென்றும், பழவர்க்கங்கள் முன்னிரண்டையும் விட மேலானவையென்றும் எழுதியுள்ள வியாசங்களும், ஆரோக்கியக் குறிப்புகளும், ஆரோக்கி யவர்த்தமானங்களும், மற்ற வியாசஙகளும் மிகுந்த ஸ்வாரஸ்யமாக இருககினறன. நமது தேக சுகத்திற்கு வேண்டிய விஷயங்களைத தாஙகி குறைநத சநதாவில வெளிவரும் இம மாதாநதப் பத்திரிகையை எலலோரும் ஆதரிப்பது அவசியம். இது இங்கிலிஷ், தெலுங்கு கன்னட பாஷைகளிலும் வெளியாகின்றது.

"Charulochana"

This is a Tamil novel which contains much food for though.t Charuhasa, a doctor and a heir to a big patrimony falls in love with Jayamani, a jewel of a beauty but born of poor parents The love is reciprocated. However, as fate would have it, Jayamani is married to a sixty year old gentleman who is in a decent position. It is a living death, henceforth, to Jayamani and Charuhasa. They move like spectres through the remaining chapters of the book through the bitter pangs of unrealised love till Jayamani commits suicide and her lover dies of heart failure, hearing the news of her death. Side by side with the main theme runs the story of Chandrahasa and his wife Radhabai. Chandrahasa represents the best in western culture as Radhabai typifies the worst elements in it. She rewards all his love with gross infidelity and disrespect and in the end dies repenting.

The book is written in a style which is at once simple and charming and the moral which the author wants to inculcate is too patent: that true love transcends all other earthly forces and that Love alone should form the bedrock upon which all marriage should be based.

One thing however puzzles me: the conduct of Jayamani's husband in going to the extent of permitting his wife to marry Charuhasa, when he finds out that he has been the root cause of all her unhappiness. The authoress would like to have us take it as representing his nobility of character. I doubt if all who read this book will share her view.

FEDERATED INDIA (3—12—30.)

பரிசுகளின் விவரம்

1931௵ பிப்ரவரி ௴ 12-தேதிக்குள் சந்தா செலுத்தியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

பரிசு ந.	ரூ.	சந்தா ந.
1	15	R. 153. Mr. C. A. Rahim, Klang.
2	10	N 68. Mr. P. R. Naidu, Calicut.
3	5	D. 32. Mr S. Desikachariar, P. T. Madras.
4	5	V. 25. Mr L. Venkatramanier, Erode-

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கு 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

மானேஜர்.

தங்களும், புதிய முறைகளும் உண்டாகி இருப்பது யாவரு மறிந்த கண்கூடான விஷயம். முற்காலத்திய கொள்கைகள் அனேகம் இக்காலத்தில் மாறிவிட்டதென்றே கூறலாம். முற்காலத்தில் ஆடவர் பொருளீட்டுவதும், பெண்டிர் குடித்தனம் நடத்துவதும் பழக்கமாயும் தர்மமாயு மிருந்தது. அக்காலத்தில் வரதக்ஷிணை சீர்வகைகள் முதலிய போராட்டப் பைசாசங்கள் கிடையாது. ஆகையால் பெண்கள் தாய் வீட்டிலிருக்கவேண்டிய காலங் கடந்ததும் புருடன் வீட்டில் வாழ்ந்து இல்லறம் நடத்திவருவார்கள். புருடன் அற்றப் பெண்கள் சிலர் மாமி வீட்டிலும், சிலர் தாய் வீட்டிலும் உழைத்துப் பலவித கஷ்டங்களுக்கு இலக்காகி தவிப்பார்களாம். இக்காலத்திலோ, ஆடவரும் பெண்டிரும் ஒன்றாகப் படிப்பதும் பொருள் ஈட்டுவதுமாக ஆய்விட்டது. புருடனற்ற பெண்கள் பெரும்பாலோர் கல்வி கற்றுத் தமது ஜீவியத்தைச் செய்துகொள்கிறார்கள். தாய் வீட்டிலும் மாமி வீட்டிலும் திக்கற்ற சில பெண்களுக்கு கல்வி கற்க திரவிய மின்மையினாலோ, வயது முதிர்ந்துவிட்டதனாலோ சாத்ய மற்றுப் போய்விடுவதால் பலவிதமான ஹிம்சைக் குள்ளாகி சொந்த மனிதர்களினாலேயே இழிவு பட்டலைந்து இறக்கின்றார்கள். இம்மாதிரியான கோர சம்பவங்கள் நான் நேரில் அனேகம் கண்டு மனமுருகி இருக்கிறேன். பெண்களுக்கு கல்வி அவசியம். அதோடு அத்தகைய பெண்மணிகள் தமது ஜீவியம் தம்மாலேயே நடத்திக்கொள்ளக் கூடிய கைத்தொழில்கள், தையல் வேலை, பிரம்பு முதலியன பின்னுவது, ஜிகினாவினால் படங்கள், ரவிக்கை, பாவாடை, தாவணிகள் தைத்தல், மணியினால் வேலை செய்வது, சித்திரம் எழுதுவது, சங்கீதக் கருவிகள் வாசிப்பது, டைப்ரைட்டிங் அடிப்பது, பூநூல் வேலை செய்வது, சவுக்கங்கள் போடுவது, சர்கா சுற்றுவது, தக்ளியில் நூற்றல் முதலிய பல வேலைகளிருக்கின்றன. அவைகளில் எந்த வேலையைக் கற்றிருப்பினும் அதனால் தமது வாழ்நாள் சுகமே

என்னருமைப் பெற்றோரைக் கனவில் கண்டு களிவெறிகொண்டு மகிழ்ந்தேன். இவ்வாறே தினந்தோறும் என் குல தெய்வங்களாகிய பெற்றோர்கள் கனவிலேனும் காட்சி கொடுத்து வந்தால் போதும். இதையே கடவுளை வேண்டுகிறேன்.

கழியும் என்பது எனது தீர்மானம். அதே மாதிரி ஒரு பெண்மணி தையல் வேலையிலும், இன்னும் மற்ற பிரம்பு வேலையிலும் பொருளீட்டி கஷ்டமின்றி ராஜ போகமாக ஜீவித்து வருவதை நான் கண்கூடாகப் பார்த்து வருகிறேன். அப்படியே சங்கீதக் கருவியினுல் அனேகர் ஜீவிக்கின்றூர்கள். ஆகையினுல் நமது பெண்மணிகளுக்கு கைத்தொழில் வரவேண்டியது மிக அவசியம். நல்ல நிலைமையிலுள்ளவர்களும் தமக்கான வேலைகளைத் தாமே செய்து கொள்ளுதலும் நலமே! வரதக்ஷிணை சீர்வரிசைகளின் கொடுமையினுல் சிறுமைப் பட்டுள்ள பெண்கள் அநேகர் இருப்பதும் பிரத்யக்ஷமே. அத்தகையவர்கள் அவசியமாக இத்தகைய வேலை செய்து தம் காலத்தை தம்மால் கௌரவமாக நடத்திக்கொண்டால் வெகு நலமாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம். பிழைகளிருப்பின் மன்னிக்கவும்" என்று சிந்தாமணியம்மாள் கூறி தன் பிரசங்கத்தை முடித்தாள். (கரகோஷம்) பிறகு தேவநாயகி எனும் பெண்மணி சங்கீதத்தைப் பற்றிப் பேச வாரம்பித்தாள்.

"சகோதரிகளே! தாய்மார்களே!

சங்கீதம் என்பது சாமானியமல்ல. சங்கீதத்தின் மகத்துவத்தைக் கரைகண்டார் யாருமிலர். அது ஒரு தனிக்கடல். சங்கீதத்தினுல் ஆகாத காரியம் உலகத்தில் எதுவுமே இல்லை எனலாம். கேவலம் ஒன்றுமே, உலகமே அறியாத சிசுவும் கூட தொட்டிலில் விட்டு ஆநந்தமாகத் தாலாட்டு பாடினுல் தன்னிரை மறந்து துயில் கொண்டுவிடுகின்றது. மகா தபோநிதியாகிய விசுவாமித்திரரும் மேனகையின் நாட்டியத்தினுலும் சங்கீதத்தினுலும் நிஷ்டை கலைந்து, அதன் வயப்பட்டு ஐக்கியமாகிவிட்டார். ராவணேச்வரன் சாமகானத்தின் பலனுல் சிவபிரானிடத்தில் அபாரமான வரன் பெற்றுவிட்டான். சாமவேதமே ஆதிகீதம். அதனின்றும் சிதறியதே கானமாகும். சங்கீத கானத்தில் பசு பக்ஷி ஜாதிகளும் தம்மை மறந்து ஆநந்தமாகக் கேட்டு மகிழ்கின்றன

வரவும் செலவும் மிகக் குறைவாகவிருப்பினும் கணக்குகள் கேட்டும், பார்த்தும் எழுதும் ஆர்பாட்டம் சிலருக்கு அசாத்யமாக விருக்கிறது. அவர்கள் செய்யும் தடபுடலில் அந்தச் சிறு தொகையிலும் தப்பு ஏற்பட்டு கணக்கு பிசகி விடுகிறது; பிறகு சரிப்படுகிறது.

வெனில் அறிவு படைத்த மனிதர்கள் மகிழ்வதைக் கேட்க வேண்டாம். பகவன்னாமம் நிறைந்துள்ள சங்கீதத்தை சதா பாடுவ தால் நிரதிசய ஆனந்தம் உண்டாகும். பக்தியுடன் பஜனை செய்த பலன் ஈச்வரனுக்கு அர்ப்பணமாகிறது. அதனால் நற்பதவியும் தானே யுண்டாகின்றது. சாக்ஷாத் இராமசந்திரனையே இடைவிடாது பஜித்துப் பாடிய சத்குரு த்யாகராஜ சுவாமிகளின் சரித்திரம் ஒன்றே சங்கீதத்தின் மகிமைக்குப் போதுமானது. இன்னும் அம்மகான் போன்ற எத்தனையோ பெரியார் சங்கீதத்தினாலே பரகதி யடைந்திருக்கின்றார்கள். நாரதாதி முனிவர்களும் சங்கீதத்தினா லேயே பகவானை பஜனை செய்து பூஜித்தார்கள். இத்தகைய அத்புத மான சங்கீதத்தின் மகிமையை அறியாத சில மௌட்யர்கள் வாய் வீணர்கள், அகங்காரங் கொண்ட மூடர்கள் தாறுமாறாக தூஷிப் பது இச் செவியில் படாமலில்லை. சாக்ஷாத் வாணியின் அம்சமான கானத்தை சில மூடர்கள் தாசிகளுக்குத்தான் உரியது எனறும், குலஸ்திரீகள் பாடுவது பெரும் தப்பிதம என்றும் கூறுகின்றார்கள். பகவத் ப்ரார்த்தனை நிறைந்த சங்கீத அம்ருதம் யாவருக்கும் பொது வான தென்பது அறியாத மிருகங்களின் வார்த்தைக்கு எதிர் பேசுவதைவிட பேசாது மவுனம் சாதித்தலே நலம். கடவுளின் ஆணைப்படிக்கு யாவும் நடக்கின்றது. அவன் யார் யாருக்கு என்ன கட்டளை இட்டிருக்கின்றானோ அதன் படிக்குத் தான் யாவும் நடக்கும். தாசிகளுக்கு சங்கீதத் தினால் பிழைக்கும்படி அக் கடவுளின ஆக்கினையாகையினால் அவர்கள் கச்சேரி, ஆடல், பாடல் முதலியவற்றைத் தொழிலாகக் கொண் டிருக்கிறார்கள். இதனால் அத்தகைய சங்கீதத்தை அவர்களுக்குத் தான் உரியது என்று கூறிவிடுவது கூடுமா! அரிசியை எல்லாரும் சமைத்துச் சமமாக சாப்பிடவில்லையா! அது ஒரு வகுப்பாருக்குத் தான் என்கிற நிபந்தனை உண்டா! அதேபோல சங்கீதமும பொது வாக; தொழிலுக்குத் தொழிலாயும், ஆனந்தத்திற்கு ஆனந்தமாயும், பக்திக்கு பக்தியாயும், சகலத்திற்கும் உன்னதமாயும் விளங்கு

கோபத்தின் முதிர்ச்சியினால் பிறர் மீது சிறி விழுந்து திட்டிவிடுவதும் பிறகு, 'உங்கள்மீது குற்றமே இல்லை; தீவினை அவ்வாறு நடத்துகின்றது' என்கிறார்கள் சிலர்.

210029

கின்றது. இத்தகைய அருமையான சங்கீதத்தைப் பற்றி தூஷிப்பவர்களோ, குற்றமாகப் பேசுபவர்களோ மிருக ஜாதியினரே யன்றி மனித வகையில் சேர்ப்பதற்கும் யோக்யதை இல்லை. ஒருவர் நன்ருகப் பாடுகிருர்கள் என்ருல் அதைப்பற்றி அளப்பரிய வம்பும் தூஷணையும் பொருமைப் பிசாசுகள் கிளப்பி விடுவது கொஞ்சமன்று. வம்புக்காரப் பாவிகளுக்கு சங்கீதம் பயந்ததல்ல. அது கடவுளின் பாத சேவையை மேற்கொண்டது. ஆத்ம திருப்தியை யுடையது. ஆகையினுல் சங்கீதத்தை எல்லோரும் கட்டாயமாகக் கற்றுக்கொள்ளவேண்டுமென்பதே என் கோரிக்கை. சகல விதத்திற்கும் நல்ல துணையாகிய சங்கீதத்தை—வாணியின் ப்ரசாதத்தை—யாவரும் கடமையுடன் கற்றுப் பயன் அடைய வேண்டுகிறேன். பிழைகளிருப்பின் மன்னிக்கவும்,'' என்று முடித்தாள். (கரகோஷம்) பிறகு சூடாமணி என்கிற பெண்மணி எழுந்து, 'பாலிய விதவைகளின் பரிதாபம்' என்ற விஷயத்தைப் பற்றிப் பேசத்தொடங்கினுள்.

"சகோதரிகளே! தாய்மார்களே! பெரியோர்களே! தலைமை வகித்துள்ள ஸ்ரீமதி அம்மாள் அவர்களுக்கும் மற்ற யாவருக்கும் எனது வணக்கமான வந்தனத்தைச் செலுத்தி நான் எடுத்துக் கொண்ட விஷயத்தைத் தொடங்குகின்றேன். இப்பொழுது இங்குள்ளவர்களுக்கும் தலைவியவர்களுக்கும் நான் கூறப்புகும் விஷயத்தைப்பற்றி வியப்பாக விருக்கலாம். அவ்வளவேன்? எனக்கே ஆச்சரியமாக விருக்கின்றது. எந்த விஷயத்தையும் மேல்போக்காகப் பேசிவிடலாம். அவ்விஷயங்களின் சாதக பாதக மறியாமலேயே, இரண்டில் ஒன்றைக் கண்டிதமாகப் பேசிவிடலாம். அவ்வாறு பேசி விடினும் பிறகு அந்தந்த விஷயங்களில் பழகி அனுபவித்தால்தான் அதன் உண்மையை அறிய நேரும். அனுபவிப்பதற்குமுன் எதிர் மறையாகப் பேசி யிருப்பினும் பிறகு அந்த எண்ணம் தானுகவே மாறுதலை யடைந்துவிடுவது சகஜம். விதவா விவாகத்தைப் பற்றி

அனேக ப்ரயத்தனங்கள் செய்து ஒரு காரியத்தைச் சாதிக்க நினைத்துச் சாதித்தாலும் அது சில சமயத்தில் சீர் பெறுவதே இல்லை. திடீரென்று செய்துவிடும் காரியங்கள் சில சமயத்தில் வெகு த்ருப்திகரமாக முடிவு பெற்று விடுகின்றன.

சிறிது வித்யாசமாக எண்ணிய என் மனத்திற்கே தற்போது அவ்வாறு எண்ணியது பிசகு என்று என்வரையில் தோன்றுகின்றது. அது விஷயத்தில் மிகவும் மாறுதலையடைந்து இளகி உருகிவிட்டது. ஒவ்வொருவருடைய மனம் ஒவ்வொருமாதிரியானது. எந்தக் காரியத்தையும் யாரும் கட்டாயமாகச் செய்யவேண்டுமென்றும், செய்வது என்றும், ஒருபோதும் கிடையாது. அவரவர்களின் மனப்படிக்கு இஷ்டமிருக்கின்றவர்கள் இவ் விதவா விவாக இயக்கத்தை நடத்தலாம். இதில் கட்டாயமில்லை, என்று என் மனம் எனக்குக் கூறுகின்றது. இம்மாறுதலுக்குக் காரணம், அந்தோ! பாலிய விதவைகளின பரிதாபத்தை நேரில கண்டு மனம் உருகியதே யாகும். சாதாரணமாக சிறு குழந்தைகளில விவாகத்தைச் செய்து விடுவதும், அந்த மணமகன இறபபதும, உலகமறியாத குழந்தைகளை ஆயுள் வரையில் அவதிக்குளளாக்கிவிடுவதும், அதனால் பல துன்பங்களுக்கு இலக்காகி அனுயிசுமரணமாக உயிர்துறப்பதுமான கோர சம்பவங்கள் கண்ணில் படுவதும், காதில் கேட்பதும் அப்பப்பா! கூறத்தரமன்று. அனியாயமாக, அத்தகைய பாலிய விதவைகளை மனோ உறுதியற்று கண்ட விதம் கெட்டு அலையவிட்டு ஹத்திகள் பல செய்து பாழாகவிடாது மன உறுதியற்ற நங்கைகளுக்கு தம் பெற்றோரோ, மற்றோரோ முனைந்து மறுமணம் செய்துவிட்டால் ஒருவனுடன் கூடி ஒழுங்கானமுறையில் சந்தோஷமாக அப்பெண்களின் காலம் செல்லலாம். சாதாரணமாக தாய் தந்தையர்களும், மற்ற பந்துவர்க்கங்களும் இருக்கும் பாலிய விதவைகளின் கதியும் சிலவிடத்தில் மிகவும் கேவலமாயும், பரிகசிக்கத்தக்க விதமாயும், உயிர்நீத்துக் கொள்ளக்கூடிய விதமாயும், இன்னும் எத்தனையோ ஆசாபாசமாகவும் இருப்பது கண்கூடான விஷயம். அத்தகைய காவலிலுள்ளவர்கள் கதியே அதோ கதி என்றால் கேவலம் மனிதரற்ற அனாதையாகிய பெண்கள், இப்பரந்த உலகில் எத்தனையோ பெயர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய வாழ்நாளில் வரும் விபத்துக்களுக்கு

நமக்கு நிகர் சங்கீதம் பாடுகின்றவர்கள் கிடையாதென்று நினைத்துள்ளவர்களும் அன்னியர் பாடுவதைக் கேட்டு தன்னையும் அறியாமல் தலை யசைத்து ஆநந்தித்து விடுகிறார்கள். எந்த வித்தையையும் ஒருவரே பூர்ணமாகக் கற்று விட்டவர்கள் உலகத்தி லில்லை.

எல்லையே இல்லை. காப்பாளிகள் என்ற பட்டதாரிகள் இல்லை என்கிற ஒரு தைரியத்தினால்,' அனேக துஷ்டர்கள், வேண்டுமென்றே தீங்கிழைக்க முற்பட்டு, அப் பெண்ணை அல்லலுக்கு இலக்காக்கி விடுவதற்குத் தயாராக விருக்கிறார்கள்.

ஆண்பாலரிலும் பெண்பாலரிலும் தம்மைத் தாம் அடக்கிக் காத்துக்கொள்ளும் தெய்வத்தன்மை பொருந்திய சக்தி வாய்ப்பது வெகு துர்லப மென்பதே எனது அபிப்பிராயம். வாய்ப் பேச்சளவில் எல்லாம் சொல்லிவிடலாம். நான் ஜிதேந்திரியத்வம் வகிக்கின்றேன்; என் மனம் துளைக்கமுடியாத இரும்பு, என்ற வேதாந்தம் போதனைக்கு வெகு எளிது தான். ஆனால் அத்தகையோர் உலகில் இல்லை என்று நான் கூறவில்லை. அந்த வகுப்பினர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்ததாகவே இருக்கும். லக்ஷத்தில் ஒருவர் அவ்வாறு சுக முனிவர் போன்று எந்த விஷயத்திலும் பற்றற்று, உணர்ச்சியற்றுக் கிடைப்பது இக் கலியில் மிகவும் துர்லபம்.

'தண்ணறும் பொழிலிடைத் தனித்துச் சென்ற அந்
நுண்ணிடை மடந்தையின் உருவம் நோக்கலும்
உண்ணினைவு அகன்றனன் உயர் தவத்தினன்
பெண்வலை யகப்படாப் பெரியர் யாவரே!' என்றபடி

மகா மகா யோகிகள் எல்லாம் தவம் குலைந்து பாழாகி இருக்கையில் கேவலம் நாம் எம்மட்டும். பருவகாலமும், ஆசை, மோகம், காதல், அன்பு, முதலியவைகளும் அந்தந்தக் காலததில தமது வீரியத்தைக் காட்டா தொழியா. மகா மேதாவியாயும், பாண்டித்தியம் பொருந்திய புனிதவதியாயும், யோகிகளுக்குச் சமமான யோக்யதை யுடைய ஸ்திரீரத்தினமாகிய மணிமேகலையை அந்தப் பருவ காலத்தின் சேஷ்டை, பாதிக்காமல விட்டதா! அவ்வாறிருக்க மற்ற யோரைக் கேட்கவேண்டுமோ! நான் இவ்விதம் கூறுவதால் கட்டாயப் படுத்துவதாகவும் நீங்கள் நினைக்கலாகாது. இஷ்ட

நடவாத காரியத்தை நடந்ததாகச் சிலர் நினைத்து அதையே நம்பி இருப்பினும் அது உண்மையானதல்ல வென்பதை அவர்களே பிறகு ஒரு காலத்தில் அறியும் நாள் வரும்.

மில்லாதவர்களை பலாத்காரம் செய்தலும்வேண்டாம்; இஷ்டப் படுகிறவர்களுக்கு விவாகம் செய்யாதிருக்கவும் வேண்டாம். அனேகர் மேல்வேஷத்தினல் மார்தட்டிப் பேசுகின்றார்களே யன்றி அவர்கள் வீட்டிலிருக்கும் பாலிய விதவைகளின் பரிதாபகரமான நிலைமையைக் கூறச் சாத்தியமன்று. அவர் களுடைய மன உறுதியற்றத் தன்மையினல் பலவித ஆசாபாசத் திற்கு இலக்காகி நகைப்பிற்கிடமாகி அலையவிடாது விவாகம்செய்து விடுவது நலம் என்றுத் தோன்றியதால் கூறினேன். இதைப்பற்றிப் பலர் ஆக்ஷேபிக்கலாம். ஒரு காலத்தில் நானும் ஆக்ஷேபித்தவள் தான். காலம் மாறுபட்ட நிலைமையினுலும், பாலிய விதவைகளின் பரிதாபத்தைப் பலவிடங்களில் கண்டு தாங்கமாட்டாத விசனத்தி லாழ்ந்து மனந் தவித்ததாலும், கெட்ட காரியத்திலும் ஆராய்ந்து அதிலுள்ள தீமைகளை உத்தேசித்து அதற்குள்ள நன்மையைச்செய் தல் நலமாகும் என்று இந்த விஷயத்தைக்குறித்துத் துணிந்துகூற முன்வந்தேன். உலகமே இன்னதென்று அறியாத குழந்தைக ளுக்கு "நீ விதவை; இனி நீ இவ்விதம்தானிருக்கவேண்டும், உனக்கு மங்களகரமான எந்தச் செய்கைகளும் இல்லை," என்று கூறி ஞல் அந்தப் பாலகி என்ன செய்யும். அதற்கு விவேகம் தெரிந்து தன்னிலைமையைத் தான் உணரும் வரையில் சாதாரணமான மஞ்சள், புஷ்பம், அணி, ஆடை, அலங்காரம் முதலியவைகளில் ஆசைபற்று வைராக்யம் பிறக்குமா! அதன் மனம் என்ன தத்தளிக்கும். அதோடு உள்ள மற்றயோர்கள் சுபகரமாக இருப்பதைக் கண்ட அந்தக் குழந்தையின் மனம் எங் காது! அக்குழந்தைக்கு விவாகம் இன்னதென்றும், தனக் குக் கணவன் இருந்தான், இறந்தான் என்றும், எதற்காக விவாகம் ஆயிற்று, இப்போது எதற்காக இவ்வித நிலை வந்துற்றது முதலிய பகுத்தறிவு தெரியுமா! தலைவிதி என்பது ஒரு நியாயமான

தனது வயிற்றில் பிறந்த மக்களிடத்திலும் மதிப்பற்று, இழிவான வசை யைப் பொறுமையுடன் வாங்கிக்கொள்ள எவரும் முன்வர மாட்டார்கள். ஆனல் கெட்டுப்போன விபசாரியும், வேசிக் கள்ளனும் தன் கள்ளக் காதலனிடத் திலும் காதலியினிடத்திலும் வாயினலும் கூறத் தகாத வசைகளை அர்ச்சனை போல பெற்றுக்கொண்டு வந்தவிடுகிருர்கள்.

வார்த்தை! 'தலைவிதி! தலைவிதி!' என்று கூறிக்கொண்டு பாழாகிவிடச் செய்வதைவிட அவர்களின் தலைவிதிதான் இவ்விதம் செய்விக்கின்றது என்று எண்ணி எல்லோரும் தெரிந்து அவர்களுக்கு தக்க வழி செய்வதுதான் உசிதம். விதவா விவாகத்திற்கு இஷ்டப்பட்டவர்கள் செய்யலாம்; படாதவர்கள் விலகி நிற்கலாம். விவாகம் செய்து கொண்ட தம்பதிகளேனும் ஒற்று மனமகிழ்வார்கள். "மறு விவாகம் செய்துகொண்டால் அவன் இறக்கமாட்டானு! அவனும் இறந்து விட்டால் மூன்றுவது விவாகம் செய்துவிடுவதா!" என்று சிலர் கேட்கலாம். தலைவிதி என்பது எல்லாவற்றிற்கும் ஒன்றுதான். ஏதோ கூடியவரையில் சந்தோஷமாக இருப்பதற்கான வழியை அந்தப் பெண்கள் புத்தி யறிந்து இஷ்டப் படுங்காலையில் செய்யலாம். அதிலும் தவறுதல் நேருமாயின் அப்போது அந்தப் பெண்களுக்குத் தன்னிலையை முற்றும் தெரிந்து கொண்டு வாழ்க்கையை வெறுக்கவும், தலைவிதியை நினைத்து மனந் தேறவும், உலகம் இவ்வளவு தான் என்று தெரிந்துகொண்டு மனத்தில் வைராக்யம் கொண்டு ப்ரபஞ்ச சுகத்தை விரும்பாது புறக்கணிக்கவும், தன்னைத் தான் விரக்தியின் மேலீட்டால் அடக்கியாளவும் கூடிய பரிபக்குவ ஞானம் அவர்கள் மனத்தில் உதயமாகிவிடும். இதுவும் கண்டறிந்ததே யாகும். அதன் பிறகு அவர்கள் இச்சையும் கொண்டு கெட்டு அலைய நேராது. சிறு பிராயத்தில் விதவையாகிய ஒரு பெண்மணி தனது அறிவு தெரியும் வரையில் விளையாட்டாக காலத்தைக் கழித்தாள். பாலியத்திலேயே தாய் தந்தையரிருவரும் உயிர் துறந்தார்கள். உடன் பிறந்தவனின் ஆதீனத்தில் இருந்த அப் பெண்மணி தனக்குரிய பருவத்தை படைந்ததும் விசனம் தெரிந்து சதா புலம்ப வாரம்பித்தனள். அப் பெண்மணி புஷ்ப மணிந்து, சற்று அலங்காரப்ரியமாக இருப்பதைக்

விவாகப் பத்திரிகையை உறவினர், சினேகிதர், முதலிய எல்லோருக்கும் சமமாக அனுப்பினுல் சில அற்பர்கள் 'நம்மிடமிருந்து பகுமானத்தை முன்னிட்டு கடிதம் வந்திருக்கிறது' என்கிறுர்கள். இவ் வார்த்தைக்குப் பயந்து அனுப்பாவிடிலோ 'நாங்கள் லக்ஷ்யமாகத் தோன்றுமையால் கடித மனுப்பவில்லை' என்கிற வசைச் சொல் கிளம்புகின்றது. இந்தத் தரும சங்கடத்திற்கு என்ன செய்வது!

கண்டு, சிலர் அதை ஏசிப் பேசத் தொடங்கிவிட்டார்கள். அப் பெண் மனோ வியாதியினால் மெலிய வாரம்பித்ததை யறிந்த உடன் பிறந்தான் முதலிய யாவரும் யோசித்து அவள் இஷ்டப்பட்டவனை—அவனை மணக்க விரும்பியவனை—அழைத்து விவாகம் செய்து கொடுத்தார்கள். தற்போது அவள் சுகமாக இருக்கிறாள். அவளுக்கு விவாகம் செய்யாவிடின் அவள் கதி யாதாயிருக்குமோ! துர் மரணமே நேருமோ! அன்றி கெட்டுப் பாழாகி விடுவாளோ! கண்டபடி வ்யவஸ்தை இன்றி நாசமுற்றலைந்து ஓடி விடுவாளோ! அத்தகைய பெருங் கேட்டைத் தரும் சம்பவங்கள் எதுவும் நேரா வண்ணம் இப்போது காப்பாற்றப்பட்டாள் என்றே நான் கூறுவேன். சகோதரிகளே! நான் விஷயத்தைச் சுருக்கக் கூறுவதற்கு எண்ணி முன்வந்தும் என்னை யறியாது விரிவாகிவிட்டது. நெடுநேரமாக என் பேச்சைக் கேட்டு நீங்கள் வெறுக்கலாம். இவ்விஷயமாக இன்னும் பேசுவதற்கு அனேக விஷயங்கள் அளவற்றுக் கிடக்கின்றன. நான் முன்பு சில சமயங்களில் அவைகளையும் கூறியுள்ளேன். ஆகையினால் இப்போது கூறவில்லை. என்னுடைய கருத்தாவது; பாலிய விதவா விவாகத்தைப் பற்றி கண்டிப்பாக ஆக்ஷேபித்து வம்பும் பேசவேண்டாம்; கட்டாயமாக செய்துகொள்ளும்படி வற்புறுத்தவும் வேண்டாம். இஷ்டப்பட்டவர்கள், கேவலம் இளமையிலேயே தன்னறிவு தனக்குத் தெரியாத முன்னரே விதவையாகிய யாரும் விவாகம் செய்துகொள்ளலாம்.

புருஷனுடன் ஒரு தினமேனும் சம்மந்தப்பட்டவர்கள் விவாகம் செய்துகொள்வதை வேண்டுமானால் ஆக்ஷேப சமாதானம் செய்து கொள்ளலாம். அதற்கு முடிவும் தீர்மானமும் கூற நான் முன்வரவில்லை. சுத்தமான கன்னிகைகளின் மறு விவாக விஷயத்தைப் பற்றிய எனது அபிப்பிராயத்தைக் கூறினேன். இதில் அனேக குற்றங்களி மிருக்கலாம். எல்லோரும் தீர்க்கமாக யோசிக்கு

நான்கு குழந்தைகள் ஒன்றாகச் சேர்ந்து விளையாடும் போது அவைகள் பேசிக்கொள்ளும் மாதிரியும் பாடும் அழகும் பார்க்கப் பரமானந்தமாக இருக்கிறது. குழந்தைகளின் கூட்டத்திலேயே தெய்வாம்சமும் பொருந்தி இருக்கிறது.

மிடத்தில் நியாயமற்ற விஷயத்திலும் உள்ள பேதா பேதங்களை கவனித்து ஆராய்ந்து பார்த்து அதற்குள் இருக்கும் நன்மையை எடுத்துக்கொள்வது நலம். ஆகையால் எனது அநுபவத்தில் நான் பலவிதமான விஷயங்களையும், சம்பவங்களையும் நேரிலும் கேள்வி மூலமாயும் அறிந்த வரையில் மேற்படி தீர்மானமே நலமெனத் தோன்றியதால் துணிந்து கூறினேன். குற்ற மிருப்பின் எல்லோரும் மன்னிக்கும்படி மீண்டும் தாழ்மையோடு வேண்டுகிறேன். இதனுடன் எனது உபன்யாசத்தை முடித்துக்கொள்ளுகிறேன்" என்று கூறினள். பலத்த கரகோஷம் உண்டாயிது. பிறகு நன்முக சங்கீதம் பாடக் கூடிய பெண்மணி பாடத் தொடங்கினள்.

ராகம் அடாணு—தாளம் ரூபகம்.

பல்லவி.

மன்னிஞ்சி ப்ரோவுமையா மரகதாங்கா! நாது
லெக்கலேனி தப்புலன்னி சக்கதனமுதோ ஜூசி ம.

அனுபல்லவி.

கன்னதல்லி தன்றியன்ன கனிகாமுன பாந்தவுலு
அன்னியு நீவேயனி நெர நம்மியுன்னானு க்ருஷ்ணா! ம.

சரணம்

ஜன்மிஞ்சின நாடிமொதலு சதிருக்மிணீ ரமண நீது,
ஜலஜதள பாத முலனு சந்ததமு பட்டினானு
மன்மதரூபுடைன ஸ்ரீ மங்கள கோதா நாயகா!
மதிலேக நேஜேஸின பாப க்ருத்யமன்னியுமரசி வேக ம.

தன்யாசி ராகம்....த்ருபுடை தாளம்

பல்லவி.

ப்ருந்தாரண்யவாஸா! ச்ருங்காரமனோல்லாசா!
ஸ்ரீபார்த்தஸாரதே! ப்.

ஒருவரோடொருவர் வெகு நாட்களாகப் பேசாமலிருந்தவர்கள் முக்யமான அந்தஸ்துடைய பெரிய விடத்தில் சந்தித்த காலத்தில் பேசாமலிருந்தப் பேர் வழி தானுக வலுவில் பேசவந்து இருவரும் நேசமாய் விடுகிறார்கள். இடத்தின் மதிப்பினால் உண்டாகிய கவுரவமோ என்னவோ!

அனுபல்லவி.

க்ரந்தமுனகு நீவே! காவ்யமுனகு நீவே!
அந்தமைன லோக மந்தகு நீவே ப.

சரணம்.

கொண்டலெத்திபகு விந்தலு ஜேஸிதி
சண்டமாருதுடைன அசுருனிசம்பிதிவி
மண்டலேச்வருடனி மமததோ னுண்டின
துண்டகௌரவகாலா! சுகுணகோதா நாயகா! ப.

என்ற இரு கீர்த்தனங்களையும் வெகு இனிமையாகப்பாடி எல்லாரையும் மகிழச்செய்தனள். அதன்பிறகு நமது சுலோசனுவைப் பேசும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். ஏற்கெனவே நமது சுலோசனு அன்று மனம் சரியாக இல்லாமல் தத்தளித்துக்கொண்டிருந்த சமயம், இங்கு விதவா விவாக விஷயத்தைப்பற்றிப் பேசியதைக் கேட்டு மனம் மிக்க வருத்தத்தையடைந்துகுழம்பிப்போய்விட்டாள். இங்கு தான் முக்கியமாக பேசித்தீரவேண்டுமென்று கட்டாயப்படுத்தவதால் ஏதோ ஒரு சிறு விஷயத்தைப் பேசிவிடுவதென்று நிர்மானித்துப் பேசத்தொடங்கினள்.

"அறிவில் சிறந்த பெரியோர்களே! தாய்மார்களே! வயதிலும் அறிவிலும் கேவலம் சிறியவளாகிய என்னை பொருட்டாக மதித்து இச்சங்கத்தினர் பேசும்படியாகக் கேட்டுக்கொண்டதால் எனக்குத் தெரிந்தவரையில் "மரியாதை" என்ற விஷயத்தைப் பற்றிப் பேச நினைக்கிறேன். மரியாதை என்பது ஒவ்வொரு விஷயத்திலும், ஒவ்வொரு மனிதரிடத்திலும் முக்யமாய் ஒவ்வொரு பொது வர்த்தமானங்களிலும் அத்யாவசியமானது. சகலத்திற்கும் மரியாதைக் கெட்டுவிடுமாயின் அந்தக் காரியமே கெட்டு வீணே ஒழியும் என்பது யாவருமறிந்த விஷயம். எத்தகைய அன்யோன்யமான சிநேகிதர்களாயினும், தாயும் மகனுமாயினும் மரியாதை

அனேக சீமாட்டிகளும், அரச பெருமாட்டிகளும் ஒருங்குகூடி விருந்து நடத்துவது காண்பதற்கு அதியத்புதமாயும் ஆநந்தமாயு மிருக்கிறது. அங்குள்ள அலங்காரங்களின் வைபவமோ 'தேவலோகமோ! என்று ப்ரமிக்கத்தக்கதாக இருக்கிறது. திருமகளின் திருவிளையாடலே இவை யாவும்.

தப்பி ஒரு பேச்சு பேசிவிட்டால் அது வெகு விபரீதமாகிவிடுவது நாம் நமது தினசரி அனுபவத்தில் கண்கூடாகக் கண்டதாகும். யாரும் அனுவசியமாயும் மரியாதைத் தப்பியும் பேசுவதோ, செய்வதோ நேரில் பொறுத்துக்கொள்வது கடினமேதான். மரியாதை கோடுத்து மரியாதை வாங்குவது என்பது ஒரு அனுபவமொழி. ஸ்திரீகளுக்காகட்டும், ஆடவருக்காகட்டும் மரியாதையே முதலில் அவசியமாக வேண்டியது. பொதுச் சங்கங்கள், சபைகள், விவாக விடுகள், பெரிய குடும்பங்கள் முதலிய இடங்களில் மரியாதை கெட்டு ஒரு வார்த்தைப் பிறக்குமாயின் அந்தவிடத்தின் மதிப்பு அத்தக்ஷணமே அழிந்துவிடுகின்றது. மரியாதையுடன் நடக்கும் எக்காரியமும் வெகு ஒழுங்குபட்டு மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டு செல்கின்றது. இதற்கு இந்த சங்கத்தையே நாம் அத்தாட்சியாக எடுத்துக்கொள்ளலாம். இச்சங்கம் ஆரம்பிக்கப் பட்டு அனேக வருடங்களாவது எல்லோரும் அறிந்த விஷயமாகும். இத்தனை ஆண்டுகளாக நீடித்துத் தக்க கீர்த்தியுடன் செழித்து விருத்தியாவதற்கு இச்சங்கத்தின் மரியாதையே முதல் காரணம். ஸ்திரீகளுக்கென்று நியமிக்கப்பட்டுள்ள இச் சங்கத்தில், அனுவசியமாக ஆடவர்கள் ப்ரவேசித்து அவசியமற்ற வார்த்தைகளைமரியாதை யற்றுக் கூறும்படியாக விட்டுவிடாது இச்சங்கத்தின் முக்கிய அங்கத்தினர்கள் கவனித்து நடத்துவதால் இதன் புகழ் வளர்பிறை மதியம் போல் ஓங்குகின்றது. சில சங்கத்தில் ஸ்திரீகளின் கூட்டத்தில் ஆடவர் வருவதே பிசகு. அதிலும் அவர்கள் மரியாதையின்றி துச்சமாகப்பேசுவது சகிக்கக்கூடாத அவமானத்தையும் இழுக்கையும் அச்சங்கத்திற்கும் அதன் அங்கத்தினர்களுக்கும் உண்டாக்கிவிடுகின்றது. இது கண்டறிந்த அனுபவமானதேயாகும். எந்தவிடத்திற்கும் எந்த மனிதர்களுக்கும் முதலில் மரியாதையைச் சரியாக கவனிக்கவேண்டுவது அத்யாவச்யம். வாருங்கள் என்பதற்கும் வா என்பதற்கும், எத்தனை வித்யாசம். இரண்டும் ஒரே அர்த்தத்தைக்

அரச சமஸ்தானத்தின் வைபவமே ஒரு தனித்தது "கடவுளும் காவலனும் ஒன்று" என்னும் பழமொழிப்படி அவ்விடத்தின் மகிமை தெய்வாம்சம் பொருந்தியதாகவே இருக்கிறது. அதற்கு நிதர்சனமாய் லக்ஷ்மியின் கடாக்ஷம் தாண்டவமாடுகின்றது.

கொடுப்பினும் மரியாதையற்று உபயோகிப்பதால் அனேக தீமைகள் உடனே விளையும். குழந்தைகள்முதல் நாம் முதலில் மரியாதையாக நடந்துகொள்வதற்குப் பழக்கவேண்டும். அதுவே நற்குணத்திற்கு அஸ்திவாரம் போட்டதுபோலாகும் என்பதே என் தீர்மானம். மரியாதை என்பது பதப்பிரயோகத்திற்குமட்டு மல்ல. நாம் உச்சரிக்கும் ஒவ்வொரு பதத்திற்கும் ஓசையைக்குறித்தே மரியாதை நிற்கிறது. நாம் பேசும்போது உண்டாகும் சப்தத்திலிருந்தே ஒவ்வொருவித அர்த்தங்கள் உண்டாகும்; நன்மையும், தீமையும், அன்பும், பொறுமையும்; மடமையும், மண்டைத்திமிரும், ஆகிய யாவும் சப்தத்திலிருக்கிறது; பிறகு பதத்திலிருக்கிறது; ஆகையினுல் எல்லா விஷயத்திற்கும் மரியாதையே முதல் படிக்கட்டு. மரியாதையுடன் நடக்கும் எந்தக்காரியத்திற்கும் அழிவில்லை; மங்களகரம் தானுக ஏற்படும். நேரமாய்விட்டது; இதைப்பற்றி பேசிக்கொண்டே போனுல் முடிவென்பதே இல்லை. நம்மால் கூடியவரையில் மரியாதையிலிருந்து பிறழாது நடக்க முயலவேண்டும். மரியாதைபற்றுப்பேசிவிடுவதோ, செய்கையில் காட்டிவிடுவதோ முதலியன நடந்தபிறகு வருந்தியும், மன்னிப்புக்கேட்பதும் சிலருடைய செய்கையாக இருக்கிறது. அதனுல் என்ன உபயோகம்? கூடுமானவரையில் நம்மால் மரியாதைத் தப்பி நடக்காமலிருக்கவேண்டுவதே கடமை. அந்த கடமை குறையாமலிருக்கும் எவருக்கும் உத்தமகுணம்தானே உண்டாகும்; உயரிய பதவி கிடைக்கும். எல்லோராலும் நன்கு மதிக்கப்பெறுவார்கள். எடுத்த காரியம் இனிது நிறைவேறும். மரியாதையுடன் இச்சங்கம் பல்லாண்டு வாழவேணுமாய் கடவுளை வேண்டிக்கொள்ளுகிறேன். இதோடு நான் ப்ரசங்கத்தை முடித்துக்கொள்கிறேன். குற்றமிருப்பின் மன்னிக்கவும்'' என்று வீணாநாதம்போன்ற குரலொலியால் பேசி முடித்தாள். (கரகோஷம்) சுலோசனுவை ஒரு

''பால் பொங்கிற்று!'' என்று சங்கராந்தி யன்று எல்லோரும் கேட்பது ஒரு வழக்கம். அதே பாடலை நமது மோகினிச் செல்வியும் கேட்கிறுள். கடவுளையும் வேண்டுகின்றுள். எல்லோருடைய மனமும் ஆநந்த மயமாகப் பொங்கவேண்டும். அதன் பயனுக எல்லா நேயர்களும் மோகினியை ஆதரிக்க முன்வரவேண்டும்.

பாட்டுப் பாடும்படியாக எல்லோரும் கேட்டுக்கொண்டதன்பேரில் அவள் பாடத்தொடங்கினுள்.

சஹாநு—ரூபகம்

பல்லவி.

மொரவினலேதா நீரஜாக்ஷ காத (மொ)

அனுபல்லவி.

மாவக இதி சமயமவுனு! பிருதஜேஸே வேளகாத
கருணசமுத்ரா மனஸு கரிகிவேக ப்ரோவராரா (மொ)

சரணம்.

புவனபிதாயனிபேரு கலிகினபுருஷோத்தமா
பவமு தீர்சி ப்ரோவநின்னு விடசிப்ராதகுன்னதா பலுகு
தவமுனுலஹ்ருதயமுனுண்டே! சாச கோதா நாயகா!
நவரத்னக்ரீடதாா! நாமொரவினி வேக ராரா (மொ)

என்ற கீர்த்தனத்தை வெகு இனிமையாகப்பாடினுள். பிறகு சங்கத்தின் பொதுவிஷயமான ப்ரசங்கம் நடந்தது. அதன்மேல் எல்லோருமாக மங்களம் பாடத்தொடங்கினர்கள்.

(இந்துஸ்தான் மெட்டு.)

தேவதேவ பாஹி நாதா! காவும் அம்புய பொற்பாதா!
ஆவலாக வேண்டி நின்றேம் சேவடியை தந்தருள்வாய்!
மூவுலகத்திற்கு முதல்வா! மூவடியளந்த மாதவா!
தேவர்போற்றும் தீனபந்தோ! பவநாச தயாஸிந்தோ!
அன்பருள்ளத் தூயநேயா! துன்பம் நீக்கிடும் சகாயா!
எங்கள் சங்கம் ஓங்கி வாழ தங்கும் கீர்த்தி என்றும் சூழ
எங்கும் ஓங்கி வாழும் கண்யா! மங்கை மானம் காத்த புண்யா
மங்களஸ்வரூபதேவா! மங்கள மளிக்க வா வா (தே

யாவரும் தேக சுகத்துடன் இருந்தால் சந்தோஷம். ஏதேனும் அசுகம் சேர்ந்துவிட்ட காலையிலோ மனம் தவிக்கும் தவிப்பைக் கூறச் சாத்தியமன்று. வைத்தியரைத் தேடி யலைவதும், கோயிலை நாடி யோடுவதும், சுவாமிகளை வேண்டுவதும் தடபுடலாகிவிடுகின்றது. கருணையங்கடலாகிய இராமனின் கிருபை இருக்கும் வரையில் பயமே இல்லை.

என்ற மங்களத்தைப் பாடிமுடித்ததும் தாம்பூலம் வழங்கப்பட்டது; பின்னர் சபை கலைந்தது. எல்லோரும் தம் தம் இல்லமேகினர்கள். நமது சுலோசனுவும் நேரே விமலநாதனின் வீட்டிற்கு வந்தாள்.

விமலநாதன் ப்ரசங்கங்களின் வரலாற்றை விசாரித்தான். சுலோசனு நடந்த யாவற்றையும் கூறினள். இதுகேட்ட விமலநாதன் சற்று ஏதோ சிந்தித்தவாறு 'சுலோசனு! ஸ்ரீமதி சூடாமணியம்மாளின் ப்ரசங்கம் வெகு முக்கியமானது. அதை ஜனங்கள் ஆமோதிப்பது கடமை எனலாம். உன்னுடைய அபிப்பிராயமென்ன?'' என்றான்.

சுலோ:—(கண்ணில் நீர்பெருக) டியர் மாமா! எனக்கின்று மனம் சரியாக இல்லை; அதனல் தேகசுகம் குறைந்திருக்கிறது. என்னுடைய நிலைமையே எனக்குத் தடுமாற்றமாக இருப்பதால் நான் தற்போது என் வீடுசெல்கிறேன். கோபியை ஜாக்ரதையாக பார்த்துக்கொள்ளுங்கள். நான் பதில்பேசாது செல்வதற்கு மன்னிக்கவும்; நான் சென்றுவருகிறேன்—என்று கூறிவிட்டு விமலநாதனின் பதிலை எதிர்பார்க்காமலேயே தடதடவென்று எழுந்து தன் வீட்டிற்குச் சென்றுவிட்டாள். பிரிந்த இருவரின் மன நிலைமையை கூறவும்வேண்டுமோ! ......இதைக் கேட்ட விமலநாதனின் இதயம் துடித்தது. ஒன்றும் தோன்றாது சற்றுநேரம் சிந்தையிலாழ்ந்தான். பிறகு அப்படியே கண்ணயர்ந்துவிட்டான்.

* * * *

நாட்கள் பலவாயின. சுலோசனுவின் அவுடதத்தினல் கோபிநாதனும், விமலநாதனும், வெகு விரைவிலேயே சுகம்பெற்றார்கள். சுலோசனு தன்னுடைய காரியங்களைக் கவனிப்பதிலேயே தனது நாட்டத்தைச் செலுத்தி இருந்தாள். ஆஸ்பத்திரியிலும் மற்ற இதரவிடத்திலும் வெகு ஜாக்ரதையோடு மருந்து கொடுத்துவந்தாள். இப்படி சில மாதங்களாயின. அவளுடைய மோட்டார்ஓட்டி சில தினங்களாக பலமான நோய்வாய்ப்பட்டு படுத்துவிட்டான். ஆதலால் எந்தவிடத்திற்குச் சென்றாலும் சுலோசனு தானே வண்டி

இக் காலத்தில் ஆங்கில பாஷை தெரியாமலிருப்பது மிகவும் கேவலமாகவிருக்கிறது. காலத்தின் போக்கை யனுசரித்து எல்லோரும் ஆங்கில பயிற்சியை அவசியம் மேல் கொள்ளவேண்டி இருக்கிறது. காலத்தின் கோல மிது.

போட்டிக்கொள்ள நேர்ந்தது. ஆகையினால் அனுவசியமாக எங்கும் வெளியில் செல்லாது சற்று உலாவச்செல்வதையும் நிறுத்திக்கொண்டாள். ஒருநாள் தனது ஆஸ்பத்திரியில் வேலைபார்த்துக்கொண்டிருக்கையில் போலீஸ்வீரர்களும் இரு அன்னிய மனிதர்களும் அங்கு வந்தார்கள். அன்னிய மனிதர்கள் தடபுடலாக இரைந்துப் புலம்பியவாறு "ஹா! இந்த மூளைகெட்ட மட வைத்தியத்தினால்தான் எங்கள் குழந்தை—எங்கள் குல விளக்கான கண்மணி—மாண்டுவிட்டாள். ஐயோ! மதிகெட்ட மிருகமாகிய இவள் சரியான மருந்து கொடுப்பதற்குப் பதில் விஷத்தைக் கொடுத்து எங்கள் வயிறை எரியச் செய்துவிட்டாள். வயித்தியம் செய்ய வகையற்றவள் அந்தத் தொழிலை மேல்கொண்டு இப்படி எத்தனைவிடத்தில் கொலைசெய்துவிட்டாளோ சண்டாளி தெரியவில்லையே! என்னசெய்வேன்? பாவி அடி த்ரோகி! 'இதோ குணமாகிவிடும்; இந்த மருந்தையே வாங்கிக் கொடுங்கள்' என்று வஞ்சனையை மறைத்து நெஞ்சுறுதியுடன் கொஞ்சி மொழிந்து நஞ்சைக்கொடுத்து எங்களை நாசம் செய்துவிட்டாயே! என்ன கல்மனமடீ உனக்கு? நீயோ மருத்துவதி! நீயோ உயிரைக்காப்பவள்! நீயோ புனிதமான சாந்த ஸ்வரூபம்கொண்டு வைத்தியதொழிலை புரிய யோக்யதைப் பெற்றவள்? நீயோ பிணியை அகற்ற வல்லமை கொண்டவள்? ஆ! என் வயிறு எரிகின்றதே! என் வயிறு எரிவதே போல நீ எரியமாட்டாயா! ஐயா போலீஸ்வீரரே! திறமையற்ற மடையர்களுக்கு மகா கண்ணியம்பொருந்திய நீங்கள் வைத்தியம் செய்யும் அனுமதியளிக்கலாகுமா! அதிகமான ஜுரம்அடிக்கின்றது என்று நாங்கள் இந்தப்பாவியை அழைத்துச்சென்றுகாட்டினோம். அதற்கு இதோ இந்த விஷத்தை எழுதிக்கொடுத்துக்கொன்றுவிட்டாளய்யா! இவள் புத்திகெட்ட படுபாவி என்பதைப் பிறகே அறிந்தேன். இவள் யாரோ ஒரு வக்கீலை வைத்துக்கொண்டு அந்த

"கவலைப்படவேண்டாம் கடவுள் இருக்கிறார்;" என்று பிறருக்கு உபதேசிப்பதிலும் எழுதி விடுவதிலும் சுலபம்தான். ஆனால் அந்த தத்வம் தெரிந்திருப்பினும் மனதிற்குக் கவலை வந்துற்றகாலை அதை விலக்க வியலாது அனுபவித்துத்தான் தீரவேண்டி இருக்கிறது. அவ்விதம் அனுபவிக்கும்போதும் கடவுளிடத்தில் நம்பிக்கை மட்டும் அவசியமாக இருக்கவேண்டும்.

மோகத்திலீடுபட்டுத் தலைகால் தெரியாமல் அலைவதால் இவள் இவ்விதமான கொலைசெய்யத்தக்க தொழில் புரிந்துவருகிறாள். என்ன செய்வேன்"? என்று தடபுடலாக சத்தமிட்டுப் புலம்பினான்.

போலீஸ்வீரன் அவனை சற்று தேற்றி, அடக்கிப் பின் சுலோசனாவைப் பார்த்து "அம்மணி! தாங்கள் ஒரு நோயாளிக்கு கொடிய விஷத்தை கொடுத்துக் கொன்றுவிட்டதாக இதோ சாக்ஷியுடன்—உங்கள் கையெழுத்துள்ள சீட்டுடன்—தகவல் கிடைத்திருப்பதால் உங்கள்மீது நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அனியாயமாக ஒரு நோயாளியைக் கொன்ற குற்றம் உங்கள்மீது சார்ந்திருப்பதால் இதோ வாரண்டு எடுத்திருக்கிறோம்" என்று கூறினான். அந்த அதிபயங்கரமான, கர்ண கடூரமான வார்த்தையைக் கேட்ட நமது அருங்குணபூஷணமாகிய சுலோசனா இடிமுழக்கங் கேட்ட நாகம்போல அலறிப்போய் ஒன்றுமே தோன்றாமல் அப்படியே ஸ்தம்பித்துவிட்டாள்.

"சகோதர சகோதரிகளே! ஒருவிதமான பக்ஷபாதமுமின்றி சமத்வமாக எல்லோருக்கும் பொதுநல சேவை செய்யும் நமது அருமை ஜகன்மோகினிக்கு எல்லோரும் மாதம் இரண்டணா கொடுத்து ஆதரிப்பது ஒரு சிரமமேயல்ல. வருடம் ஒன்றரை ரூபாயை நாம் இத்தகைய பொது விஷயத்தில்—நற்போதனையை அளிக்கும் விஷயத்தில்— செலவிடத் தயங்குவது மிகவும் கேவலமாகும். நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சந்தா நேயரைச் சேர்த்துக்கொடுத்து ஆதரிப்பது நமது கடமை என்று நினைத்துச் செய்ய வேண்டும். மாதாமாதம் கிடைக்கும் அடிக்குறிப்பின் ருசிக்கே நாம் அதற்கு மாத மளிக்கும் இரண்டணா போதாது என்பதே எனது தீர்மானம். என் போன்ற ஸ்திரீ ஜாதியாகிய கோதைநாயகியம்மாளுக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும், அவரது அருமைக் குழந்தைகளுக்கும், மோகினிச் செல்விக்கும் அருமை வள்ளலான கடவுள் சர்வ மங்களமும் அளிக்கும்படியாக வேண்டுகிறேன். இங்ஙனம், மோகினிக் குழந்தையின் மோகத்திலீடுபட்டுள்ள சகோதரி T. S. சேதுலக்ஷ்மி."

சகோதரி திருவாட்டி சேதுலக்ஷ்மியம்மாளவர்கள் அனுப்பிய கடிதம் மிகவும் பெரியதாயும் ஆங்கிலத்திலும் இருந்தது. அதனுள்ள முக்கிய அம்சங்களை மட்டும் யாவரு மறியவேண்டி தாய்ப் பாஷையில் மொழி பெயர்த்து குறிப்புடன் வெளியிட்டுள்ளோம். அதற்காக சகோதரியவர்கள் மன்னிக்க வேண்டும். (பத்திராதிபர்)

14-வது அதிகாரம்

வினை விதைத்தவன் வினையை அறுப்பான்

தன்னிரையழிந்து விழுந்து கிடக்கும் சுலோசனாவைக்கண்ட அங்குள்ள அனைவரும் கண்ணீர் பெருக்க வாரம்பித்தார்கள். இந்த மாசற்ற நங்கையின் தூய்மையான இருதயத்தில் விஷத்திலும் கொடிய அம்மோசமொழிகளாகிய அம்புகள் தைத்துவிட்டதால் ப்ரக்ஞையற்றாள். அங்குள்ளோர்கள் இந்த அக்ரம வார்த்தையைக்கேட்டு மனமுருகி "ஆ! இந்த கட்டுக்கதையை நாங்கள் ஒருபோதும் நம்பமாட்டோம். இந்தம்மாளின் காலில் ஒட்டிய தூசுகூட அத்தகைய காரியத்தைச்செய்யாதென்று நாங்கள் திட்டமாகக் கூறுவோம்" என்றுகூறியவாறு சுலோசனாவுக்கு மூர்ச்சை தெளியச் செய்தார்கள். அவள் சற்று ப்ரக்ஞையடைந்ததும் 'ஹா! போலீஸ்வீரரே! இந்த அனியாயமான மோசத்தை நீங்கள் நம்பி நிரபராதியான என்னைப் புண்படச்செய்வது தகுமா! இவர்கள் யாரோ! இவர்களின் முகத்தையே நான் பார்த்தறியேன். இவர்களுக்கும் எனக்கும் என்றுமே பழக்கமில்லை. நான் இவர்கள் தெரிவிக்கின்றபடி இவர்கள் வீட்டிற்குச் செல்லவுமில்லை, நோயாளியைப் பார்த்ததுமில்லை. எனக்கு ஒருவிதமான தகவலும் தெரியாது. இந்த சீட்டு நான் எழுதவே இல்லை. இந்த விஷயத்தில் எனக்கு ஒருவிதமான சம்மந்தமுமில்லை என்பதைக் கடவுள்மீது ஆணையாகக் கூறுவேன்" என்றாள்.

அதற்குள் அந்த மனிதன் "அடி பாவி! சண்டாளி! செய்த வேலையை சடக்கென்று செய்துவிட்டு இவ்விதம் சாதனையுடன்

ஆயிரமாயிரமாகச் செலவிட்டுச் சிலர் எந்த காரியம் செய்தாலும் அது பரிமளிப்பதே இல்லை. சிலரோ, செலவு செய்வது வெகு சொற்பம்; அக்காரியத்தின் காம்பீர்யமோ வெகுவாய்க் கிளம்பிவிடுகின்றது. நன்றாக விதரணை தெரிந்து செய்வதே இவைகளுக்குக் காரணம்.

சத்தியம் செய்கின்றாயே! ஐயோ! அனியாயமே! கொலைகாரப் பாவி களுக்குச் சத்யமும் உண்டா! அக்ரமக் கள்ளிகளுக்கு ஆணையும் உண்டா! நேற்று இரவு 8 மணிக்கு நாங்கள் உன்னை உன் வீட்டி லிருந்து அழைத்துக்கொண்டு செல்லவில்லையா! நீ வந்து இந்த சீட்டை எழுதித் தரவில்லையா! அடீ கள்ளீ! எங்கள் மகனை வேண்டு மென்று கொலை செய்ததுமன்னியில் இந்த சாதனை எதற்கடீ! த்ரோகீ! இதோ உன் கையெழுத்து உன் கண்ணிற்குத் தெரிய வில்லையா! கண்ணவிழ்ந்துவிட்டதா! உன் பெயரடித்த பேப்பரில் நீ எழுதிக்கொடுத்த எழுத்தும் விஷமும் கூட மறைந்துவிடுமோ! கடவுள் உன்னை வெறுமனே வைப்பாரா! என் வயிறெரிவது போல உன்னை எரியச் செய்யமாட்டாரா! உன்னுடைய கள்ளக் காதலனும் மாண்டு, உன்னருமைத் தம்பியும் இறந்து நீ சந்தியில் நடிக்கவேண்டுமடீ! நாசகாலீ!" என்று சரமாரியாகத் திட்ட ஆரம்பித்துவிட்டான்.

போலீஸ்:—அம்மா! உங்களுடைய பெயரடித்த காகிதத்தில் நீங்களே எழுதி இருக்கும் இச் சீட்டைப் பாருங்கள். இதை மோச மென்று கூறுதற்கு முடியாது. மேலும் நாங்கள் கண்மூடித்தன மாக இக் காரியத்தில் ப்ரவேசித்து விடவில்லை. உங்கள் கை யெழுத் தையும் இதையும் நன்றாக வைத்து ஒத்திட்டுப் பார்த்த பிறகும், இறந்து கிடக்கும் ப்ரேதத்தை சோதித்துப் பார்த்த பிறகுமே நாங்கள் இங்கு வந்துள்ளோம். நீங்கள் ஜுரமடிக்கும் கோபாலிக்கு இந்த விஷத்தைக் கொடுத்துவிட்டதால் அந்த மாது இறந்திருக் கிறாள் என்பதை டாக்டர் நன்றாக பரீக்ஷித்துக் கூறிவிட்டார். நீங்கள் ஒரே சாதனையாக அவர்களைப் பார்க்கவில்லை என்பது முழு பூசணிக் காயை சோற்றில் மறைப்பது போலாகும். இந்த மனிதன் வயி றெரிந்து கூறும் விஷயம் உண்மையானதென்றே எங்களுடைய அபிப்பிராயம்" என்றான்.

சம்பளம் பெறுவதற்கு மாதம் வளருகின்றது. சஞ்சிகை வெளியாவதற்கு மட்டும் மாதம் ஓட்டமாக ஓடுகின்றது. கடன் கொடுத்தவன் தேதியை எதிர் நோக்கி நாட்களைக் கடத்துகிறான். கடன்காரனோ தேதி வந்து விடுகிறதே என்று பயந்துத் தவிக்கின்றான். ஒரே மாதம் பலருக்குப் பலவிதம்,

அதே சமயத்தில் சுலோசனா ஆஸ்பத்திரியின் தலைவி அவளை அழைப்பதாக சேவகன் வந்து அழைத்தான். உடனே சுலோசனா நடக்கவும் சக்தி யற்று ஆடி விழுந்தவாறு தன் எஜமானியி னிடத்தில் சென்று வெகு வணக்கத்துடன் நின்றாள். எஜமானியின் முகம் வெகு கோபத்துடன் ஜ்வலித்ததைக் கண்டதுமே ஏதோ இவ் விடத்திலும் மோச மிருக்கிற தென்று சுலோசனா எளிதில் தெரிந்துகொண்டாள். சுலோசனாவைக் கண்ட எஜமானி யம்மாள் வெகு சிற்றத்துடன் பேசத் தொடங்கி "சுலோசனா! இது பரியந்தம் உன்னை நான் வெகு யோக்யமானவளென்றும் தீர்க்கமான புத்தியுடன் வேலை செய்பவள் என்றும், நோயின் குணமறிந்து மருந்து கொடுக்கும் ஆற்றலுடையவள் என்றும் எண்ணி ஏமாற்ற மடைந்தேன். நீ செய்துவரும் வயித்தியத்தினால் இந்த ஆஸ்பத்ரிக்கும் எனக்கும் கெட்ட பெயர் உண்டாவதற்கு ஏது சமீபித்துவிட்டது. எத்தனை நோயாளிகளை நீ அனியாயமாகக் கொலை செய்து அது வெளியில் வாவிடாது தடுத்து விட்டாயோ, என்று இப்போது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. உன்னுடைய மதிகெட்டத் தன்மையினாலோ, அன்றி வேண்டுமென்றே அகம்பாவத்தன்மையினாலோ நீ ஒரு கேஸைப் பாழ் படுத்தி உயிர்ச் சேதத்தை உண்டாக்கி விட்டாயாம். உன்னுடைய ரகஸியம் இன்றே வெளியாகி இருக்கிறது. இதோ இக்கடிதத்தைப் பார்" என்று திட்டியவாறு ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்,

இந்த வார்த்தைகளைக் கேட்ட சுலோசனா நடுநடுங்கிப் போய் கண்ணீர் பெருகிய வண்ணம் தன் தலைவி யளித்த லிகிதத்தை வாங்கிப் படிக்கலானாள். அது பின் வருமாறு:—

ஆஸ்பத்ரியின் தலைவி யவர்களுக்கு,

உலகத்தில் மக்களின் பிணியைப் போக்கிக் குணத்தை யளிப்பதற்கும், சந்தோஷத்தை யுண்டாக்குவதற்கும் வைத்தி

சந்தா நம்பரும் தெரிவிக்காமல் தமது விலாசமும் எழுதாமல் சிலர் பத்திரிகை கேட்கிறார்கள். அவர்கள் சந்தாதாரர்கள் என்று அறிவதா, அன்றி வேற்று மனிதர்களென்று ஊகிப்பதா? பத்திரிகை கொடா விடின் நிஷ்டூரம்; கொடுப்பின் நஷ்டம். இதற்கென்ன செய்வது.?

யர்கள் தோன்றுவதே யன்றி அனியாயமாகக் கொலை செய்வதற்கும், குடியைக் கெடுப்பதற்கும் வைத்தியர்கள் தோன்றுவதில்லை. உங்கள் ஆஸ்பத்திரியில் உங்கள் ஆதிக்கத்திலிருக்கும் பாவி, சுலோசனு என்ற சண்டாளி, வைத்தியத் தொழிலுக்கு சற்றும் பொருத்த மற்றிருக்கையில் அவளைத் தாங்கள் பெரிய வைத்திய நிபுணத்வம் வகித்தவளாக பாவித்து சுதந்திரம் கொடுத்துவிட்டதன் பயன் அந்த த்ரோகி என் மகளைக் கொலை செய்துவிட்டாள். வைத்தியம் செய்யும் உத்தமத் தொழிலுக்கு அந்த மதிகெட்டக் கள்ளி சற்றும் அருகதை யல்லவென்பதைத் தாங்களறியாதிருந்தது என்னுடைய தௌர்பாக்யமென்றே நினைக்கிறேன். கள்ளக் காதலனுடன் நட்பு கொண்டு மோக வலையில் பட்டுழலும் காம சுந்தரிக்கு இந்த சாந்தத் தொழிலை நீங்கள் கொடுக்கலாகுமா! அவளுக்கு யோக்யமான தொழில் தாசித் தொழிலே யன்றி வேறு எதற்கும் அவள் யோக்யதையே இல்லை என்று நான் திட்டமாகக் கூறுவேன். நேற்று என் மகளின் தேக அசுகத்தின் நிமித்தம் இந்தப் பாவியை அழைக்கச் சென்றேன். இவளுடைய குடி வெறியில்—காம வெறியில்—என் மகளுக்கு ஒரு விஷத்தை எழுதிக் கொடுத்துவிட்டாள். அதை நான் அவுடதமென்று வாங்கிக் கொடுத்த உடனே என் மகள் உயிர் நீத்தாள். என் சந்ததியே பாழாகிவிட்டது. அந்த படுமோசக்காரியினுல் எங்கள் குலமே நாசமாகிவிட்டது. இத்தகைய மதிகெட்ட மருத்துவதியைத் தாங்கியுள்ள உங்கள் ஆஸ்பத்ரியின் கவுரவம் அழிந்துவிடாதா! யோக்யதையை அறியாது பதவி யளிப்பதும் தகுமா! ஐயோ! என் வயிறு எரிகின்றதே! என்ன செய்வேன்? என் மகளைக் கொன்ற பாவியைத் தாங்கள் கவனிக்க வேண்டும். நான் பழிக்குப் பழி வாங்காமலிருக்கமாட்டேன். இந்த தகவலைப் போலீஸுக்கும் கொடுத்திருக்கிறேன். மருத்

வீட்டுத் தலைவர்களுக்கு தேக சுகம் கெட்டு படுத்துவிட்டால், அப்பப்ப! வீட்டின் ஒளியே குன்றிவிட்டதுபோலாகி எல்லோருடைய மனமும் இருண்டு விடுகின்றது. வேதனையைக் கூறவேண்டுமா! நோய் குணமாகிய பிறகே மன விருள் விலகுகின்றது.

துவப் பதவியிலிருந்து அந்த மோசக்காரியை நீக்குங்கள். இனி மேலாவது கொலை நடக்காத விதம் பார்த்துக்கொள்ளுங்கள்.

இங்ஙனம்
S. V. சாமி

அந்த கடிதத்தைப் படித்த கலோசனு ஒன்றுமே தோன்றாது கலக்க மடைந்து "ஹா! என்னருமைத் தலைவியே! இத்தனை நாளாக என்னுடன் பழகிய தங்களுக்கு என்னுடைய நிலைமையும் குணமும் தெரியவில்லை என்பது என் மனதைப் பிளக்கின்றது. நான் இந்த கடிதத்தை ஒருபோதும் நம்பமாட்டேன். நான் ஒரு குற்றமும் அறியாத நிரபராதி என்பதைக் கடவுளின்மீது ஆணையாகச் சொல்லுகிறேன். என் குல தெய்வத்தின் மீது ஆணையாக நான் எனது பிறவியில் ஒருவருக்கும் இதுபரியந்தம் ஒருவிதமான தீங்கும் செய்திலேன். அம்மணி! எனது அன்னையைப் போல நினைத்திருந்த தாங்களே என்மீது இத்தகைய சந்தேகங் கொண் டால் வேறு யாரிடம் நான் என் குறையை முறையிடுவேன். எவர் எனக்கு அன்புடன் ஆதரிக்க முன் வருவார்கள். தாயே! இவை யனைத்தும் சுத்த படுமோசம். எனக்கும் இதில் கூறப்பட்டுள்ள விஷயத்திற்கும் ஒருவித சம்பந்தமு மில்லை. இவ் விஷயத்தை நீங்கள் திடீரென்று நம்பிவிடலாகாது. அனாதையாகிய எனக்குத் தாங்கள் உதவி புரியவேண்டும். இந்த விஷயத்தை நன்றாக ஆராய்ந்து தீர்க்கமாக யோசனை செய்துப் பார்த்தால் அப்போதே னும் 'அகதிக்குத் தெய்வமே துணை' என்கிற வாக்கு உண்மையாகி நான் நிரபராதி என்பதை அக்கருணை வள்ளல் காட்டாது போக மாட்டான். எந்த விஷயத்தையும் திடீரென்று நம்பிவிடலாகாது. இந்தக் கடிதம் எழுதியுள்ள மனிதர்கள் கீழே வந்திருக்கிறார்கள். அவர்களோடு போலீஸாரும் வந்திருக்கிறார்கள். தாங்கள் இவ்விஷயத் தில் தயவு செய்யவேண்டும். என் வீட்டிற்கு ஆளை யனுப்பி என் தம்பியையும் என் மாமாவையும் உடனே அழைத்து வரச் சொல்

வினா:—வற்றாத சமுத்திரம் எதப்பா?

விடை:—சிலருக்குக் கண்ணும், சிலருக்கு மூக்கும், சிலருக்கு வாயும் தான்.

துக்கன். என்றுயிர் துடிக்கின்றது. என்னை ஏதோ செய்கின்றது; மீண்டும் மயக்கம் வரும்போலிருக்கிறது." என்று கூறிக்கொண்டே இவ்விசனம் தாங்காது மயக்கத்தில் விழுந்துவிட்டாள்.

இந்த வார்த்தைகளைக்கேட்ட தலைவி ஒன்றும் தோன்றாத அபாரமான குழப்பத்தை படைந்துவிட்டாள். சுலோசனுவின் களங்கமற்ற பூர்ண மதியைப் பழிக்கும் முகத்தையும், கண்ணீர் பெருகும் கண்ராவியையும், அவளுடைய உண்மையானத் தோற்றத்தையும் கண்டு தலைவியின் மனம் தத்தளிக்கின்றது. என்ன செய்வதென்பதையறியாது சற்றுத்தியங்கி பின் சுலோசனுவின் தம்பியையும் விமலநாதனையும் அழைத்துவரச் செய்தாள். அவ்விருவரும் விஷயமின்னதென்றறியாது வேகமாக ஓடிவந்தார்கள். தலைவியினுல் இவ்வனியாயமான விஷயத்தை அறிந்துகொண்ட இருவரும் கட்டு மீறிய துக்கமும் ஆத்திரமும் அடைந்து "ஆ! எந்தச் சண்டாளனே வேண்டுமென்று இந்த நிரபாதியான அபலையின்மீது இத்தகைய பழியைச் சுமத்தியிருக்கிறுன். அவனுடைய விஞசகாலத்தின் சமீபம் நெருங்கிவிட்டது. எந்தக் காதகன் இவ்விதம் செய்தான். அவன் மண்டைப் புழுகு அவனை அழைக்கின்றதால் இத்தகைய துர்ப்புத்தி தோன்றி இருக்கிறது. தாயே! தலைவியே! தாங்கள் இவ்விஷயத்தில் என்ன நினைக்கின்றீர்கள்?" என்று விமலநாதன் கேட்டவாறு சுலோசனுவுக்கு மயக்கத்தைத் தெளிவிக்கலானுன். சுலோசனுவும் மயக்கம் தெளிந்து எழுந்து விமலநாதனையும், கோபிநாதனையும் கண்டு சிறு குழந்தையைப்போலக் கோவெனக் கதறி பழுதவாறு "மாமா! என் ப்ரிய கோபி! என் தலைமீது எந்தச் சண்டாளனே, எந்த துரோகியோ பெரும் பாறையைப் புரட்டிவிட்டான். ஹா! கடவுள் என்னைச்செய்யும் சோதனை எல்லாம் போதாதென்று இவ்விதமும் செய்துவிட்டாரே! அன்று அப்பாவி ராமச்சந்திரன் உங்கள் வீட்டில் வந்துவிட்டுச் சென்றபின் இதுபரியந்தம் அவன் என்னைச் சந்திக்கவில்லை. இதனுல் நான் எனக்கு நற்காலமென்று

'வீடு தேடி வந்தும் வீட்டுக்காரியைக் காணவில்லையே!' என்கிறுள் ஒரு புண்யவதி. அவள் வந்த வேலையோ, வீட்டுக்காரிக்கும் அவளுக்கு முக்கிய மானவர்களுக்கும் கலகத்தை புண்டாக்குவதற்குத்தான்.

முற்றும் நம்பவில்லை. ஏதோ பேராபத்து விளைவிக்கத்தான் இப் பாவி மவுனம் சாதிக்கின்றான் என்றுதான் நினைத்தேன்; நினைத்த வாறே முடிந்துவிட்டதே! என்ன செய்வேன்? இந்த அநியாய வார்த்தையை—பழியை—வகித்த பிறகு யான் எதற்கு உயிர் தரித் திருக்கவேண்டும். ஐயோ! என்னுடைய நிரபராதித்தன்மையை அறிந்துள்ள மனிதர்களின் மனமும் தற்போது இந்த அநி யாயப் படுமோசத்தையே நம்புகின்றதே! வாய்த்திறந்து பேசாது சிலாரூபமாயும், சத்யசீலர்களாகிய ச்ரேஷ்டர்களின் ஹ்ருத யத்தில் மறைபொருளாயும், புறக்கண்ணில்படாது எங்கும் ஜோதி ச்வரூபமாயும் சேவை சாதிக்கும் கருணாமூர்த்தியாகிய கடவுளுக் கன்றி எனது நிரபராதித் தன்மையை விளக்கிக் காட்டும் திறன் உண்டா! அவர் தன்னருள்மாரியை என்மீது செலுத்தி என்னைக் காப்பாற்றுவாரா! மாமா! நான் என்ன செய்வேன்? அந்தக் கடவுள் இத்தகைய வனப்பையும், சத்ருக்களின் இதயத்தையும் துளைக்கச் செய்யும் சண்டாள எழிலையும் எனக்கு ஏன் அளிக்கவேண்டும். கேவலமான—நச்வரமான—இந்த உடலின் எழிலுக்காகவல்லவோ பருந்துபோல அப்பாவிகள் வட்டமிட்டலைந்து, கிட்டவில்லை என்று இந்த கெட்ட விஷயத்தில் மனத்தைத் திட்டமாகச் செலுத்தி ஒரு உயிரையே ஈவிரக்கமின்றி வாங்குவதற்கு முற்பட்டுவிட்டார்கள். இந்த விஷயத்தில் அந்த ராமச்சந்திரன் உள்பட சினிமாக்காரர்கள், காவேரி, அண்ணுசாமி முதலிய சத்ருக்கள் ஒன்றுகூடிதான் இக்காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்று என் மனச்சாட்சி எனக்கு திட்டமாகக் கூறுகின்றது. வேறு யாரும் எனக்கு விரோ திகளில்லை. தலைவியே! என்னுடைய இந்த அவகேடான நிலைமையில் என்னுடைய பூர்வ சரிதையைத் தாங்களறியவேண்டியது கடமை

சில சுபாவங்களுக்கு வீட்டிலுள்ள சமயாசமயம் எதுவுமே தெரிவதில்லை; தினம் 8 மணிவரையில் நித்திராதேவியின் வயப்பட்டுக் கிடக்கும் மனிதர்கள் வீட்டில் ஓர் அவசரம் என்றால் 6 மணிக்கே எழுந்து அப்போதுதான் தன் படிப்பை முக்கியமாக எண்ணி வெளியில் சென்றுவிடுகிறார்கள். வீடு படும் பாடோ அன்னியர் பலருக்கு சிரமம் கொடுக்ும்படியாகிவிடுகின்றது. சொந்த மனிதராயினும் அன்னியராயினும் தானாக ஜெனிக்கும் அன்பு மனத்தில் இல்லையேல்..............

யாகையினால் கூறுகிறேன். நான் எனது ஜன்மபூமியாகிய பெங்க ளூரில் இருக்கையில் என் தந்தையின் மித்ரனாகவிருந்த மனிதன் எனக்குச் சத்ருவானான். என்னுடன் படித்த காவேரி என்பாள் ஸ்னேகிதையாகவிருந்து எனதுப் பகையாளியானாள். பிறகு ஒரு சினிமாக்காரன் என் ரூபத்தையும், வனப்பையுங் கண்டு என்னைச் சினிமாவில் சேரும்படியாக வற்புறுத்தினான்; அதற்கு நான் மறுத்த தனால் விரோதியானான். பிறகு இந்த மூவராலும் எனக்குற்ற துன்பம் அளப்பரியது. (அவைகளைத் தெரிவித்து) இத்தகைய கஷ்டங்கள் அனுபவித்தேன். அங்கு இருக்க மனமற்று இவ் வூருக்கு வந்து சேர்ந்தேன். வந்தபிறகும் எனக்கு அவர்களால்..........இத் தகைய ஆபத்துக்கள் விளைந்தன. அவைகளினின்றும் இன்று பரியந்தம் என்னைக் காத்த கருணைவள்ளல் இப்போதும் எனது குற்றமற்றத் தன்மையை எடுத்து விளக்காதிருக்கமாட்டார் என்று நான் நம்பி இருக்கிறேன். என் மனத்தில் அந்த மனிதர்களைத் தவிர வேறு யார்மீதும் சந்தேகம் தோன்றவில்லை" என்று கூறிக் கதறுகின்றாள்.

விமல:—சலோசனா! நீ எதற்கும் பயப்படாதே! உன்னுடைய பரிசுத்தத்தை எல்லாம் வல்ல கடவுளறிவாரே யன்றி மனிதரறிய மாட்டார்கள். என் சுலோசனா! உனது முகாரவிந்த தரிசனார்த்தம் என்னுடைய உயிர் நிலைத்திருக்கின்றதே யன்றி மற்றபடி எதனு லும் நான் ஜீவிக்கவில்லை. இந்த ரகஸியத்தைக் கடவுள் உள்பட ஜனங்களும் அறிவார்கள். என்னுடைய உயிர் என் தேகத்திலிருக் கிற பரியந்தம் உன்னை இடர் தொடரும்படி நான் கண்டு சகிக்கமாட் டேன். என்னுயிரைக் கொடுத்தேனும் உன்னை நான் இந்த அபாண் டப் பழியினின்றும் காப்பாற்றுது நான் தண்ணீரும் அருந்துவ தில்லை. கடவுளும் உன்மீது வர்மம் பாராட்டி உன்னை அதோகதி

நோயாளியின் பாதையை அவர்கள் அனுபவித்துத்தான் தீரவேண்டும். எனினும் டாக்டர் வந்து பார்த்துவிட்டுச் சென்றால் மனத்திற்குத் தேறுதலாக விருக்கின்றது. நாம் வைத்தியரை நாடிப் பலதரம் அலையும் நேரத்திலேயே அவரை வேறு சிலர் அழைத்துச் சென்றுவிடுகிறார்கள். நமது மன வேதனையோ..................

செய்துவிடுவாரே யானால் அந்த க்ஷணத்தில் நானும் உன்னை நம்பியே வைத்திருக்கும் இப்பாழும் உயிரை விட்டுவிடுவேன். என் பிரிய சுலோசனு! "நமக்கு இத்தகைய; பேரிடி போன்ற ஆபத்து வந்துவிட்டதே! இதிலிருந்து எவ்விதம் தப்பிப் பிழைப்போம்?" என்கிற கவலையே நீ கொள்ளவேண்டாம். என்னுடைய உயிரை உனக்கே அர்ப்பணம் செய்துவிட்டேன். என்னால் கூடிய வரையில் உழைத்துப் பார்க்கிறேன். மனந்தேறு.

கோபி:—அக்கா! நீ யாரும் திக்கற்ற அனுதை என்று உன்னைச் சண்டாளர்கள் இவ்விதம் செய்கிருர்கள். ஒருவிதமான குறைவும் கடவுள் உனக்குச் செய்யமாட்டார். ஆகையினுல் பயப்படாதே. மாமாவும் நானும் வீணே தூங்கமாட்டோம். எந்த விதத்திலேனும் முயற்சி செய்து உன்மீதுள்ள பழியை விலக்க நான் தயாராக விருக்கிறேன்"—என்று தேற்றினுன்.

இவைகளை எல்லாம் கேட்ட சுலோசனுவுக்கு சற்று தைரியம் பிறந்தது. எனினும் மனத்தை வாள்கொண்டறுக்கும் விசனம் நீங்க வில்லை. அவைகளை சற்று உள்ளடக்கிக்கொண்டு பேசத்தொடங்கி "மாமா! மகா பாபியாகிய என்னை இதுபரியந்தம் காத்தக் கடவுள் இம் முறையும் காப்பாரா! அனியாயப் பழியை என்மீது சுமத்திய பாவி களை சிக்ஷித்து என்னை ரக்ஷிக்க அக்கடவுள் முன் வருவாரா! என்ன செய்வேன்? மாமா! கோபி!" என்று புலம்பிக்கொண்டே இருக் கையில் அவ்விடத்திலேயே போலீஸாரும், மற்றவர்களும் வந்து விட்டார்கள். இங்கு நடந்த சம்பாஷணைகளையும், சுலோசனுவின் பரிதாபத்தையும் கண்ட தலைவிக்கு சற்று மனம் இளகிவிட்டது. இந்த கேஸ் விஷயத்தில் நாமும் சேர்ந்து உழைக்கவேண்டுமென்று தீர்மானித்து சுலோசனுவைத் தேற்றிப் பின் அங்கு வந்துள்ளவர்க ளைக் கவனித்தாள்.

பல வருடங்களாக முகம் பாராது விலகி இருந்த கணவன் மீண்டும் மனைவியைக் கண்டு சமுசாரம் செய்யவேண்டுமென்ருல் கணவன் மனைவி இருவருக்கும் அது தர்ம சங்கடமாயும், சொல்லத்தெரியாத வேதனையாயும், துக்கமாயு மிருக்குமாம்.

அதற்குள் போலீஸார் அவர்கள் பாடும் பாடலையே பாடத் தொடங்கினார்கள். இதைக் கேட்ட விமலநாதன் கண்கள் சிவக்கப் பேசத்தொடங்கி, "ஐயா! போலீஸ் வீரரே! சட்டப்படிக்கு செய்யவேண்டியதை நீங்கள் செய்தபோதும் இந்த வழக்கின் உண்மையை ஆராய்ந்து உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடித்தால் அது வெகு சிலாக்யமாகவிருக்கும். இந்த அனாதையான பக்ஷியின்மீது தங்களுடைய போலீஸ் பாணத்தைத் தொடுப்பதால் இந்த பக்ஷியின் உயிர் நீங்குமேயன்றி வேறு பலனில்லை. தாங்கள் பலரோடு பிறந்திருக்கலாம். சகோதரிகளை அடைந்து அவ்வன்பையும் ஆநந்தத்தையும் தினம் அடைந்து அனுபவிக்கின்றவர்களாக இருக்கலாம். ஆகையினால் இந்தப் பரதேசியின் மீது தயவுசெய்து இதன் உண்மையை ஆராயவேண்டும். அதோ நிற்கும் மனிதர்களைப் பார்த்தால் அவர்கள் வார்த்தையில் எனக்கு சிறிதும் நம்பிக்கையே இல்லை. அவர்கள் வேண்டுமென்று கூலிக்கு மாரடிக்க வந்தவர்களாகவே தோன்றுகின்றது. இந்த சீட்டை வைத்துக் கொண்டல்லவா அவர்கள் இக் குற்றத்தைக் கொணர்ந்திருக்கின்றார்கள். தாங்கள் சற்று சாவகாசமாக இக்கையெழுத்து இந்தப் பெண்மணியுடையதுதானா என்பதை முதலில் கவனிக்கவேண்டும். பிறகு இறந்து கிடக்கும் பெண்ணை மற்றொரு முறை ப்ரபல டாக்டர்களைக் கொண்டு சோதிக்கவேண்டும். அதன் பின்னர் இந்த விஷத்தை எந்த கடையில் இவர்கள் வாங்கினார்கள் என்று விசாரித்தறியவேண்டும். அப்புறம் நேற்று இவள் அங்கு வந்தாள். என்பதை சாக்ஷிகளுடன் ரூபிக்கவேண்டும். இவைகளை எல்லாம் நன்றாக ஆராய்ச்சி செய்து பார்த்து உங்கள் முடிவை நீங்கள் நடத்தலாம். திடீரென்று இந்த மனிதர்கள் சொல்வதை மட்டும் நம்பிவிடலாகாது"[a] என்று விமலநாதன் மிக்க வணக்கத்துடன் சொன்னான்.

இதுகேட்ட போலீஸார் "ஐயா! நீங்கள் சொல்கிறபடிக்கு உள்ள விஷயங்களை எல்லாம் ஆராய்ச்சி செய்து விளக்கி நிரூபிக்கச்

அருமையாக—ஆநந்தமாக—சங்கீதம் பாடுகிறவர்கள் இருவர் ஒன்றாகச் சேர்ந்து போட்டியாகப் பாட ஆரம்பித்துவிட்டால் வெகு இனிமையாயும் அற்புதமாயுமிருக்கின்றது. பாடுகிறவர்களின் உற்சாகமும் உச்ச நிலைமை அடைகின்றது.

செய்வது உங்களுடைய வேலை. நாங்கள் மாஜிஸ்திரேட்டின் உத்தாவு படிக்கு வாரண்டுடன் வந்திருக்கிறோமாகையினால் நீங்கள் இந்த விவரங்களை எல்லாம் தயவு செய்து மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வந்து விளக்கிக் காட்டுங்கள். நீங்கள் பெரிய லாயராகையினால் சட்டத்து நியாயங்களை நன்கறிவீர்கள். ஆகையினால்:நாங்கள் சொல்வதற்கு ஒன்றுமில்லை. வாருங்களம்மா!" என்று மரியாதையாகவே அழைத் தார்கள்.

பிறகு ஆஸ்பத்திரி தலைவியுள்பட மாஜிஸ்திரேட் கோர்டிர்க்குச் சென்றார்கள். மாஜிஸ்திரேட்டினிடத்தில் விமலநாதனும் சுலோ சனாவும் தாங்கள் கூறவேண்டியவற்றைக் கூறினார்கள். பிறகு விமலநாதன் மாஜிஸ்திரேட்டை நோக்கி "கனம் கோர்ட்டார் அவர் களுக்கு! இச் சிறு விண்ணப்பத்தை அங்கீகரிக்க வேண்டும். இந்த கேஸ் முற்றும் வேண்டுமென ஜோடித்துள்ள பொய்க் கேஸ். ஆகையினால், விஷத்தினாலிறந்த பெண்ணின் ப்ரேதத்தை தயவு செய்து வேறு பெரிய டாக்டர்களைக் கொண்டு மீண்டுமொரு முறை பரிசோதிக்கும்படி உத்தரவு கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். மேலும், விஷம் எந்த கடையில் வாங்கியதென்றும், இக் கையெழுத்து இவளுடையதுதானா என்பதையும், இவள் நேற்று அவர்கள் வீட்டிற்குச் சென்றது உண்மைதானா என்றதையும் கோர்ட் டார் அவர்கள் தயவுசெய்து விசாரித்து அதன்பின் இக் கேஸை நடத்துவது நலமென்றுத் தோன்றுகின்றது. இந்த விஷயங்களை விசாரித்து உண்மையை விளக்குவதற்காக சிறிது நேரம் அளிக்க வேண்டுகிறேன்." என்று வணக்கமாகக் கேட்டான்.

இதுகேட்ட மாஜிஸ்திரேட் சற்று யோசித்தார். சுலோசனா வின் வைத்தியத் தொழிலின் பெருமையைப் பற்றியும், அவளுடைய யோக்யதையைப் பற்றியும் தான் ஏற்கெனவே கேள்வியுற்றிருப் பதுடன தனது வீட்டிலேயே ஒரு ப்ரஸவ கேஸுக்கு சுலோசனா

நோயாளிகளோ, "ஐயோ! தூக்கம் வரவில்லையே!" என்று கத்துகின்றார்கள். அவர்கள் பக்கலிலிருந்து பணிவிடை செய்பவர்களுக்கோ, தடுக்க முடியாத தூக்கம் வந்து சாமி ஆடச்செய்கின்றது.

வந்திருப்பதும் அப்போது நினைவிற்கு வந்தது. சலோசனா துயரமே வடிவாக நிற்கும் கோரமான காட்சி அவர் மனத்தையும் சற்று வருத்தியது. ஆகையினால் "இக் கேஸை அவசரமாக நாம் விசாரணை நடத்துவது சரியல்ல." என்று தீர்மானித்து அவர்கள் கேட்டவாறே உத்தரவு கொடுத்து இரு போலீஸ் வீரர்களை நோக்கி "இக் கேஸின் விஷயமாக ஆராய்வதற்கு அவர்கள் கேட்டுக்கொள்ளுகிறபடிக்கு சாவகாசம் கொடுப்பது சரியாகத் தோன்றுவதால் பெரிய சர்ஜனைக் கொண்டு ப்ரேத சோதனையை மறுமுறை நன்றாகச் செய்யும்படி உத்தரவு கொடுத்தேன். இக் கேஸை நாளையதினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்." என்று உத்தரவு பிறப்பித்தார்.

பிறகு எல்லோரும் போலீசாருடன் பெரிய ஸர்ஜனை அழைத்துக்கொண்டு பிணம் கிடக்கும் விடுதிக்குச் சென்றார்கள். அதற்குள் அங்கு பிணத்திற்குச் செய்யவேண்டிய சகலமான சடங்குகளையும் முடித்துக்கொண்டு பிணத்தைத் தூக்கிச் சென்றுவிட்டார்கள். இந்த செய்தியை அறிந்த விமலநாதன் துடிதுடித்துவிட்டான். போலீஸ் இன்ஸ்பெக்டரை நோக்கி, "ஐயா! நம்முடன் வரும் மனிதன் தன் பெண் இறந்துவிட்டாள் என்று வெகுவாகக் கத்திக்கதறினானே! அப்படிக்கு அது உண்மையாக இருக்கும் பக்ஷத்தில் தான் அங்கிருக்கையிலே சவத்தை அடக்கம் செய்துவிட மனம் வருமா! உலகத்தில் அவ்விதம் சகஜமாக நடக்குமா! இதிலிருந்தே நீங்கள் இதன் உண்மையை அறியலாம். நாம் இப்போது உடனே ச்மசானத்திற்குச் சென்று அச் சவத்தைப் பிடிக்கவேண்டும்." என்றான். உடனே எல்லோரும் வெகு வேகமாக வண்டியைச் செலுத்திக் கொண்டு பிணம் செல்லும் வழியைத் தேடிச் சென்றார்கள். அப்போதுதான் பிணம் ச்மசானத்தினுள் புகும் சமயமாயது. போலீஸார் தட தட வென்று சென்று வழி மறித்துப் பிணத்தை கீழே இறக்கினார்கள்.

ஒரு மனிதன் நோயினால் பீடிக்கப்படும்பொழுதுதான் அவனுக்குத் தடபுடலான உபசாரணைகள் நடக்கின்றன. பசியைக் காணாது குமட்டலுடனிருக்கையில் நிமிடத்திற்கு நிமிடம் 'கஞ்சி வேண்டுமோ! காபி வேண்டுமோ!' என்று பேருக்குப் பேர் கேட்பது. இந்த உபசாரம் நன்றாக இருக்கையில் யாருக்கேனும் நடக்கிறதா! அரிதுதான். அவசியமும் இன்றுபோலும்!

பிணத்தைத் தூக்கிச் சென்றோரும், பிணத்துடன் கூடச் சென்றோரும் இந்த எதிர்பாராத செய்கையைக் கண்டு நடுநடுங்கிப் போய், "இன்றோடு நமது முடிவு வந்துவிட்டதா என்ன?" என்று மனத்தில் திகில் பிடித்து நின்றுவிட்டார்கள். விமலநாதன் போலீஸாருடன் வந்த மனிதனை நோக்கி, "ஐயா! இவள் தங்கள் புதல்வி யல்லவா!" என்று கேட்டான். அதற்கு அந்த மனிதன் "ஆமாம்" என்று சளைக்காமல் கூறியதோடு அச்சவத்தின் மீது விழுந்து புரண்டு அழ வாரம்பித்தான். அவ்விடத்திலேயே சர்ஜன் அந்தப் பிணத்தை சோதிக்கத் தொடங்கினர். அவருடன் கூட இன்னும் சில டாக்டர்களும், சுலோசனாவின் ஆஸ்பத்திரியின் பெரிய டாக்டர் 'தலைவி' முதலியோரும் கூடவே இருந்து ஒவ்வொருவரும் நன்றாகக் கவனிக்கலானார்கள்.

அச்சமயத்தில் ஒரு மோட்டார்கார் வெகு வேகமாக வந்து அங்கு நின்றது. அதிலிருந்து சுலோசனாவின் பெரிய டாக்டரும் ராமசந்திரனும் அங்கு பதைக்கப் பதைக்க இறங்கி ஓடிவந்தார்கள். டாக்டர் சுலோசனாவை சேர்த்து அணைத்துக்கொண்டு "ஆ! என் செல்வி! சுலோசனா! இதென்ன பேரிடிபோன்ற விஷயம்! எந்தப் படு பாவிகள் இவ்விதம் உன்மீது இத்தகைய அபாண்டப் பழியைச் சுமத்தினார்கள்? அவர்கள் ஒருபோதும் கடவுளால் மன்னிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் நாசமாய் நிர்மூலமாகிவிடுவார்கள். சுலோசனா! நீ சற்றும் கவலைப்படாதே!" என்று வெகு அன்புடன் கூறினாள்.

ராமசந்திரன் சுலோசனாவின் அருகில் வந்து "சுலோசனா! நீ என்னை எவ்வாறு நினைத்திருக்கிறாய் என்பதை நீ நோக்கும் நோக்கே எனக்குக் காட்டுகின்றது. உன்னை நான் வேண்டிக்கொள்வதாவது, நீ ஒரு நிமிடநேரம் இப்படி தனித்தவிடத்திற்கு வா; உன்னோடு நான் சில முக்கிய விஷயங்கள் பேசவேண்டும். வித்யாசமாக எண்ணாதே!" என்று ரகஸியமாகக் கூறி யழைத்தான். இதைக் கேட்ட

கோயாளியின் பக்கலில் கூட்டங் கூடி பேசுவது மகா பிசகு. அது தெரியாமல் சிலர் அவ்வாறு செய்கிறார்கள். அச் செய்கையினால் பல கேடுகள் விளையும் என்பதை பிறர் எடுத்துக் கூறினும் சில மூடர்கள் கேட்பதே இல்லை.

சுலோசனாவுக்கு அதை உண்மை என்று நம்புவதற்கு மனந்துணிய வில்லை. விமலநாதனுக்கும் மனம் பதைக்கின்றது; எனினும் அங்கு நடக்கும் ப்ரேத சோதனையில் அவன் கலந்துகொண்டிருப்பதால் அதை விட்டு வருவதற்கில்லாது போயிற்று. சுலோசனா ராமசந்திரன் செய்கையினால் மனவெறுப்பு கொண்டிருக்கிறாள் எனினும் அதைத் தன் பெரிய டாக்டரிடத்தில் இது காறும் தெரிவித்ததில்லை பாகையினால் அந்த அம்மாள் எதிரே இருப்பதால் தனது வித்யாஸத்தைக் காட்டினால் அந்த அம்மாள் என்ன நினைப்பார்களோ என்கிற பயத்தினால் அவன் அழைத்தவாறு சற்று தூரத்தில் சென்றாள். அவளைக் கண்ட ராமச்சந்திரன் தன் னிரு கைகளையும் வணங்கிக் கூப்பியவாறு "சகோதரீ! சுலோசனா! என்னுடைய மாறுதலைக் கண்டு நீ வியப் படைந்து என்னை நம்பாமலிருக்கலாம். ஆனால் இந்த மாறுதல் கடவுள் மீது ஆணையாக உண்டாகிய உண்மை மாறுதலேயன்றி வேஷமல்ல. அன்று இரவு நீ உன் வீட்டிற்குச் சென்ற பிறகு நான் சென்று விசாரித்ததில் அவை யாவும் சுத்தப் பொய் என்றும் யாரோ வேண்டுமென்று செய்த கட்டுக்கதை என்றும் தெரியவந்தது. அப் போது எனக்குண்டாகிய வியப்பிற்கு எல்லை இல்லை. பிறகு என் தாயும் சகோதரியும் சுகமே வந்து சேர்ந்தார்கள். அன்று செல்ல மறுநாள் நான் உன்னைத் தேடிக்கொண்டு வருகையில் நீ உன் வீட் டில் காணமையினால் விமலநாதனின் வீட்டிலிருப்பாய் என்று அங்கு வந்தேன். அது உனக்கும் தெரிந்திருக்கலாம். அந்த சமயம் உன் னிரு அழகிய கரங்களும் விமலநாதனின் கரத்தில் ஐக்கியமாகி இருந் ததைக் கண்டு அப்போது என் மனத்தில் உண்டாகிய பொறாமை அலைகளைக் கூறச் சாத்யமன்று. என் வயிறும் இதயமும் கொதித் தெழுந்த வேகத்தில் உங்களிருவரையும் கொலை செய்துவிடும் தூர்த் தச் செய்கைக்குக் கூட இப்பொழும் மனம் துணிந்தது. "அந்த அயோக்யப் பயலா" என்று விமலநாதன் சொன்ன மொழிகள்

கன்னியாப் பெண்கள் கழுத்தில் தாலியையும் ப்ரம்மச்சாரியின் கழுத்தில் இரட்டைப் பூணூலையும் இந்த மாதம் கொண்டு வந்து விட்டதாம். யார் யார் 'கழுத்தில் என்னென்ன நகைகள் விழுந்திருக்கின்றன சொல்லுங்கள் பார்க்க லாம்.

என் செவியில் பட்டவுடன் என் குரூர எண்ணங்களின் கொடிய வெள்ளம் கரை புரண்டுவிட்டது. உடனே நான் மனத்தில் ஏதேதோ எண்ணிக்கொண்டு என் கையிலிருந்த புகைப் படக் கருவியினால் உங்களை அந்த நிலைமையிலேயே சட்டென ஓர் போட்டோ எடுத்தேன். உங்களிருவருக்கும் தீங்கிழைக்கவே அதைச் செய்தேன். பிறகு நான் வீட்டுக்குச் சென்றேன். ஒன்றுமே தோன்றாது சற்று தத்தளித்தேன்; புரண்டேன். எந்த வழியில் என்ன தீங்கு செய்யலாம் என்று யோசித்தேன். உடனே அந்தப் படத்தை க்ளீன் செய்து தயாராக்கினேன். அதை வைத்துக் கொண்டு பலமுறை பார்த்தேன். என்னுடைய ஆத்திரம் பொங்கி வழியத் தொடங்கியது. பின்னும் அப்படத்தில் அச்சமயம் நீங்களிருவரும் அடைந்த ஆநந்தத்தின் ஜோதி முகத்தில் தாண்டவமாடுவது நன்றாகத் தெரிந்ததாகையினால் அதையே வைத்துக் கொண்டு வெகு நேரம் பார்த்தேன். அச்சமயம் என் மனமே என்னைப் பல கேள்விகள் கேட்கத் தொடங்கியது. அதாவது, "இத்தகைய மன மொன்றுபட்ட தம்பதிகளைப் பிரிக்கவும், காதலற்ற நங்கையைக் கடி மணங்கொள்ளவும் நீயேன் முற்படுகின்றாய்!" என்று ஒரு கேள்விப் பிறந்தது. நான் உன்மீது உயிர் வைத்துவிட்டதனாலன்றோ உன்னை படைய விரும்புகிறேன். அதேபோல நீ பாலியம் முதல் விமலநாதனின் ப்ரியத்திற்குப் பாத்திரமாகி இருப்பதை மறக்கக்கூடுமா! அது சாதாரணமான செய்கையா! அங்ஙனம் நடக்க மனமிசையுமா, என்று நானே யோசிக்கத் தொடங்கினேன். எனது நிலைமையை நான் முற்றும் நினைத்து அதோடு உன்னை ஒத்திட்டுப் பார்த்ததில் நான் செய்தது அக்ரமம்; செய்வதும் அனியாயம் என்று என் மனமே எனக்குக் கூறியது. அதனால் என் மனத்தை நான் இனி மாற்றிக்கொண்டு உன்னை மறந்துவிடுவதற்கான முயற்சிகள் செய்யவேண்டும் என்ற தீர்மானத்தை வெகு ப்ரயாசைப்பட்டுக்

கொசு உபத்திரவத்தைப் பொறுக்கமாட்டாது ஜப்பான் தேசத்து 'மஸ்டோல்' (கொசு ஸம்ஹாரி) கொளுத்திவைத்து நீக்கினால் அது அன்று மட்டுந்தான் ஒழிகின்றது; இனமாக ஜாதகத்தின் பலனைக் கேட்போருக்கு ஏதேனும் ஒருவாறு பலன் கூறி யனுப்பினால் மறுபடியும் வந்து பிடிக்கின்றார்கள் என்கிறார் ஓர் அநுபவி.

கொண்டு வந்தேன். அந்தவிதமான போராட்டத்தினின்று ஒரு முடிவுக்கு வராமல் என் மனம் பல நாட்கள் தத்தளித்தது. அவ்விலைமையில் நான் பார்த்த சில சினிமாக் காட்சிகளிலும், உண்மைக் காதலுள்ளவர்களைப் பிரித்து வேறொருவன் மணக்க முயன்று செய்யும் சூழ்ச்சிகளும், அதனால் அவனுக் குண்டாகிய ப்ரதிகூலங்களும் கடைசியில் அப்பெண் அவன் பொருட்டு உயிர்விடுவதுமான கோர காட்சியே இருந்தது. இவைகளிலிருந்து, என்னுடைய எண்ணம் ஈடேறுவது துர்லபந்தான் என்று தீர்மானித்துவிட்டேன். பிறகு என் வீட்டு வேலைக்காரர்கள் ஒன்றுகூடிப் பேசிக்கொண்டதை நான் தற்செயலாகக் கவனித்தேன். அப்போது அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து, என்னுடைய சமயல்காரன் உனது உண்மையான யோக்யதையையும், மனப்போக்கையும் அறிந்து நீ அப்போது ஆபத்தான நிலைமையில் சிக்கிக்கொண்டிருப்பதைக் கண்டு அவனே என் தாயாருக்கு ஆபத்தென்று கூறி உன்னை உன் வீடு செல்ல வழி செய்துவிட்டதாகத் தெரிந்துகொண்டேன். அப்போது எனது துஷ்க்ருத்தியங்கள் கண்ணெதிரில் தெட்டெனத் தோன்றின. "ஆகா! கேவலம் வேலைக்காரனுக்குள்ள அறிவும், பரிதாபமும் நம்மிடமில்லையே" என்று விசனித்தேன். வேரூன்றிப் போன விருக்ஷத்தை வெட்டுவது கூடுமான காரியமா! நாம் அனியாயமான காரியத்தில் தலையிடத் தீர்மானித்தோமே என்று என் மனமே என்னை யறியாது திடீரென்று மாறிவிட்டது. பிறகு எனது விடுதியில் வந்து வெகு நேரம் யோசனை செய்தேன். எனது ஜன்மத்தில் இனி உன்னை எனது சகோதரியாக நினைப்பதே யுக்தமன்றி வித்யாசமாக எண்ணலாகாதென்று சபதம் செய்துகொண்டு அன்றே என் மனச் சாந்தியின் பொருட்டு இவ்வூரை விட்டு வெளியூர் சென்று இதுகாறும் அங்கு தங்கி இருந்து நேற்றிரவே இவ்வூர் வந்தேன். இன்று காலை உன்னைக் காண்பதற்கு உன் வீட்டிற்குச்

நாம் பெரும் நிதியாக எண்ணி இருக்கும் மனிதரின் வருகையைக் கோரி வெகு நாட்கள் எதிர் பார்த்திருக்க, அக்கனவானும் வந்து சற்று நேரமிருந்து அன்புடனிட்ட அமுதை உண்டு செல்கிறார். மணி கணக்கிற்கு நேரம் அதிகமாகச் சென்றுவிடுகின்றதே யன்றி மனத்திற்கு ஓர் கனவுபோல ஆய்விடுகின்றது.

சென்றேன். உன்னைக் காணோம். விசாரித்ததில் இந்த விபரீதச் செய்திகள் காதில் கேட்டதும், உடனே என் தாயுடன் இங்கு ஓடி வந்தேன். எனது மன மாற்றத்தையும் உனக்குத் தெரிவித்து, இதுகாறும் இழைத்த தீங்கிற்கு மன்னிப்பு பெற்றுக்கொண்டு, என்னாலான உதவியைச் செய்து இந்த கேஸில் உன்னை விடுதலை செய்ய முயற்சிக்கவே நான் இப்போது இங்கு வந்தேன். என்னுடைய முன்னர் செய்கையினால் இப்போது நானுரைக்கும் வார்த்தைகளை நீ உடனே நம்ப முடியாதது வாஸ்தவமே! இதோ உன் குலதேவதையின் மீது ஆணையாக சத்தியம் செய்கிறேன். இனிமேல் என்னை உன் கோபியைப் போன்று ஓர் சோதரனாக ஏற்றுக் கொள்ளத் தடை இல்லையே!'' என்று வெகு வணக்கத்துடன் கேட்டான்.

இந்த அதி ஆச்சரியமான மாறுதலைக் கண்ட சுலோசனாவின் மனம் கட்டுமீறிய வியப்பையும் திகைப்பையு மடைந்தது. அவன் கூறுவதை எவ்வாறு நம்புவது என்கிற கேள்வியும் அவள் மனத்தில் உதித்தெழுந்தது. க்ஷணநேரம் ஏதும் பேசாது மவுனமாக நின்றாள். பிறகு பேசத்தொடங்கி ''அண்ணா! தங்களுடைய வார்த்தையை நான் திடீரென்று நம்புவதற்கு என் மனம் இடந்தரவில்லை. எனினும் உங்களுடைய தாயாரின் முகத்தைக் கருதியும், நீங்கள் கடவுள்மீது ஆணை யிட்டதை நம்பியும் நான் உங்கள் வார்த்தையை ஏற்றுக்கொண்டு உங்களை என் சகோதரனைப் போன்று பாவிக்கத் தீர்மானித்தேன். என் பொருட்டாக உதவி புரிய வந்துள்ளதற்காகத் தமக்கு அனேக வந்தனங்கள். வாருங்கள்; அங்கு செல்வோம்.'' என்று கூறி அவனையும் அழைத்துக்கொண்டு அங்கு பிணம் சோதிக்கும் இடத்திற்குச் சென்றாள். அனேக பெரிய வைத்தியர்கள் சேர்ந்து சவத்தை சோதனை செய்துப் பார்த்ததில் அந்தப் பெண் இறந்து சுமார் 24 மணி நேரத்திற்குக் குறையாமலா ஜின்றது. அதாவது நேற்றுக் காலை 10 மணி சுமாருக்கு உயிர் நீங்கி இருக்கிறது. இந்தப் பெண்ணின் தேகத்திலுள்ள உறுப்புக்

''வீட்டிலிருக்கும் சகலமான சொத்துக்களையும் யார் வேண்டுமாயினும் எடுத்துச் செல்லட்டும். என் பொழுதை மட்டும் வீணாகக் கொள்ளை கொள்ளாமல் சென்றால் அதுவே எனக்குப்போதும்,'' என்கிறார் ஒரு பண்டிதர்.

களெல்லாம் மிகவும் நொந்து புண்பட்டிருப்பதை நோக்கின் அவள் உயிருடன் இருந்த காலையில் அளவிலாத வருத்தத்தை அடைந்து கஷ்டப்பட்டதாகத் தெரிகின்றது. அவள் இறக்கும்போது அவளுடைய (ஹார்ட்டு) இருதயம் வெகு தைரியத்துடனும், சந்தோஷத்துடனும், இனி தன் கஷ்டம் தீர்ந்தது என்கிற ஓர் நம்பிக்கையுடனும் இருந்து அதே நிலையில் உயிர் நீங்கி இருக்கிறது. அதனை கவனிக்குங் கால் இதைத் தற்கொலை என்று கூறலாம்.......ஏன்? தற்கொலை தான் என்று திட்டமாகக் கூறலாம். இந்த விஷத்தைப் பலாத்காரத்தினாலோ, அன்றி தன்னை அறியாமலோ குடித்ததாகத் தெரியவில்லை. இதை அந்தப் பெண் தெரிந்துதான் சாப்பிட்டிருக்கிறாள். இந்த விஷம் வெகு விரைவில் ரத்தத்தில் கலந்திருக்கிறது. உடனே உயிர் நீங்கிவிட்டது. மற்றும் இந்தப் பெண் நிமிடத்திற்கு நிமிடம் பயந்து பயந்து நடுங்கியதாகவும் தெரிகிறது. இவ்வளவுதான் விஷயம்'' என்றார்கள்.

இந்த இதி அத்புதமான வார்த்தையைக் கேட்ட எல்லோருக்கும் தாங்க வியலாத சந்தோஷமும், ஆச்சரியமும் உண்டாகிவிட்டன சவத்தைச் சேர்ந்தவர்களுக்கு உண்டான மனக் கொதிப்பும், முகமாறுதலும் கூறற்பாலதன்று. விமலநாதன் துள்ளி குதித்துத் தாண்டவமாடியவாறு, பெண்ணைப் பறிகொடுத்த புண்ணிய சீலரே! இப்படி வாரும், நேற்றிரவு எட்டு மணிக்குமேல் நீர் சுலோசனாவை அழைத்துச் சென்றதாகவும், அதன்பிறகு அவன் மருந்து எழுதிக் கொடுத்ததாயும், அதை நீங்கள் வாங்கிக் கொடுத்த பிறகு உங்கள் பெண் இறந்ததாகவும் கேஸ் ஜோடித்து விட்டீரே! பொய்யுரைப்பதிலும் பொருத்தம் வேண்டாமா! நேற்றுக் காலையில் இறந்துவிட்ட இப்பிரேதத்தை வைத்துக்கொண்டு நீங்கள் கேவலம் பேதையாகிய சுலோசனாவின் மீது பழி சுமத்தி அவனை நாசமுற எண்ணியதை அந்தக் கருணைவள்ளல் தான் பொறுப்பானா! அனா

பொய்யும் பித்தலாட்டமும் செய்து ஒரு அல்ப காரியத்திற்கு அறிவிலித் தன்மையாக சில மூடர்கள் வாதாடுகின்றார்கள். அந்த வாதாடியவர்களே அக்காரியத்தைச் செய்தாரென்று ரூபித்துவிடுங்காலையிலோ முகம் கொலை செய்த களையை யடைந்துவிடுகின்றது.

னைக்கு அந்த ஆபத்சகாயன் துணை புரியாது விலகுவானு! வாரு மையா இப்படி! என் தூர நிற்கின்றீர்? இந்த ஒரு சாக்ஷியே உம்மை ஏமாற்றிவிட்டது. இருக்கட்டும், விஷம் வாங்கியதாக போலீஸா ரிடத்தில் நீர் தெரிவித்த விலாசப்படி அவர்கள் விசாரிக்கச் சென் றிருக்கிறார்கள்.........ஆ! அதோ அவர்களும் வந்துவிட்டார்கள். என்ன செய்தி! என்ன செய்தி!" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

போலீஸாருடன் வந்த கடைக்காரன் திருகத் திருக விழித்துக் கொண்டு நிற்கிறான். அவனை சவத்தின் மனிதர்கள் உற்று விழித்து விரைககக் கவனிக்கின்றார்கள். கடையை சோதிக்கச்சென்ற போலீ ஸாருடன் விமலநாதனின் குமாஸ்தாவாகிய வேங்கடம் சென் றிருந்தானுகையினுல் அவன் பேசத்தொடங்கி "லாயரே! உண்மை வெளியாகிவிட்டது. பாஷணம் விற்கும் ஒவ்வொரு கடைகளிலும் அன்றாடம் விற்ற அளவையும், கைவசமிருக்கும் அளவையும் பதிவு செய்யவேண்டியது க்ரமம். அவ்வாறு இவன் புத்தகத்தை எடுத் துப் பார்த்ததில் அந்தவிதமான விஷம் நேற்று இரவு விற்றதாக கணக்கும் இல்லை. பத்து தினங்களுக்கு முன்பு விற்ற பிறகு அளவு எடுத்து அப்படியே குறையாமலிருக்கிறது. ஆகையினுல் இங்கு வாங்கினுன் என்பது ஒரு பெரும் புளுகு மூட்டையாயிற்று. இந்த மனிதனை அரஸ்டு செய்திருக்கிறார்கள். இவனை மிரட்டிக் கேட்டதில் இவனிடத்தில் இந்தப் பாவிகள் சென்று சில தினங்க ளாக சினேகம் செய்துகொண்டதாயும், விஷம் விற்றதாயும் அவர்கள் வாங்கியதாயும் கூறினுல் ஆயிரம் ரூபாய் இனும் தருவதா யும் அவர்கள் தெரிவித்து 500 கையில் ரொக்கமாகக் கொடுத்தா யும் உண்மையைக் கூறிவிட்டான். பணத்தில் பேராசையினுலும், காரியம் இவ்வளவு தூரம் வரும் என்பதை அறியாததனுலும் இவ் விதம் செய்தானும்" என்றான்.

அறிவாளிகளின் வருகையே ஓர் ஆநந்தம். அவர்களும் நமக்கு ஆப்த மித்திரர்களாக விருப்பின் பின்னும் சுதந்தரத்துடன் மனம் பூரிக்கின்றது. ச்வாதந்திரியமாகப் பேசி மற்றொரு முறை வரும்படி யழைக்கும் தைரியமும் பிறக்கின்றது.

இது கேட்ட சுலோசனை, விமலநாதன் முதலியவர்களுக்கு மிக்க சந்தோஷமுண்டாகிவிட்டது. பிறகு போலீஸார் அந்தப் பெண்ணின் தகப்பன் என்பவனையும், மற்றவர்களையும் நோக்கி, "ஐயா! இந்த கேஸ் வெறும் ஜோடிப்பான பொய்க் கேஸ் என்பது ப்ரேத சோதனையினாலும், விஷத்தின் உண்மையினாலும் நன்கு விளங்கிவிட்டது. ஆகையினால் நீங்கள் சுலோசனம்மாள்மீது காட்டிய அபாண்ட குற்றத்திற்காக உங்களை எல்லோரையும் இதோ அரஸ்ட்டு செய்கிறோம்" என்று கூறி எல்லோரையும் பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் தாம் பேசுவதையே திரும்பத் திரும்பப் பேசி வாதம் செய்யத் தொடங்கினார்கள். போலீஸாருக்கும் அவர்கள்மீது அதிகமான ஆத்திரமுண்டாகியதால் அவர்கள் அப் பிணத்தைத் தாம் சொல்கிற பரியந்தம் சுடலாகாதென்று கூறி அவர்களில் சிலரை வீட்டிற்கு அழைத்துச் சென்று சோதனை செய்யலானார்கள். வீட்டை சோதனை செய்யுமிடத்தில் சினிமாவில் நடிக்கும் நடிகர்களின் போட்டோக்கள் சில மாட்டியிருப்பதைக் கண்டார்கள். அதோடு சினிமா எடுக்கப்பட்ட சிறிய பிலிம் (புகைப்படம்) அனேகம் செட்டு செட்டாக ஓர் பெட்டியிலிருக்க அதை முற்றும் ஆராய்ச்சி செய்து பார்த்ததில ச்யாம்சுந்தர் பிலிம் கம்பெனியைச் சேர்ந்ததென்று போலீஸார் திட்டமாகத் தெரிந்துகொண்டவுடன் ச்யாம்சுந்தருக்கும் இந்த மனிதர்களுக்கும் ஏதோ சம்மந்தமிருக்கிறது என்பதை தீர்மானித்து உடனே அவனை அழைத்துவரும்படியாக சில போலீஸ் வீரர்களை அவனிருக்குமிடத்திற்கு அனுப்பிப் பின் தாங்கள் மற்றவைகளை மீண்டும் சோதனைபோடத் தொடங்கினார்கள். அதில சில கடிதங்கள் கிடைத்தன. ச்யாம்சுந்தர் வெளியூரிலிருந்து எழுதி இருக்கிறான. அவற்றின் சாராமாவது, "சுலோசனாவை எப்படியாவது நீங்கள் நல்லதனம் செய்து இந்த கம்பெனியில் சேர்த்துவிடுவதற்கு வாக்குறுதி யளித்திருப்பது பற்றி நான் உங்களுக்கு எனது நன்றியறிதலைச் செலுத்துகின்றேன். நீங்கள்

மனிதவகையில் ஒற்றுமை பிறப்பதுதான் குதிரைக் கொம்பாக இருக்கின்றது. ஆனால் வேறு வேறு ஜாதியனாகிய மூட்டைப் பூச்சியாரும், கொசுவாரும் என்ன அன்யோன்ய பாவத்துடன், ஒன்றுபட்ட மனத்துடன் இரவு முற்றும் மக்களைத் தாவித் தழுவிக் காப்பாற்றுகின்றார்கள்!

கொடுத்த உறுதி மொழிக்காக இதோடு 1000 ரூபாய் செக்கு அனுப்பி இருக்கிறேன்; பெற்றுக்கொள்ளுங்கள். காரியம் முடிந்த வுடன் நான் சொல்லிய தொகையைக் கொடுக்கிறேன்'' என்ற விஷயமே காணப்பட்டது. மற்றொரு கடிதத்தில் நான் இன்னும் நான்கு நாட்களில் அங்கு வருகிறேன். இங்கு காட்டில் எடுக்க வேண்டிய படம் எடுத்தாயிற்று. அந்தப் பெண் நிரம்பவும் உபத் திரவப்படுவதாக எழுதி இருப்பதைக் கவனித்தேன். அவளை நல்லதனம் செய்யும் பொருட்டாகவே நான் வெளியூர்களுக்கெல் லாம் அழைத்துச் சென்றேன். போதையை யுண்டாக்கும் மருந்து களைக் கொடுத்தும் நம் வழி செய்யப் பார்த்தேன். அவள் ஒன்றி லும் திரும்புவதாகக் காணுமையால் உங்களிடம் விட்டேன். அங் கும் இவ்விதமே இருப்பது வருத்தமாக இருக்கிறது. சுலோசனு வுக்கு ஈடான எழிலுடைய நங்கை நல்லாளாக விருப்பதால் அவளை எவ்விதமேனும் நல்வழிப்படச் செய்தால் நமது கம்பெனிக்கு அள வற்ற புகழும் பேரும் கிடைக்கும் என்று நினைக்கிறேன். அவள் இருப்பதைப் பார்த்தால் தற்கொலை செய்துகொள்வாள்போ லிருக் கிறதென்று எழுதி இருப்பது பயங்கரமாக விருக்கிறது. நமது கைப்பெட்டியிலுள்ள விஷங்கள் ஏதேனும் அவள் கையில் அகப் படப்போகிறது! ஜாக்ரதையாக மறைத்துவிடுங்கள்'', என்று எழுதி இருந்தது.

இவைகளை எல்லாம் படித்த போலீஸார் இந்த கேஸ் தற் கொலைதான் என்று நன்றாகத் தீர்மானித்தார்கள். ச்யாம்சுந்தர் வீட் டிற்குச் சென்றவர்கள் "அவன் வீட்டிலில்லை; வீடு பூட்டப்பட்டிருக் கிறது'' என்று தெரிவித்தார்கள். ச்யாம்சுந்தருக்கும் இவர்களுக் கும் உள்ள சம்மந்தம் அக்கடிதங்களினால் நன்கு விளங்கிவிட்டதால் இன்னும் அவ்வீட்டை பலமாக சோதனைபோடத் தொடங்கினார்கள்.

பெரிய சமஸ்தானங்களுக்கு ஒரு குழந்தை இல்லை என்று குறைப்படு கின்றார்கள். என்ன விதமான பிரயாசைப் பட்டும் பயன் ஏற்படுவதில்லை. ஆனால் பேன் வகைகளின் கூட்டத்திலோ பாம்பரை விருத்திக்குப் பஞ்சம் ஏற்படுவதே இல்லை. தலை யுலகில் நிலைபெற்ற செங்கோலைச் செலுத்து கின்றன.

வீட்டின் ஒரு பாகத்தில் சில பெண்மணிகள் புலம்பிக்கொண்டே இருக்கக்கண்டு அவர்களிடம் சென்று "நீங்கள் யார்! உங்களுக்கும் இந்த கம்பெனிக்கும் என்ன சம்மந்தம்?" என்று கேட்டார்கள்.

அங்குள்ள சில பெண்கள் "ஐயா! நாங்கள் இக் கம்பெனியில் நடிக்கின்றவர்கள். நாங்களாகவே இஷ்டப்பட்டு வந்து சேர்ந்தவர்கள். நடிக்கும் வேளை தவிர மற்ற நேரத்தில் நாங்கள் இங்கிருப்பது. இதுதான் எங்களுக்குத் தெரியும்." என்றார்கள். அக் கூட்டத்தில் ஒரு மாது ஓயாது புலம்பிக்கொண்டிருந்தாள். அம் மாது இந்த போலீஸ் கூட்டத்தைக் கண்டதும் வெகு துணிபுடனும், வீரா வேசத்துடனும் எழுந்து அவர்களின் காலில் விழுந்து, "ஐயா! நீங்கள் உண்மையில் போலீஸாரா, அன்றி போலீஸ் வீரர்களைப் போன்று நடிப்பவர்களா? எனக்கு உண்மை தெரியவில்லையே!" என்றாள்.

இதுகேட்ட போலீஸார் "அம்மா! நீங்கள் எங்களைப் பற்றிச் சிறிதும் சந்தேகிக்க வேண்டாம். நாங்கள் உண்மையில் போலீஸார் தான். உங்களுக்குத் தெரிந்த விவரத்தைக் கூறினால் உங்களை நாங்கள் சும்மா விட்டுவிடுகிறோம்" என்றார்கள். உடனே அம்மாது பேசத் தொடங்கி "ஐயா! நாங்கள் சுத்த நாட்டுப்புறம். எனக்கு என் மகளைத் தவிர வேறு கதி இல்லை. அன்றாடம் கூலி வேலை செய்து நாங்கள் பிழைத்து வந்தோம். என் மகளுக்கு நல்ல எழில கடவுள் அளித்திருந்தார் ஒரு தினம் நாங்கள் குளத்தில் நீர் திரட்டுகையில் இந்த கம்பெனியின் சொந்தக்காரன் அங்கு எங்களைக் கண்டு எங்களைத் தன்னுடன் வரும்படியாயும், நல்ல சம்பளம் தருவதாயும், பெண்ணை ஆதரிப்பதாயும் கூறி அழைத்தான். அந்த வார்த்தையை நம்பி நாங்கள் வந்துவிட்டோம். இவ் விடத்திற்கு வந்த பிறகே இது ஒருசினிமா நடிக்கும் இடம் என்றும் இவன் சோதா வென்றும் தெரிந்தது. என் பெண் மிக மானவதி.

அசட்டுத்தனமுடைய சுபாவத்தினர் பேசுவதும், நகைப்பதும், வேலை செய்வதும் யாவும் அந்த அசட்டுத் தன்மையுடனேயே விளங்குகின்றன. சாமர்த்தியமும் சமத்காரமும் அவர்களிடம் கனவிலும் காண முடிவதே இல்லை.

அவளை இவர்கள் இங்கு கொண்டுவந்தவுடன் ஆடை யாபரணங்கள் கொடுத்தார்கள். அவைகளை என் பெண் ஏற்றுக் கொள்ளவில்லை. பிறகு அவளை நடிக்கும்படியாயும், தீத் தொழில் புரியும்படியாயும் உபத்திரவம் செய்தார்கள். அந்த இம்சையைத் தாங்காது நாங்கள் வெளியேறிவிட நினைத்தால் விடமாட்டேனென்று சிறையில் வைப்பது போல வைத்துவிட்டார்கள். அதன்பிறகு அந்த படுபாவியிடம் சிக்கி அவதியுறுவதை விட விஷத்தைக் குடித்து உயிர் துறப்பது நலமென்று எப்படியோ விஷத்தைக் குடித்து பிறகு இதோ இந்தச் சீட்டை என்னிடம் கொடுத்துப் பின்னர் உயிர் நீத்தாள். அந்த உத்தமியின் உயிர் நீங்கியது. எனக்கு மார்க்கமும், மருந்தும் இடைக்காது வருந்தினேன். பிறகு என்னை ஒரு விடுதியில் போட்டுப் பூட்டிவிட்டு சவத்தைக் கொண்டுபோய் விட்டார்கள். என் கண்மணியை இன்னமும் என்முன் காட்டவில்லை. அவர்கள் என்ன விபரீதத்தை எண்ணி இந்த விதம் செய்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நேற்று காலை முதல் நான் புலம்பியவாறே கிடக்கின்றேன். எனக்கு விஷயமும் தெரியவில்லை. என்னுயிரும் நீங்கவில்லை. என் கண்மணி எங்கே! எரிந்துவிட்டாளா! சாம்பலாகி விட்டாளா! ஹா! செல்வி! செல்வி!" என்று உண்மையான புத்திர சோகத்தினால் கதறிக் கண்ணீர் வடித்தாள்.

அதைக் கண்ட போலீஸார் அந்த மாதை தனியாகத் தம்முடன் அழைத்துக்கொண்டு வெளியில் வந்து பெண்ணின் பிதாவென்று கூறிய மனிதனை நோக்கி, "ஐயா!" என் பெண் என்று பாசாங்கு செய்தீரே. இந்த அம்மாள் தங்கள் மனைவியோ? வெகு யோக்யமாக விழிக்கின்றீரே! நீர் இப்போது உண்மையை உரைக்காவிடின் உமக்கு வெகு கஷ்டங்கள் நேரும். உண்மை உரைப்பின் உங்

பணக்காரராக விருப்பினும் அலுத்துப் படுத்திருந்தால் அதற்கு வம்புக்காரர்கள், "ஐயோ! அந்த வீட்டில் மூதேவி போல் எப்போதும் படுத்துக் கிடக்கிறார்கள். அங்கு செல்ல யாருக்குப் பிடிக்கும்?" என்கிறார்கள். மேற்படியார் தெம்பாக நடமாடினாலோ, "ஐயோ! அவர்களின் பணத் திமிரால் என்ன சந்தோஷப்படுகிறார்கள்! என்ன உலாவுகிறார்கள்! வீட்டில் தங்காது ஓடுகிறார்கள்!" என்கிறார்கள். இரண்டு வழிகளிலும் வம்பு தானா? என்ன உலகம்!

களை விடுதலை செய்துவிடுவோம்" என்ருர்கள். அதற்கந்த மனிதன் "ஐயா! போலீஸார் பெரிய அட்டகாசம் செய்வது வழக்கந்தான். தற்போது நீங்கள் ஏமாராமலிருக்கவும், ப்ராணனைக் காப்பாற்றிக் கொள்ளவும்வேண்டுமாயின் அதோ அந்த அம்மாளின் இரு கைகளை யும் முதலில் கட்டுங்கள். பிறகு உண்மையை விளக்குகின்றேன்." என்று ஒரு சேவனிடத்தில் ரகஸியத்தில் தெரிவித்தான். அவனும் மற்றைபோரும் உடனே வந்து அந்த மாதை திடீரென்று கையைப் பிடித்துப் பின்புறம் கட்டிவிட்டார்கள். இந்த செய்கையைக் கண்ட மற்றவர்கள் "என்ன! என்ன!" என்று விழிக்கின்ருர்கள். அந்த மனிதன் வயிற்றெரிச்சலுடன் பேசத் தொடங்கி "அட பாவி! சண்டாளா! உன்னல் என் குடும்பமே அதோகதியாகி விட்டதே துரோகி! சீச்சீ! நீ கெட்ட கேட்டிற்கு இன்னும் முட்டாக்கு வேறு! உன்னுடைய மகளென்று கூறியா நடிக்கின்ருய்! இதோ உன்னுடைய நடிப்பைக் காண்பிக்கிறேன் பார்." என்று கூறிக் கொண்டே அந்த மாதின் துணியை தடதட வென்று இழுத்துவிட்டு தலையிலுள்ள முட்டாக்கைக் களைந்துவிட்டு, "கனம் போலீஸார் அவர்களே! இதோ அம்மாளைப் பார்த்தீர்களா! இந்தச் சண்டாளன் தான் எல்லா காரியத்திற்கும் வேர்ப் புழுகு. இவன் பெண் வேடத் தில் மறைந்துகொண்டு தப்பிக்க எண்ணினன். இவன் முடிவு காலம் கிட்டிவிட்டதென்றே கூறலாம். ராஸ்கல்" என்று திட்டுகிருன். சேலைக்குள் மறைந்திருந்த மனிதனைக் கண்ட சுலோசனை திடுக்கிட்டு நடுங்கி, "அடேய் மித்ரத்துரோகியாகிய அண்ணுசாமி! நீ இந்த விதமும் செய்து உன் லீலைகளைக் காட்டுகிருயா! சீச்சீ! வெட்கங் கெட்ட பேடியே!" என்று வாய்க்கு வந்தவாறு திட்ட வாரம்பித் தாள். இந்த அதிசயக் காட்சியைக் கண்டு எல்லோரும் வியப்புற் ருர்கள். விமலநாதனும், கோபிநாதனும் தமது வயிற்றெரிச்சல் தீர அந்தப் பாவியைத் திட்டினுர்கள். போலீஸாரும் தாம் அந்த மாதின் வாக்கு உண்மை என்று நம்பி மோசம்போவதற்கிருந்ததை

"நன்றி கெட்டவர்களிடம் ஓயாது வேலை செய்து தேகம் மெலிந்து வருந்துவதைவிட அன்ருடம் அகப்படும் கூலி வேலை செய்து பிழைக்கலாம்; பட்டினி கிடந்து வருந்தலாம்" என்கிருர் ஒரு நொந்து புண்பட்ட மனத் தினர்.

எண்ணி வியந்தார்கள். அவர்களுடைய ஆத்திரமதிகரித்தது. இதைக் காட்டிக்கொடுத்த அம்மணிதன் போலீஸாரை நோக்கி "ஐயா! இந்தப் பாவியின் இடுப்பில் எத்தனை ரிவால்வரும், பிச்சுவாக் கத்திகளும் மறைந்திருக்கின்றன பாருங்கள். இந்த சேலை முக்காடில்தான் மறைந்து இருந்து உங்களை அப்படியே சமயம் பார்த்து ஒழித்துவிடுவதாக இவனுடைய எண்ணம். கடவுள் அதில் மண்ணைப் போட்டார். இறந்த பெண் இந்தப் பாவியினுடையதுமல்ல; என்னுடையதுமல்ல. நாங்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக இந்த சினிமாவில் நடிப்பவர்கள். நீங்கள் அந்தக் கடிதங்களைப் படித்ததிலிருந்து விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்கலாம். இறந்துவிட்ட பெண்ணின் சரிதை இப்பாவி கூறியது முற்றிலும் சரியில்லை. அவளுடைய தாயாரும் இன்றே கிணற்றின் வழியினல் பெண்ணிடத்திற்குச் சென்றுவிட்டாள். அந்தப் பெண் விஷத்தை யுண்டதோ, இறந்ததோ ஒன்றும் எங்களுக்குத் தெரியாது. அப்பெண் இறந்த பிறகு இந்த பாவிதான் இப்போது நடந்தவிதமான சூட்சிகளை எல்லாம் யோசித்துக்கொண்டு எங்களிடம் தெரிவித்துத் தனக்கு உதவி புரிந்தால் பேரில் 1000 ரூபாய் தருவதாகக் கூறினன். அதற்கு நாங்கள் எவ்வளவோ மறுத்தோம். எங்கள் மீதே இப்பழியை சாற்றிவிடுவதாக பயமுறுத்தியதனல் நாங்கள் பயந்துபோய் அவன் சொல்லியபடியே யாவும் பாடம் ஒப்புவித்தோம். சுலோசனனின் பெயர் அடித்த காகிதம் எப்படியோ திருடிக்கொண்டுவந்து இவன் மோசக் கையொப்பமிட்டான். அப்பெண் நேற்று காலை 10 மணிக்கு முன்னமே இறந்துவிட்டாள். வைத்தியர் சொல்லியது வாஸ்தவமே. வயிற்றின் கொடுமையினலும், பணத்தின் பேராசையினலும் நான் இந்த ஆழமறியாத சேற்றில் கால் வைத்துக்கொண்டேன். இந்தப் பாவிதான் தனக்கு விரோதியான சுலோசனனைப் பழிக்குப் பழி வாங்கும்பொருட்டு இவ்விதம் செய்வதாகவும் தெரிவித்தான். எங்களுக்கு விஷயமே

இரவல் புத்தகம் படிப்பதைப் பற்றிப் பேசினலோ, எழுதினலோ சிலருக்குக் கோபம் வருகிறது. புஸ்தகம் இரவலில் பறந்து செல்வதோ தடைபடுவதில்லை. வழக்கத்திற்கு விரோத மின்றி புதிய புத்தகமும், பழய புத்தகமும் நம்மை விட்டு விரைந்து சென்றுவிடுகின்றன.

தெரியாது. நாங்கள் செய்தது தப்பிதந்தான். தயவுசெய்து மன்னிக்கவேண்டும்.” என்று காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டான்.

இந்த வரலாற்றை எல்லாம் கேட்ட போலீஸாரும், மற்றபோரும் பேராச்சரியமடைந்து அண்ணுசாமி இடுப்பிலிருந்த ஆயுதங்களை எடுத்தார்கள். சுலோசனுவுக்கு ஆத்திரம் அபாரமாகப் பொங்கிவிட்டது. அவள் அண்ணுசாமியை நோக்கி, “அடே துராத்மா! இதற்கு முன்னர் பல முறைகளில் நான் உன்னைக் கண்டபடி திட்டியது உன்னினைவிலிருக்கலாம், கேவலம் நிரபராதியாகிய அனுதை என்னை நீ கெடுக்க எண்ணிடில் கடவுளுமா உன்னுடைய தீச்செயலுக்கு உடந்தையாக இருப்பார்! யார் மீது குற்றம், யார் மனம் சுத்தம் என்பது அந்த கருணுமூர்த்தி அறியாததல்லவே! அகதிக்குத் தெய்வந்தான் துணை என்பது இப்போதேனும் தெரிந்து கொண்டாயா! ஐயா! போலீஸ் வீரர்களே! இப்பாவி எனது பிதாவிடம் நேசபாவங் காட்டி எங்கள் அன்னத்தையே உண்டு இவ்வுடலை வளர்த்திருக்கிறுன். என் பிதா இப்பாவியை நம்பி எங்களுக்கு ஒரு காப்பாளியாகக் கருதி எங்கள் செல்வம் முற்றையும் ஒப்புவித்துச் சென்றுர். அவைகளை எல்லாம் தீர்த்துவிட்டதோடு என்னை மணம் செய்துகொள்ளும்படியாக வற்புறுத்தி பலாத்கரித்தான். அந்த சமயத்தில் இந்த புண்ணியவான்தான் வந்து என்னைக் காப்பாற்றி இவனை அம்முறையும் மன்னித்தார். பிறகு இவன் என் சொத்துக்களை மோசம்செய்ததால், வ்யாஜ்யம்செய்து சொத்தை வாங்கியளித்தார். இவனுடைய துஷ்க்ருத்யங்களை எல்லாம் மறந்து என்மீது கடும்பகை கொண்டு தீர்க்க வைரியானுன். அதோ நிற்கும் அந்தச் சண்டாளி ஆதிமுதல் எனக்குச் செய்த கேடுகளை நான் படித்து வந்த பள்ளியின் உபாத்தியாயினி இப்பொழுதும் கூறுவார்கள். அத்தகைய குடிகேடி, என்னை சினிமாவில் நடிப்பதாக திட்டிக் கலகம் விளைத்த மூதேவியின் பிழைப்பே அந்தவிதமாக முடியும்படி கடவுள்

குழந்தைகளின் அருமையான பேச்சும், அற்புதமான செய்கையும், தெய்வீகமான போக்கும் வெகு ஆனந்தமாக விருக்கின்றன. நிஷ்களங்கமான மனத்துடன் அவர்கள் பார்ப்பதே ஒரு அழகு. கூப்பிடுவதோ பிரம்மானந்தம். முத்தமிடுவதோ தேவாமிருதத்திற்கு நிகராக விருக்கின்றது.

செய்துவிட்டார். என்னைக் கடவுள் இவர் மூலமாகவே இத்தனை ஆபத்துக்களிலும் காப்பாற்றி வருகிறார். என்னையோர் மாற்று விலாசத்திற்கு வரும்படி, யாரோ போன் செய்வதுபோலச் செய்து கபடமாக அங்கு இவனும் ச்யாம்சுந்தரும் இருந்து என்னை இம்சிக்க எண்ணினார்கள். அச்சமயமும் கடவுள் ஓர் சர்ப்பத்தின் உருவமாக வந்துக் காப்பாற்றினார். அடேய்! மானங்கெட்ட நாயே! உன்னுடைய இத்தனை ப்ரயாசையையும் நல் வழியில் செலுத்தி இருந்தால் உனக்கும் மற்றவர்களுக்கும் எத்தனை மேன்மையாக இருக்கும். பாவிப் பிறவி முற்றும் படுமோசத்திலேயே பறிகொடுத்து நீயும் பாழாகிவிட்டாயே! சிச்சீ! வெட்கங்கெட்ட முண்டமே! மானஹீனமற்ற மமதைப் பிசாசே!" என்று திட்டினாள். அங்குள்ளவர்களில் அப்பாவியை சபிக்காதவர்களில்லை.

இத்தனையும் கேட்டுக்கொண்ட ஆசாமி கல்லுபோன்று நின்றுவிட்டான். வாயைத் திறக்கவே இல்லை. தனக்கு கேடுகால சக்கரம் சுற்ற ஆரம்பமாகிவிட்டது என்று எண்ணித் தலை குனிந்துவிட்டான். இந்த கேஸ் முற்றும் பொய் என்பது நன்றாக விளங்கிவிட்டதால் பிறகு மாஜிஸ்திரேட்டின் முன்னிலையில் யாவரும் சென்று இந்த தகவல் முற்றும் தெரிவித்து, குற்றவாளிகளையும் கொண்டு நிறுத்தினார்கள். சுலோசனா குற்றமற்ற நிரபராதி என்று நிரூபித்த உடனே மாஜிஸ்டிரேட் அவளை விடுதலை செய்து, அனேக உபசார வார்த்தைகளைக் கூறி அனுப்பிவிட்டு, இந்த கேஸை பிறகு விசாரிப்பதாகத் தெரிவித்தார். அதன் பிறகு யாவரும் அங்கிருந்து வீடு வந்து சேர்ந்தார்கள். ஆஸ்பத்திரியின் தலைவியும் தான் மதியீனமாக சுலோசனாவைத் திட்டிவிட்டதை எண்ணி மனம் வருந்தி அதுபற்றி அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விடை பெற்றுச் சென்றாள். ராமசந்திரனின் மாறுதலை விமலநாதனறிந்து மிக்க வியப்புற்றான். ராமசந்திரன் வெகு நேரம் இந்த கேஸ் விஷயமாகவே பேசிக்கொண்டிருந்து பிறகு வீட்டிற்குச் சென்றான்.

அன்யோன்யமாக விருப்பதென்பது எவ்வகையினருக்கும், எந்த ஜாதியினருக்கும் என்றும் ஒரே மாதிரியாக நிலைப்பதில்லை. எப்போதேனும் பிரியும் காலமும், மீண்டும் கூடும் காலமுமாகவே இருக்குமாம்.

இந்த விஷயம் எத்தனை ரகஸியமாக நடந்ததாயினும் எப்படியோ சுலோசனாவுக்கு வேண்டியவர்களில் சிலருக்குத் தெரிந்துவிட்டதால் அவர்கள் விசாரிக்க வந்துவிட்டார்கள். சுலோசனாவுக்கு வந்த ஆபத்து நீங்கியதற்காக எல்லோரும் நல்வரவும், வாழ்த்தும் கூறி அவளை ஆசீர்வதித்தார்கள். விமலநாதனுக்கும் கோபிநாதனுக்கும் உண்டாகிய சந்தோஷத்திற்கோர் எல்லையே இல்லை. சுலோசனாவுக்கு திடீரென்று விபரீதச் செய்தியைக் கேட்டதனாலேயே மனம் தத்தளித்து தாங்கமாட்டாது ஜுரம் வந்துவிட்டது; அவள் படுத்து விட்டாள். ஆனந்தாபாய் இந்த செய்தியைக்கேட்டு விசாரிக்க வந்தாள். சுலோசனா தேக சுகம் தப்பி படுத்திருப்பதால் தான் அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு சுலோசனாவின் வீட்டிலேயே தங்கினாள். இந்த விஷயம் ப்ரேமாமணிக்கும் சரோஜனிக்கும் எவ்விதமோ எட்டிப்போய் அவர்களும் வந்துவிட்டார்கள். அன்று பூராவும் சுலோசனாவுக்கு ப்ரக்ஞையே இல்லை. அதிகமாக ஜுரமடிப்பதால் அவளுடைய பெரிய டாக்டர் வந்து வெகு கனிகரத்துடன் சிகிச்சை செய்யத் தொடங்கினாள். வந்த ஜனங்கள் முற்றும், "சுலோசனாவுக்கு ஒருவிதமான குறைவுமில்லை. வினையை விதைத்தவன் வினையை அறுத்தான்" என்று கூறிச் சென்றார்கள். கோபி மட்டும் "சுலோசனாவுக்கு ஜுரம் வந்துவிட்டதே என்ன செய்வது?" என்று பயந்துகொண்டே அவள் பக்கத்தைவிட்டு அசையாது வீற்றிருந்தான்.

"உயிரையே வைத்துப் பழகிய மனிதர்களைப் பிரிந்து விடினும் கூட அவர்களைப் பற்றிய நினைவுகள் பல தரம், பல சம்பவங்களில்—சமயங்களில், காரணங்களில் — உண்டாகின்றன. "அன்பில்லாதவர் மீதில் வைத்த ஆசை" என்கிற பேகட ராகத்தின் பாடலை அடிக்கடி ஒரு குறிப்பாகப் பாடிக் காட்டும் மனிதரின் நினைவு அந்த பேகட ராகத்தைச் செவியில் கேட்கும் போதெல்லாம் உண்டாகி, பழங்கால கதைகளும் நினைவிற்கு வந்துவிடுகின்றன" என்கிறார் ஒருவர்.

15-வது அதிகாரம்

அன்பு விருக்ஷத்தில் இன்பக் கனி

சுலோசனுவுக்கு உடம்பு சற்று குணமாயது. விமலநாதன் "சுலோசனு! உன் பங்கில் கடவுளிருக்கிறார் என்பது ப்ரத்யக்ஷமாகிவிட்டது. நினைத்தாலும் பகீர் என்கிறதே!" என்றான்.

சுலோ:—மாமா! யாவும் அவனருள். எனினும் என் பொருட்டுக் கடவுள் உம்முடைய மூலமாக காரியத்தை முடித்து வைக்கிறார். அன்று அண்ணுசாமி என் விஷயத்தில் செய்த கொடுமையிலும் காத்தீர்கள். இப்பொழுதும் என்னுயிரையே காப்பாற்றினீர்கள். உங்களுடைய முன்னிலையிலேயே தாங்கள் செய்த பேருதவியை எடுத்துக் கூறுவது முகஸ்துதியே யன்றி வேறில்லை. ஆகையால் நான் ஒன்றும் சொல்லாது விட்டுவிட்டேன். மாமா! எனக்கு இவ்வூரில் இன்னும் சில காலம் இருப்பதற்குப் பிடித்தமில்லை. தினந்தோறும் விசாரிக்க வருபவர்களின் உபத்திரவம் பெரிதாக இருக்கிறது. ஆகையினுல் ஒரு மாதம் லீவு பெற்றுக்கொண்டு பெங்களுருக்கே செல்லலாமென்று நினைக்கிறேன். உங்களுடைய அபிப்பிராய மென்ன? கோபியும் சம்மதித்துவிட்டான்.

விமல:—அன்பான சுலோசனு! உன்னுடைய வார்த்தைக்கு எதிர்ப்பு கூறுவதற்கு நான் துணியவில்லை. எனினும் உன் முகாரவிந்த தரிசனம் எனக்கு ஒரு மாதம் இல்லாது போய்விடுகிறதே!

அந்தரங்கமான அன்பு வைத்துச் சினேகம் செய்தகாலத்தில் சினேகிதையின் வீட்டிற்குச் சென்றதும், குதூகலமாக இருந்ததும், திருப்தியாகப் புசித்ததும், திரும்பும்போது பிரிவாற்றுத் துயரத்தினுல் புலம்பியதும், ஆ! இப்போது எல்லாம் கனவாகவன்றோ இருக்கின்றன! அப்படியும் ஒரு காலத்திலிருந்தோமா! என்று ஒருவர் ஏங்கித் தவிக்கின்றார்.

அதற்குத்தான் என் மனம் வருந்துகின்றது. என்ன செய்வேன், சுலோசனா! என்னுடைய நிலைமையும், நான் உயிர் வாழும் தத்துவமும் நீயறியாததல்லவே! அங்ஙனமிருக்க உன்னை நான் எவ்விதம் பிரிந்திருப்பேன்? கண்மணீ! சகல விதத்திலும் பாபத்தைச் செய்து பிறந்துள்ள எனக்கு இந்த சிறிய ஆநந்தமும் கிடைக்காது போய்விடப் போகிறதே, என்கிற பெருங் கவலையே என்னை வதைக்கின்றது. காலை மாலை இரு முறைகளிலும் உன்னைக் கண்டு களிப்புறும் உற்சாகமும் குன்றிவிடுமாயின் நான் நடைச் சவமாகவன்றோ ஆய்விடுவேன்? உன்னைப் பாராமல் ஒரு தினம் செல்வது ஒரு யுகமாகவன்றோ இருக்கிறது. உன்னை ஒரு மாதம் நான் எவ்விதம் பிரிந்திருப்பேன்?" என்று பேசுகையில் அவனுக்குப் பின்புறமாக விருந்து "ஒருவரை யொருவர் பிரிவதென்று ஏன் நினைக்க வேண்டும்? அவ்வாறு நினைக்கவேண்டாம். இத்தனை ஆபத்துக்களுக்கு என் குழந்தை ஆளாகித் தவித்தது போதும். இனி அரை நொடியும் அவளைத் தனிமையில் வைக்கமாட்டேன். அன்று குற்றம் சாட்டப்பட்ட படுபாவிகள் யாவருக்கும் சட்டப்படிக்கு தண்டனை விதித்தாகி விட்டதாம். அந்த சண்டாளர்கள் பின்னும் மனத்தில் காம் வைத்துக்கொண்டு ஏதேனும் தீங்கிழைக்கலாம். ஆகையினால் அவள் இனி நம்முடைய பாதுகாப்பிலேயே இருக்க வேண்டுமேயன்றி தனித்திருப்பது கூடாது. நாம் அவள் பிரியப்படியே கூட சென்று ஒரு மாதம் தங்கி வரலாம். அம்மா, சுலோசனா! நான் இத்தனை நாளாக ஏதோ ஒருவாறு இருந்துவிட்டேன். இந்த அபாண்ட கேஸுக்குப் பிறகே உன்னிடத்தில் எனக்குச் சொல்ல வியலாத—தடுக்க வியலாத—கடும் பிரியமும், அக்கரையும் உதித்துவிட்டன. ஆகையினால் நீ எதற்கும் இனி கவலைப்படாதே! நீ எனது ஜானகியின் வயிற்றில் பிறக்காவிடினும் உன்னை நான் என் பேத்தியாகவே மதித்து வருகிறேன். விமலநாதா! ஆதியிலேயே உன் மனத்தை அறிந்திருந்தும் உலகக் கட்டுபாட்டிற்கும், மூட

சிலர் கல்யாணத்திற்கு அழைக்கும் விமரிசையோ தேன் ஒழுகுகின்றது. அக்கல்யாணத்திற்குச் சென்ற பிறகோ வந்தவர்களைக் கேட்பாரில்லை. "ஏன் வந்தோம்?" என்று வருந்தி பிறர் வீட்டில் உண்டு திரும்ப நேரிடுகின்றது. இதுவும் ஒரு வேடிக்கையல்லவா!

வசைகளுக்கும் பயந்து உன்னுடைய சந்தோஷத்தை முற்றும் குலைத்து நாசம் செய்துவிட்டேன். அதை நானறியாமலில்லை. நாம் அவளிஷ்டப்படியே அவளுடன் கூட செல்வோம்." என்று விமல நாதனுடைய பிதா சொல்லியவாறு அருகில் அமர்ந்தார்.

சுலோசனு எழுந்து வணங்கி மரியாதை செய்து "தாதா! தங்களுடைய தயவில் நான் இதுபரியந்தம் வளர்ந்து வருகிறேனே யன்றி வேறல்ல. என்னுடைய பிறவியில் நான் உங்களையே எனது தாய் தந்தையாக எண்ணி இருக்கிறேன் என்பதைக் கடவுள்தான் அறிவார். கனவிலும் நினைவிலும் உங்களுடைய நினைவிலே நான் என் பாவப் பொழுதைத் தொலைக்கின்றேன். மகா பாவியாகிய எனக்கு கடவுள் உங்களுடைய துணையையாவது கொடுத்தாரே! அதை எண்ணியே நான் ஆநந்தம் என்பது இன்னது என்று அடைகிறேன்." என்று கூறினுள். பிறகு மூவரும் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

* * * *

சில மாதங்கள் கழிந்தன. பிரேமாமணியின் புருஷன் ஒரு தினம் சமாசாரப் பத்திரிகை யொன்றை வெகு வேகமாகக் கொண்டு வந்து தன் மனைவியை நோக்கி "கண்மணி! இதோ! இந்த விஷயத் தைப் படித்துப் பார்" என்று பத்திரிகையைக் கையில் கொடுத்தார். வெகு ஆவலுடன் பிரேமாமணி பத்திரிகையை வாங்கிப் படிக்கத் தொடங்கினுள். அந்த விஷயம் பின் வருமாறு.

"சீமான்களே! சீமாட்டிகளே!

தற்காலத்தில் உலகம் மாறி இருக்கும் தன்மை யாவரும் அறிந்த விஷயமே! பண்டைய காலத்துப் பழக்கத்திற்கும் இக் காலத்து பழக்க வழக்கத்திற்கும் மலைக்கும் மடுவுக்குமாக

"ஒரு நாளைக்கு இவ்வளவு வேலை செய்துவிடவேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டு செய்யப் புகுந்தால் அன்று நமது வேலைகளில் ஒன்றேனும் முடியவிடாவாறு ஒருவர் மாற்றி யொருவர் வீட்டிற்கு வந்தவாறிருக்கின்றார்கள். நினைத்த காரியமோ, மண்ணுதான்.

ஆய்விட்டது. காலப் போக்கின் கிரமத்தில், காலம் மாறுவது போல மற்ற யாவும் மாறுகின்றன. மனிதர்களின் பழக்க வழக்கங்கள் யாவும் மாறுகின்றன. ஒரு நங்கைக்கு ஒரு நாதன் காப்பாளியாக இருப்பது அத்யாவசியமானதாகும். நாதனற்ற நங்கைகளின் துன்பங்களைச் சகிக்க வியலவில்லை என்பதுவும் யாவரு மறிந்த விஷயமே! பாலிய விதவைகளின் அலங்கோல கோர சம்பவங்களைப் பற்றி பல பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். அனியாயமாக விதவைப் பெண்கள் பாழாகி நாசமடைந்து போய்விடுகிறார்கள். அப்படி அக்கிரம வழியில் செல்லாது சுத்தமான மனத்துடன் நெறியாக இருப்ப வர்களுக்குப் பேராபத்துக்கள் நேர்ந்துவிடுகின்றன. இரண்டு மின்றி இருக்கும் நங்கைகளைக் காண்பதே அபூர்வம். தாய் தந்தையைப் போன்றும், கணவனைப் போன்றும் ஒரு பெண்ணை பாதுகாக்கக் கூடியவர்கள் உலகத்தில் வேறு யாரு மில்லை. அத்தகைய மனிதரற்ற நங்கைகளின் சுக வாழ்க்கை யையும், அவர்கள் பாதுகாப்பையும் மற்றையோர் கோருவது அவசியமென எனக்குத் தோன்றுகின்றது. பூர்வாசாரத்தின் கிரமத்திற்கு விதவா விவாகம் தப்பிதந்தான். அது யாவரும் ஒப்புக்கோள்ளும் விஷயமே! அதை யாரும் மறுக்க முடியாது என்பது உலக மறிந்தது. முற்காலத்தில் மனிதர் ஒவ்வொரு வருக்கும் நியாயக் கட்டுப்பாடும், தர்ம சிந்தையும், சத்திய பரிபாலனமும் நிரம்பி இருந்தன. தீய ஒழுக்கம், பிறரைக் கெடுப்பது, படாடோபம், வீண் ஜம்பம், மோசக் கருத்து, சுயநலம் முதலிய துர்க்கிருத்தியமான எண்ணங்கள் பெரும் பாலோரான ஜனங்களிடத்தில் மருந்துக்கும் கிடைக்கமாட்டா. அக்காலத்திய நெறிகள், பழக்க வழக்கங்கள் யாவும் ஒழுங் கான முறையில் நன்றாக நடந்து வந்தன. இக்காலத்திலோ யாவும் அவற்றிற்கு நேர் மாறாக கலியின் கூற்றென விளை

மளிகைக் கடையில் நூற்றுக்கணக்கில் சாமான்கள் கடன் வாங்கிவிடுவதும் பணங் கொடுத்து கடன் தீர்ப்பதற்கு முன், ரொக்கமாகக் கடன் வாங்குவதற் கும் சிலர் கூசாது வந்துவிடுகிறார்கள். கடைக்காரர்கள் போகும் வழிதான் யாதோ தெரியவில்லை!

வதால் அனேக கெடுதல்கள் தானுக விளைந்து விடுகின்றன. காலப் போக்கையும், மாறுதல்களையும், பால்ய விதவைகளின் பரிதாபங்களையும், கோர சம்பவங்களையும், தடுக்க முடியாமல் நேரும் அனியாயங்களையும் நேரில் கவனித்ததில் என் மனம் மிகவும் மாறுட்டத்தை அடைந்துவிட்டது. கேவலம் உலக மறியாத சிறுமிகளுக்கு ஒருவிதமான ஆபத்தும் விளையா வண்ணம் சம்மதப்பட்டவர்களுக்கு மறு விவாகம் செய்வது நலம் என்று தோன்றியதால் என்னபிப்பிராயத்தைப் பலரிடம்—பல பெரியாரிடம், பல அறிவாளிகளிடம், பல பண்டிதர்களிடம், பல பிரமுகர்களிடம், பல பெண்பிள்ளைகளிடம், என்னுடைய ஆப்த மித்திரர்களிடம், உறவினர்களிடம்— தெரிவித்துக் கலந்து பேசியதில் எல்லோரும் காலத்தின் நிலைமையையும், பெண்களின் தீமை பற்ற— அபாயமற்ற—வாழ்க்கையையும் உத்தேசித்துச் செய்யலாம். ஆனுல் அதில் கட்டாயம் மட்டும் செய்வது சரியில்லை. இஷ்ட முள்ளவர்களுக்குச் செய்யலாம். இந்த கொள்கையை ஆதரிப்பவர்கள் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். ஆதரிக்காதவர்கள் ஆக்ஷேபிப்பார்கள். அவ்விரண்டும் உண்டாவது சகஜமே! கெட்ட விஷயத்திலும் ஆராய்ந்து அதிலுள்ள நன்மையை எடுத்துக்கொண்டு பாலிய விதவைப் பெண்களுக்கு மறுமணம் செய்விக்கலாம்.'' என்று கூறினுர்கள். ஆகையினுல் நான் இவ்விஷயத்தில் துணிந்து முன் வந்தேன். எனது ஆருயிர்ச் சகோதரியாகிய லேடி டாக்டர். சுலோசனு வென்னும் நற்குணவதி ஒரு முக்கியமான காப்பாளியின்றி பல இடுக்கண்களுக்கு இலக்காகி தன் கற்பைக் காத்துக்கொள்ள அரும் பாடு பட்டுத் தவித்து வருந்தியதால் தான் ஒரு காப்பாளியின் பாதுகாப்பில் இருக்கவேண்டுமென்ற அவசியமும், ஆவலும் அவள் மனத்தில் உதித்தது. அவளை முதலில் விவாகம் செய்துகொடுக்கும்படியாக என்

வேற்றுமையும், கவடுமுள்ள சுபாவத்தினரை எத்தனை திருத்தச் செய்தாலும் அது வீணேயாகிறது. அவர்கள் செய்கையும் பேச்சும் மாறுபடுவதே இல்லை. ஒன்றுக்கொன்ருகப் பேசி காரியங்களும் சில சமயம் கெட்டுவிடுகின்றன.

பிதாவே நிச்சயித்து, மரண சாசனப் பத்திரத்திலும் எழுதி இருக்கும் கனவான்—என் பிதாவின் மூத்த மனைவியின் சகோதரராகிய லாயர் விமலநாதரென்பவருக்கு, மதி சூனியையாகிய என் தாயார் விவாகத்தை முடிக்காது, வேறு இடத்தில் என்னருமைச் சோதரியை அவளுடைய 7 வயதிற்குள் மணம் செய்வித்து சில மாதத்திற்குள்ளாக விதவை என்னும் பட்டத்திற்குள்ளாக்கிவிட்டாள். பிரபஞ்சமே இன்னதென்று தெரியாத என் சகோதரியின்மீது உயிரையே வைத்து, அன்று முதல் இன்று வரையில் அவளுடைய இடர்களைக் களைந்துக் காப்பாற்றிய உத்தம வீரராகிய விமலநாதனுக்கு அவருடைய பெற்றோரும், மற்றோரும், பத்தினியும் மனப் பூர்ணமான சம்மதத்துடன் உத்தரவு கொடுத்து, முன்னின்று எனது சகோதரியினுடைய பரிதாபத்தைக் கண்டு மன மிரங்கி பரிபூர்ண இஷ்டத்துடன்....தேதியில் விவாகத்தை முறைப் படிக்குச் செய்துவைத்தார்கள். சகல விதத்திலும் என் சகோதரியையே 'ஒத்திருக்கும் பெண்மணியாகிய ஆநந்தா பாயின் மனமும் என் மனமும் மிக்க அன்பு மயமாக ஒன்று பட்டு காதலித்திருப்பதால் அவளுடைய பெற்றோர்களின் மன மார்ந்த திருப்தியுடன் அதே தேதியில் எங்களது விவாகத்தையும் முடித்து வைத்தார்கள். இரு மறுமணங்களும் வெகு சிறப்பாக நடந்தேறின. அனேக சீமான்களும் சீமாட்டிகளும் விஜயம் செய்திருந்து அத்திருமணங்களை நடப்பித்தார்கள். விதவா விவாகத்தை ஆக்ஷேபித்துக்கொண்டிருந்த வைதீக கோஷ்டிகளும் ஏராளமாக வந்து பூரி தக்ஷிணை பெற்று ஆசிர்வதித்துச் சென்றூர்கள். எந்த காரியத்திற்கும் ஆக்ஷேபனை சமாதானம் பிறப்பது சகஜமாகையினுல் இவ் விஷயத்தில் அதைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. இத்தகைய கல்யாணங்கள் உலகத்தில் எண்ணிக்கையற்றதாக நடந்திருக்கின்றன. அதுவும் உலக மறிந்ததே யாகும். சிலர் கிருஸ்துவ மதத்தில் சேர்ந்து மறுமணம்

அறுபது வயது கிழமாயினும் பெண்பித்து விடுவதில்லை. தத்த பித்தத்தாலேலோ வென்று பேசிக்கொண்டே பெண் கிழத்தைச் சுற்றி யலைவதைக் கண்ட அவர்களின் பேரன் பேத்திகளே நகைத்துப் பரிகஸிக்கின்றூர்கள்.

செய்கிறீர்கள்; அது அனுவசியம். நாங்கள் மதம் விட்டு மதம் புகாது நடத்தினோம்.

இங்ஙனம்

(டாக்டர்) கோபிநாதன்.

அதைப் படித்த பிரேமாமணி மிக்க சந்தோஷத்தை அடைந்து சுலோசனு அலங்கார பூஷிதையாக மணமகனுடன் நிற்பது போலவே மனத்தில் பாவித்து ஆனந்தித்தாள். அந்த பேப்பரில் அவர்களின் படம் காணப்படவில்லை. இத்தகைய பாலிய விதவைகள் விவாகம் செய்துகொண்டதுபற்றி மட்டற்ற மகிழ்ச்சியே அடைந்தாள். அவளுடைய உயிர்த் தோழியைப் பார்க்கவேண்டுமென்று ஆவல் உண்டாகியது. அன்றைய ரயிலுக்கே புறப்பட்டு தம்பதி சகிதம் சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்களுக்கு முன்னமே சரோஜனியும் அவள் புருஷனும் பேப்பரில் கண்டு வந்திருந்தார்கள் பிரேமாமணி சுலோசனுவைக் கட்டி யணைத்து ஆனந்தப் பெருக்குடன், "கண்மணீ! நீ விவாகம் செய்துகொண்டதை நான் பத்திரிகையில் தான் கண்டு வரவேண்டுமா? நீ எனக்கேன் அழைப்புப் பத்திரம் அனுப்பவில்லை?" என்று கேட்டாள். அதே கேள்வியை சரோஜனியும் கேட்டாள்.

தன்னுயிர்த் தோழிகளைக் கண்ட சுலோசனு பெருத்த ஆனந்தப் பூரிப்பை அடைந்து "என்னருமைத் தோழிகளே! இக் கல்யாணம் திடீரென்று ஒரே நாளில் நிச்சயித்து நடைபெற்றதாகையினல் நான் யாருக்கும் எதுவும் செய்தி யறிவிக்க நேரம் கிடைக்கவில்லை. அதன் காரணத்தைக் கூறுகிறேன் கேளுங்கள். அதன் பிறகு நீங்களே என்னை மன்னிப்பீர்கள். அப்பொழுது நடந்த சம்பவத்திற்குப் பிறகு எனக்கு இவ்வூரிலிருக்கப் பிடிக்கவில்லை. நாங்கள் பெங்களூருக்குச் சென்றிருந்தோம். அங்கு எங்களுடைய

பெரியவர்களுக்கு நோய் வந்திடினும் மருந்து குடிப்பதற்கு "ஐயோ!" என்று குழந்தையைப்போல வாய் மூடிக்கொள்கிறீர்கள். நோய் தீருவதற்கு ஆசை; மருந்து குடிப்பதற்கோ முறைப்பு.

வீடு விற்றுகிவிட்டதால் பெரிய வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அங்கு இருந்தோம். என்னோடு கூட விமல நாதரின் குடும்பத்தினரும் வந்து சேர்ந்திருந்தார்கள். அந்த வீட்டின் எதிர் வீட்டிலும் பக்கத்து வீட்டிலும் சில தடியர்கள் குடி இருந்தார்களாம். அதை நான் அப்போ தறியமாட்டேன். அந்த சோதாக்கள் என்மீது கண்ணோக்கங் கொண்டு சில்மஷம் செய்ய ஆரம்பித்துக் கடிதம் போடுவதும், பின்னாலேயே சுற்றுவதுமாக இருந்தார்கள். விமலநாதனின் தாய் வழி முறையில் உறவினர்கள் சிலர் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் நான் படுத்திருந்த விடுதிக்குள் இரவு காலத்தில் கள்ளன் போல பிரவேசித்து என் னருகில் வந்தான். திடீரென்று விழித்துக்கொண்டு இதைக் கண்டு நான் கூக்குரலிட்டேன். விமலநாதனின் தந்தையே வந்து அவனைத் திட்டி கையைப் புடைத்து வெளியில் துரத்திவிட்டார்.

என் கதியை எண்ணி நான் மிக்க துயரமுற்றுக் கண் கலங்கிக் கொண்டே இருந்தேன். எந்த விதத்தில் பார்த்தாலும் எனக்கு ஆபத்துக்கள் தடுக்க வியலாது வந்து சேருகின்றனவே! "இதென்ன பாழ்ப் பிறவி! இவ்வித ஆபத்துக் கிலக்காகி வாழ்வதை விட உயிர் நீத்துவிடுவது மேலன்றோ! பூமியிலிருந்தால் செம்மையாக விருக்க வேண்டும். இல்லையேல் தற்கொலையேனும் செய்துகொண்டு உயிர் நீக்க வேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டேன். என் துயரத் தைக் கண்டு சகிக்காத கோபியும் விமலநாதனும் நிரம்பவும் விசன முற்று என்னைத் தேற்றினார்கள். பரிமளாவும் எவ்வளவோ விதத் தில் சொல்லி என்னைச் சாந்த முறச் செய்தாள். அந்த இரவோ டிரவே எல்லோரும் கூடி யோசித்து, எனது நிலைமையையும் அவ ருடைய நிலைமையும் கண்டு மனக் கலவர மடைந்து விவாகத்தைக் குறித்து தீர்மானித்தார்கள். அவ்விஷயத்தில் தீர்க்கமாக யோசனை செய்ததில் என் மனமும் சம்மதப்பட்டது. கோபிநாதனுக்கும்

நோயாளியின் செவியில் படும்படியாகவே சிலர் அவஸ்மார்க்கமான வார்த் தைகளைக் கூறி ஒப்பாரிவைத்துவிடுகிறார்கள். இவர்களின் மவுட்டீகச் செய் கையினால் நோயாளியின் 100 டிகிரி, 105 ஆக மாறி தடபுடலில் கொணர்ந்து விட்டுவிடுகின்றது.

வெகு தூரமாகிய பம்பாயில் வேலையாகிவிட்டது. அவன் சீக்கிரத்திலேயே செல்வதாக ஏற்பட்டுவிட்டது. பிறகு நான் தனிவாசம் செய்யவேண்டியதாகும். அவனுடைய துணையில் நான் இருக்கையிலேயே படாத பாடு பட்டேன், கேளாத மொழிகளையும் கேட்டேன். ஒருவருமின்றி தனி வாசம் செய்வதென்றால் ஒன்றுமில்லாது வீண் பழி தானாக நேருவது—என்னை வந்துத் தாக்குவது—நிச்சயம். கோபியுடன் செல்வதற்கும் என் மனம் இடந்தரவில்லை, விமலநாதரின் தேகமோ மனோ வேதனையினால் குன்றி கேவலமாக மெலிந்துவிட்டது. என் மனம் ஒருவிதமும் தெளிவு கொள்ளாமல் தத்தளித்தது. நமக்கென ஓர் காப்பாளி யற்று நாம் தனித்திருப்பது சரி யில்லை. கோபிநாதனும் ஆநந்தாபாயும் சந்தோஷமாக இருக்கும் வாழ்க்கையில் நான் செல்வதும் அசம்பாவிதம். ஆகையினால் பெரியோர்கள் சேர்ந்து யோசித்து தீர்மானித்தபடிக்கு நாம் நடப்பதே உசிதம் என்று தோன்றியது. எனது மனத்தில் வளர்ந்து வரும் ஆழமான அன்பும் அதற்கு அனுகூலமாக பதிலளித்தது. பரிமளாவும் அது விஷயத்தில் பூர்ண திருப்தியுடன் என்னைக் கேட்டுக்கொண்டதன்பேரில் இக் காரியம் மறுதினமே ரிஜிஸ்டராகி நடந்துவிட்டது. அதனால் உங்களை எல்லாம் வரவழைக்க நேரமில்லாது போய்விட்டது. நீங்களும் ஆதியிலிருந்து என்னை மறுமணம் செய்துகொள்ளும்படியாகப் பலதரம் கூறினீர்கள். அப்போது வேளை வரவில்லை; இப்போதே வந்தது. எல்லாம் அவனருள்" என்று கூறினாள்.

இதுகேட்ட பிரேமாமணியும், சரோஜனியும், "சுலோசனா! நீ செய்த காரியத்தைப் பற்றி எங்களுக்கு மிக்க சந்தோஷமே! உனக்கு இன்னும் சரியாக........வயதாகவில்லை. இன்னும் உன் காலம் முற்றிலும் நீ என்ன விதமாக அபாய மின்றி ;கழிக்கக் கூடும்? மேலும் ஆதிமுதல் உங்களிருவரின் மனத்தில் வளர்ந்து

சோபனமாகி பல வருடங்களாகியும் சிலருக்கு சந்தான விருத்தி ஏற்படுவதில்லை. அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் மனவருத்தம் மிகுந்துவிடுகின்றது. சற்றும் கோராதவர்களுக்கோ டஜன் கணக்கில் குழந்தைகள் உண்டாகிவிடுகின்றன.

வரும் காதலும் வீணாகப் போய் சாதலுக்கு இடமாகி விடுகிறதே!" என்று நாங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தோம். இந்த மணமே உனக்கு முதல் மணமாகத் தான் எங்களுக்குத் தோன்றுகின்றது. அந்த மணம் செய்தது கனவு கண்டது போலும் இருக்காது. உன் பிதா நிச்சயித்த வரனை உனக்கு தக்க பக்குவ காலத்தில் நீ அடைந்தாய். நீ விவாகம் செய்துகொண்டதற்கு சம்மதித்தவர்கள் உன்னிடம் வரட்டும்; நீயும் சென்றுவா. சம்மதிக்காதவர்கள் உன்னைச் சேர்த்துக்கொள்ளவேண்டாம்; நீயும் அங்கு செல்லவேண்டாம். உனக்குள்ள பகைவர்களுக்கோ கணக்கில்லை. அவர்கள் வேண்டுமென்று உன்னை அவமானமுறச் செய்து கெடுக்கவேண்டுமென்றே கங்கணங் கட்டிக்கொண்டு இதுகாறும் வேலை செய்து வந்தார்கள். இன்னமும் உன்னை அவர்கள் விடுவதாக நான் நினைக்கவே இல்லை. வேண்டு மென்று உன் தலையில் கல்லைப் பிரட்டி உன் கற்பைக் கெடுக்க வேண்டு மென்றே முன்வந்து உன்னை அநியாயமாக்கி எதற்கும் உதவாப் பிண்டமாகச் செய்துவிடுவார்கள். கடவுள் உன் தலையில் எப்படி எப்படி எழுதி இருக்கின்றாரோ அப்படி எல்லாம் தான் நடக்கும். இதுவும் நீ வாங்கிக்கொண்டுவந்த வரனாகவே இருக்க வேண்டும். இவ்விதமான விவாகங்கள் இக்காலத்தில் அனேகம் நடக்கின்றன. இது புதியதல்ல. நமது ஜாதியில் எத்தனையோ விடங்களில் இம்மாதிரி விவாகம் நடந்தது பற்றி பத்திரிகையில் பார்க்கிறேன். உத்தமமான வழியில் செய்துகொண்டது தப்பிதமே யல்ல. சம்மதப்பட்டவர்களுக்கு இவ் வார்த்தையே யன்றி சம்மதப்படாதவர்களுக்கு இவ் வார்த்தை இல்லை. என் பிரிய சுலோசனா! நீ கலாசாலையில் உபாத்தியாயினியின் முன்னால் புலம்பிக்கொண்டு நின்றதும், சண்டாளி காவேரி உன்னைச் செய்த சதியும், அவள் 'உன்னை இன்னும் விட்டேனா பார்!' என்ற கருத்தை விளக்கியது போலப் பார்த்த பார்வையும் அன்று நடந்த சம்பவங்களும் இன்னமும் என்னெதிரில் தாண்டவமாடுகின்றன. அநியாயமாக உன்

வீட்டில் பல சிறுவர்கள் இருப்பினும் அவசரத்திற்கு உதவி புரிய ஒருவரும் உபயோகமாயிருப்பதில்லை. அவர்களை வேண்டி வேப்பிலை யடித்து காரியத்தைச் செய்யச் சொல்வதற்குள் "போதும்; போதும்." என்று ஆய்விடுகின்றது.

ளைச் சினிமாவில் நடித்ததாக தூஷித்துச் செய்த மோசங்கள் அவளையே தாக்கின. அஞ்ஞசாமியினுலும், காவேரியினுலுமே அந்த கம்பெனிக்கும் அதில் நடித்தவர்களுக்கும் இத்தகைய ஆபத்து வந்தது. ச்யாம்சுந்தர் உன்னழகைக் கண்டு உன்னை பழைத் தானேயன்றி, பின்னர் அஞ்ஞசாமியின் தூண்டுதலினுலும் அவன் முயற்சினுலுமே உனக்கு அத்தகைய தீங்குகள் விளைந்தன. இதில் சினிமாக்காரன் சம்மந்தமே படவில்லை என்றும், அஞ்ஞசாமியே யாவற்றிற்கும் காரணமென்றும் கோர்ட்டில் நிரூபிக்கப்பட்டதைப் பேபரில் படித்தேன். நீ முன்னர் என்னிடம் தெரிவித்த விஷயம் உனக்கு நினைவிருக்கலாம். அதற்கு நான் பதிலளித்ததும் நினைவிருக்கலாம். நீ இனி உன் கணவனுடன் கல்கட்டாவுக்குச் சென்று நீ கோரிய பரிக்ஷையைப் பால் செய்துவிட்டு அவ்விடத்திலேயே ஜாகை வைத்துக்கொண்டு சுகமாக நிலைத்துவிடு. இவ் வூரிலு மிருக்காதே. மகா கொடிய—கார்ப்பண்ணியம் நிறைந்த—பகையாளிகளின் கண்ணில் படாது சென்று சுக ஜீவியாக இரு. அப்போதைக்கப்போது எங்களுக்குக் கடிதம் எழுது. "பரிமளாவும், சாமளாவும் சகோதரிகளைப் போலிருக்கிறுர்கள்" என்கிற வார்த்தை உலகில் உலாவட்டும். உனக்குத் தெரியாதது ஒன்று மில்லை. அந்த பரிமளா என்னை ஒரு முறை சந்தித்தபோது "என்னுடைய சுகமான—மங்களகரமான வாழ்க்கைக்குக் காரணம் என் பர்த்தாவின் ஆநந்தமான ஜீவிதமாகும். அவர் மன வருத்தத்தினுல் துன்புறுவதில் எனக்குச் சந்தோஷம் எங்கிருந்து உண்டாகும். அவருடைய உயிர் உலகில் இருக்கும் பரியந்தம் எனக்கு மங்களகரம். அவருடைய உயிரோ ஒரு மரக்கிளையில் மாட்டிக்கொண்டு ஊசலாடுகின்றது. கிளை முறிந்தால் என் கதி என்னவாகும்? நான் பொறுமை கொள்ளவில்லை. அவர் மனேபீஷ்டம் நிறைவேறி அவர் ஆநந்தமாக உயிர் வாழ்ந்தால் அதுதான் எனக்குப் பேராநந்தமாகும். உங்களுக்கு

உண்மையான அன்புள்ள தம்பதிகளின் மகிமையைப்பற்றிக் கூறவேண்டாம். அத்தகையோரில் யாருக்கேனும் தேக சுகம் கெட்டிருக்குங் காலையில் அவர்களின் உயிரே துடிக்கின்றது. பக்கத்தைவிட்டு அசையாது சதா கனிகரத்துடன் கவனித்து வருகின்றுர்கள். அவர்களின் அன்பினுலேயே நோயும் குணமாகிவிடுகின்றது.

இவ்விரகஸியம் தெரியாத தன்று. நான் கூற வேண்டுவதில்லை. இது அந்த அம்மாளும் அறிந்த விஷயமே! கடவுள் என்ன செய்வாரோ!" என்று கூறி உண்மையான மன நிலைமையோடு வருந்தினாள்.

அதைக் கண்ட எனக்கே பெரிய ஆச்சரியமுண்டாகிவிட்டது. "தன் கணவனுக்குத் தானே மனமொப்பி மறு மணம் செய்விப்பார்களா! இது சரியான விஷயமல்ல". என்று பிறர் கூறலாம்; கூறுகிறார்கள். இது உலக வசனம். ஆயினும் தன் கணவனுக்கே தான் மணம் செய்வித்து மகிழ்ந்திருக்கும் நங்கைகளும் இருக்கின்றார்கள். என் கண்ணால் அந்தத் திருமணத்தையும் அவர்கள் அன்யோன்யபாவமாக இருப்பதையும் பார்த்திருக்கிறேன். இது அதிசயமல்லவென்றே இப்போது கூறவேண்டும். சுலோசனா! உன்னுடைய விவாக காலத்தில் நாங்கள் கண்டு சந்தோஷித்து இந்தப் பரிசைக் கொடுக்க பாக்கியம் பெறவில்லை. இப்போது இதை வாங்கிக்கொள்ளவேண்டும்." என்று கூறி இருவரும் இரு அழகிய பட்டுச்சேலையும், ரவிக்கையும், வெள்ளிப் பாத்திரமும் கொடுத்தார்கள். அன்பு மயமான பரிசைப் பெற்றுக்கொண்ட சுலோசனா அக மகிழ்ந்தாள். பிறகு மூவரும் பரிமளாவினிடத்திற்குச் சென்று, அவளுக்கும் சேலை ரவிக்கைகள் பரிசு கொடுத்து வெகுவாகக் கொண்டாடிப் பேசினார்கள்.

பிரேமா:—பரிமளா! இப்போது உன் மனம் நிம்மதியாயிற்றா! முன்பொரு நாள் நீ என்னிடம் பேசியது உனக்கு நினைவிருக்கும். இப்போது உன் தாய் வீட்டார் ஒன்றும் பேசவில்லையா!

அன்பற்ற கணவனோ, "மனைவி நோய் வாய்ப்பட்டு விட்டாளே!" என்கிற அக்கறை, திகில் சிறிதுமின்றி, வேண்டுமென்று படுத்திருப்பதாக டாம் டாம் செய்து திட்டுகிறான். தன்னுடைய அசட்டு நிலைமையை வைத்தியர் முதலான எல்லோரின் முன்பிலும் கூச்சமின்றி எடுத்துக் காட்டி நோயாளியின் மனத்தையும், மற்றவரின் மனத்தையும் வருத்தச் செய்துவிடுகின்றான்.

பரிமளா:—அம்மா! நான் எந்த விஷயத்திலும் கடவுளை நம்பிய வள். அவர் எந்த வழியில் விடுகிறாரோ; அந்த வழியில்தான் யாவும் நடக்கும். எனது விவாக காலத்தில் இந்த உள்மர்மம் எனக்குத் தெரிந்திருக்குமாயின் நான் அப்போதே அதற்குத் தக்க விதத்தில் ஏற்பாடு செய்திருப்பேன். மேலும், நான் விவாகம் செய்து கொண்டு இங்கு சமுசாரத்திற்கு வந்த பிறகும் மதிசூனியையாக பதியின் நோக்கமறியாது மவுட்டீகத்தன்மையாய் சில காலந் தள்ளினேன். எனக்கு முதலில் அறிவையும், நாகரிகத்தையும் ஊட்டியவர் என்னு டையபதிதான். அவர் மனநிலைமையையும், அவருடைய பொறுமை யான தன்மையையும் பிறகு சிறுகச் சிறுக அறிந்துகொண்டேன். அவருடைய உயிர் நிலைத்திருந்தால்தான் எனக்கு க்ஷேமம். இல்லை யேல் மங்களமே இல்லை, என்பதை நன்கறிந்து கொண்டேன். அது முதல் நான் அவருடைய மனப்படியே, இச்சைப்படியே நடக்கத் தொடங்கினேன். அவர் மனத்திற்கு இசைந்த சாமளாவை மணந்து சுகமே இன்புற்றிருக்கும்படிக்கு நான் பலதரம் தெரிவித்தேன். 'அவ் வாறு தெரிவிக்கவும் மனம் துணியுமா?' என்று எல்லோரும் வியப் புறலாம். ஆனால் இவ்விதமான செய்கை உலகத்தில் நடவாமலில்லை. அந்த வகையில் கணக்கு மிகக் குறைவாக விருக்கும். அவை வெளி வராது. எனக்கு அந்த விஷயத்தில் பொறாமை என்பதே சிறிது மில்லை. எனக்கு ஏதேனும் குறைவு வந்துவிடப் போகின்றதே என் கிற கவலையும் எனக்கில்லை. என் கண்மணி சாமளாவே என் விஷயத் தில் தாய்போல நடப்பாள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். என் பர்த்தாவும் என் விஷயத்தில், ஒரு சிறிய வருத்தமும் நான் அடையச் செய்யமாட்டார். அந்த மாதிரியான அதைரியங்கள் என் மனத்தில் சற்று மில்லை என்பதைத் திட்டமாகக் கூறுவேன். நான் கொண்ட விருதமாவது:—என் பதிக்கு சுகமான வாழ்க்கையும், எனக்கு மங்களகரமுமே வேண்டும் என்பது தான். என் தாய் வீட் டார் முதலில் சம்மத மின்றி தாறுமாறாக நடந்தது உண்மைதான்.

சில அறிவிலிகள் தாம் செய்யும் அசட்டுக் காரியங்கள் முற்றும் சரி என்று மனத்தில் எண்ணிவிடுகிறார்கள். அந்த துணிபினால் பிறர் பரிகவிக்க வும், வருந்தவும் கூடிய வார்த்தைகளைப் பேசி—செய்கைகளைச் செய்து—தாறு மாறாக விழிக்கின்றார்கள்.

ஆனால் எனது மங்களகரமான வாழ்க்கைதான் ப்ரதானம் என்பதை தீர்க்கமாக யோசித்து அவர்களும் சம்மதித்தார்கள், விவாகத்திற்கும் வந்திருந்தார்கள். இப்போது எங்கள் மூவரையும் அவர்களே அழைத்துச் சென்று ஒரு மாதம் வைத்திருக்கப் போகிறார்களாம்; ஆவலாக விருக்கிறதாம். அதையும் சாமளாவிடமே தெரிவித்தார்கள். என் பர்த்தாவுக்கு "பரிமளா! சாமளா!" என்று அழைப்பதே மிக்க ப்ரியம் என்பதை அறிந்து நானும் அதையே கைக்கொண்டேன். ஆதிமுதலிலிருந்து என்னருமை சாமளாவின் குணங்களையும் மற்ற மாதிரிகளையும் நன்றாகப் பார்த்துப் பழகியதில் அவளிடம் எனக்கு அத்யந்தப் பிரியம் வந்து சூழ்ந்து கொண்டது. என் பதியின் ப்ரேமைக்குமேல் எனக்கு ஏற்பட்டுவிட்டது. அந்த அருங்குணபூஷணிக்கு உற்ற ஒவ்வொரு ஆபத்தை நினைக்கும் போதெல்லாம் தேகம் நடுங்குகின்றது. அத்தனை ஆபத்துக்களிலிருந்தும் கடவுள் அவளுக்கு என் பர்த்தாவின் மூலமாகவே ஆதாவளித்தார். உலகத்தில் எத்தனையோ ஆடவர்கள் கேவலம் அடாத செய்கைகளைச் செய்வதும், வேசி வீடே சதமாக நம்பி இருந்து பல துர்வியாதிகளுக்கு இலாக்காகித் தவிப்பதுடன் கையிலுள்ள பணமும் போய், மெய்யும் கெட்டு, பொய்யும் புரட்டும் கூறி வீட்டில் எல்லோரையும் ஏமாற்றி மக்கள் மனைவியை மதியாது மிக்க வேதனைக் குள்ளாக்கிக் கொலை செய்யும் நிலைமைக்கு வந்து விடும் கோர சம்பவத்தையும் கண்ணாரக் கண்டிருக்கிறோம். அத்தகைய துர்த்தர்களின் மனைவிகள் என்ன செய்யக் கூடும்! எங்கள் விஷயம் அம்மாதிரியானதல்ல பாருங்கள். என் பர்த்தா நியாயமாக முன்பே இந்த அம்மாளையே சதியாக அடைந்திருக்க வேண்டியது. ஏதோ இருவரின் போதாக் காலத்தினால், பூர்வ ஜென்ம வினையினால் இதுகாறும் பிரிந்து கஷ்டப்பட்டு விட்டார்கள். இப்போது கடவுளின் கருணையினால் ஒன்றுபட்டார்கள்.

பணத்திமிர் கொண்ட சிலர் மனிதரை லக்ஷியம் செய்வதே இல்லை. ஆபத்து வந்தற்ற காலையில் மாத்திரம் உதவிக்கு மனிதரைத் தேடியலைந்து காலில் விழுந்து வேண்டுகிறார்கள். வேலை செய்வதற்கும் துணைபுரிவதற்கும் மனிதர் தான் சாச்வதமேயன்றி பணம் கனிகரப்பட்ட மனிதர்போலாகாது. கூலியாட்களை வேண்டுமாயின் தேடித் தரும். அவர்களின் அன்பும் கூலியன்பு தான்.

இதில் எனக்கென்ன பொறாமை. எனக்குச் சிறிதுமில்லை. என் கண்மணி நன்றாகவிருந்து எனக்கு மங்களகரத்தை யளித்தால் போதும்" என்று மிக்க அன்போடு உருக்கமாகக் கூறினாள்.

சரோஜனி:—பரிமளா! உன்னை பூமிதேவி என்றுதான் நான் நினைக்கிறேன். பொறாமைக்குணம் என்பது சற்றுமில்லா திருப்பவள் ப்ரேமாமணிதான் என்று நான் இதுகாறும் நினைத்து அதைப் பலமுறை சொல்லிவந்தேன். இப்போது உன்னுடைய அமிருத குணத்தைக் கண்டால் என்னை யறியாத வியப்புண்டாகின்றது. சாமளாவின் பெரிய தாயார் தன் கணவன் புத்திர பாக்கியத்தை யடையும் பொருட்டு இவள் தாயாரை மறு விவாகம் செய்து வைத்ததாகக் கேள்விப்பட்டு மிக்க ஆச்சரியமடைந்தேன். ஒரு கணவன் இரு மனைவிகளை மணந்து வெகு சந்தோஷமாக வாழ்ந்து வருவதை நான் நேரிலும் பார்த்திருக்கிறேன். அதற்கெல்லாம் என் மனம் மிக்க பொறாமைப்படும். என் மனமறிய என் பர்த்தா அன்னியஸ்திரீகளை சாதாரணமாகப் பார்த்தாலுங்கூட என் மனம் பொறுக்காது. என் பர்த்தாவுடன் சண்டையிடுவேன். அதற்குப் பிரேமாமணி கூட எத்தனையோ முறை பொறாமை வேண்டாம் என்று எனக்குச் சொல்லி யிருக்கிறாள். உன்னுடைய பெருமையான குணத்தைக் கண்டு என்னால் உன்னைப் போற்றிக் கூறவே சாத்யமில்லை. நீயொரு தேவதைதான். உன் உடன்பிறந்த; சோதரி போல சாமளாவைப் பார்த்துக் கொள்வாய் என்பது இனிமேல் எங்களுக்கு தைரியந்தான். இவளைப்பற்றி நாங்கள் பட்ட கவலை கூறமுடியாது.

பிரேமா:—பரிமளா! உன் குணத்தைப்பற்றி உன்னோடு கூறுவது அழகேயல்ல. புஷ்பத்தின் பரிமளத்தை ஒளிக்கமுடியுமா! அது தானே வெளிக்கிளம்பி விடுகின்றது. அதுபோல உன்னுடைய பரிமளம் உலகெலாம் உலாவுகின்றது. நாங்கள் சாமளாவை எங்கள் உயிராக மதித்து வருகிறோம். சரோஜனிக்குப் பொறாமை உண்டு என்

தன் மனைவியின் நோயைப்பற்றிக் கவனியாமலும், அன்பு காட்டாமலும் உதாசீனமாகப் பேசி, பிறர் நகைக்கச் செய்யும் மனிதன் பிறர் நோய்வாய்ப் பட்டிருக்கையில் செய்யும் உபசாரமோ சொல்ல வியலாது. அன்பற்ற தம்பதிகளின் வாழ்வும் ஓர் வாழ்வா!

பதை அவளே ஒப்புக் கொண்டாள். சாமளாவுக்குப் பொறுமை என்பதே கிடையாது. அதையும் நானறிவேன். அவள் மகா குணவதி; எடுப்பார் கைக் குழந்தை. மானத்திலேயே பிரதானமான நோக்கமுடையவள். அவளுடைய அற்புதமான குணத்தின் மகிமை நீயறியாததன்று. ஆகையினால் நான் கூறவேண்டுவது ஒன்றுமில்லை. அவளுடைய அனுதைத் தன்மையை கவனித்துக் கடவுள் உன் மனத்தில் இத்தகைய பொறுமையையும், தயாளத் தன்மையையும் அளித்து அவளைக் காக்கும் காப்பாளியாக உன்னை நியமித்தார் என்றே நாங்கள் நினைக்கிறோம். உங்களிருவரையும் பார்க்கும் பொருட்டே நாங்கள் உடனே வந்தோம். பிறகு நால்வரும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். விமலநாதனும் அவன் பெற்றோரும் ப்ரேமா மணியின் புருஷன்,சரோஜனியின் புருஷன் இருவரையும் வரவேற்று உபசரித்தார்கள்.

* * * * * *

மேற்குறித்த சம்பவங்கள் நடந்து சில நாட்களாயின. பரிமளாவின் பெண் குழந்தையாகிய இன்பமணியை வைத்துக் கொண்டு குலாவிக் கொஞ்சி முத்த மிட்டு அதன் மழலை மொழிகளைப் பருகிக் கொண்டிருந்த தன் கண்மணிகளைக் கண்டுப் பேரானந்தப் பூரிதமடைந்த விமலநாதன் அவர்களின் பின்புறமாகச் சென்று இருகைகளினுலும் இருவரையும் தழுவியவாறு "என் இன்பக்கனிகளே! இதோ இந்தக் கடிதத்தைப் பாருங்கள்'' என்று கூறிக் கொண்டே கொடுத்தான். பரிமளா அதை மிக்க ஆவலுடன் வாங்கிப் படித்துப் பின் சாமளாவினிடம் கொடுத்தாள். சாமளாவும் அதை வாங்கிப் படித்துப் பார்த்து மிக்க சந்தோஷத்தை யடைந்து, "அக்கா!கடவுளே நம் மிஷ்டத்தைப் பூர்த்தி செய்து விட்டார். இவ்வூரை விட்டுச் சென்று

நோயாளிகளின் நோய் குணமாவதற்கு கனிகரத்துடன், உள்ளன்புடன், செய்யும் உபசாரமும், பேசும் வார்த்தையுமே முதன்முதல் வேண்டும். பிறகே டாக்டர்களின் மருந்தும் அவசியம். அத்தகைய அன்பற்ற கணவனின் சுடுசரங்களுக்கு முன்னுல் எத்தகைய மருந்தும் சடுதியில் குணத்தையளிக்க முடிவதில்லை. மனப்பிணி அதிகரித்து தேகப்பிணியையும் வளர்க்கத் துணையாகிவிடுகின்றது.

சிலகாலமேனும் சந்தோஷமாகக் காலங்கழிக்கலாம். நான் கல்கத்தா பரீக்ஷைக்குப் போவதற்கு உத்தரவு வருகிறதோ; இல்லையோ என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன். என்னை கஞ்சம் ஜில்லாவிற்கு மாற்றிவிட்டார்கள். உத்தரவும் வந்து விட்டது. அடுத்த வாரம் நான் அங்குச்சென்று ஆஸ்பத்திரியில் சேரவேண்டும். உங்கள் இஷ்டம் எப்படி?'' என்றாள்.

பரிமளா:—கண்மணி! இதற்கு இஷ்டமும் கேட்க வேண்டுமா? நாம் கஞ்சம் ஜில்லாவில் இருப்பது எனக்கு மிக்க பிரியம். நமது பர்த்தாவுக்கும் முனிசிப் வேலையாகும் போன்ற வதந்தி பிறந்திருக்கிறது. நாம் அங்கு சென்று அவ்வூரிலிருந்து கொண்டு அவ்விடத்திலேயே அவ்வேலை கொடுப்பதாயின்பெற்றுக் கொண்டு சுகமே காலங் கழிக்கலாம்.

விமல:—பரிமளா! நீ சொல்லியதே சரி! இன்னும் கூடிய சீக்கிரத்தில் எனக்கு முனிசிப் வேலை ஆய்விடும். நான் அந்த ஜில்லாவிலேயே வேலை பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றேன். ''இன்பமணி! சின்னம்மாவின் கரத்தில் சர்க்கரை இருக்கிறதா! சற்றேனும் கீழே இறங்காது வீற்றிருக்கின்றாயே!'' என்றான். அதே சமயத்தில் பின்புற மிருந்து வேங்கடம் ''அடாடா! என்ன கேள்வியோ! சின்னம்மாளின் சிறிய பிராயம் முதல் பப்பர்மெண்டை வாங்கிக் கொடுத்து தித்திக்கச் செய்துவிட்டு அந்த ருசியைத் தாங்கள் பெற்றிடப்பட்ட பாடு மறந்துவிட்டதோ! ''வேங்கடம்! என் கண்மணி எனக்குக் கிடைப்பாளா! வேங்கடம்! என் கவலை நீங்குமா! வேங்கடம்! நான் குறை யற்றிருப்பேனா! வேங்கடம்! அதோ போகிறாள் பார்; வேங்கடம்! இதோ வருகிறாள் பார்! வேங்கடம்! வேங்கடம்!'' என்று ஜன்னி கண்டவர்களைப் போல இரவும் பகலும், நிசியிலும் புசிப்பிலும் என் பிராணனை வாங்கி விட்ட கஷ்டம் எனக்குத் தெரியும். என் பிரார்த்தனைக்கே கடவுள் மனமிரங்கி அந்த சர்க்கரையை உங்களிடம் சேர்ப்பித்தார். கற்கண்டு

வெளிப் பார்வைக்கு தாம்பத்யபாவமாக சிலர் இருக்கின்றார்கள். அவர்களை உள்ளே கவனித்தாலோ ''தற்கொலை புரிந்துகொண்டு உயிர் துறக்காது பார்த்துக்கொள்ள வேண்டுமே'' என்கிற கவலை வந்துவிடுகின்றது.

இருக்கு மிடத்தில் எறும்பு மொய்ப்பது போல உங்கள் மகளே அவர்களை நாடுவது அதிசயமா! அப்பப்பா! என் கஷ்டம் நீங்கிற்று. இனிமேல் நான் இரவில் நிம்மதியாக நித்திரை செய்யலாம். ராதா கிருஷ்ணன் போன்ற உங்கள் சேவை இப்போதுதான் வெகு அழகாக இருக்கின்றது; ஆனந்தமாக இருக்கின்றது" என்று பரிகாலமாகக் கூறி நகைத்தான்.

இதுகேட்ட எல்லோரும் கொல்லென்று நகைத்தார்கள். விமலநாதன் வேங்கடத்தை நோக்கி "வேங்கடம்! ஒரு மனிதன் தன் புத்தி ஸ்வாதீனமற்றிருக்கையில் சொல்லிய, பிதற்றியவைகளை இப்படித்தானு சொல்லிக் காட்டுவது? பேஷ்! நீ எனக்கு உயிர் மித்திரனுக இருப்பதனுலேயே என் ஜீவனுக்குச் சற்று தேறுதலான மொழிகளைக் கூறி ஆதரவளித்து வந்தாய். இப்போது என்றும் மறக்கக்கூடாத பேரானந்தத்தை யளித்தாய்.'' இவ்வாறுன காலமும் வருமா?" என்று நான் சதா ஏங்கித் தவித்தது அக் கடவுளுக்குத்தான் தெரியும். எல்லாமவனருள்" என்றுன்.

* * * *

"என் இன்பக் கனியே! ஈடிலாத் தங்கமே! பிரயாணத்திற்கு யாவும் சித்தமாகி விட்டனவா! இன்று உனக்கு டின்னர் பார்டி கொடுத்து, உபசாரப் பத்திரம் படித்து மரியாதை செய்து வழியனுப்பும் பொருட்டு ஏராளமான ஜனங்கள் காத்துக்கொண்டிருக்கிறுர்களாம்; நேரமாகிவிட்டது. ஷோக்கான உடை தரித்து அலங்கரித்துக்கொண்டு புறப்படு கண்மணி! இன்று தாங்க முடியாத புஷ்ப மாலைகள் வந்து உன் கழுத்தை இழுக்கும். இதோ நான் முதல் மரியாதை செய்து, நவரத்தின மிழைத்த முத்து மாலையை அளிக்கின்றேன். அது பாரமற்றது; பிரேமை மிகுந்தது; காதல் கனிந்தது" என்று கூறிக்கொண்டே அனேக முத்தாபரணத்

மனமற்ற மணத்தின் தீமையைப்போன்றது இல்வாழ்க்கையில் வேறெதுவுமே யில்லை. அவ்வித மணத்தை முடித்து மக்களை நடைப்பிண மாக்குவதைவிட கன்னிகையாக வைத்துக்கொண்டு களிப்புறலாம். அன்றி மனமிசைந்த பிச்சைக்காரனுக்குக் கொடுத்து சந்தோஷிக்கலாம்.

தைப் பூட்டினன். இருவரும் க்ஷணநேரம் இன்பவாரிதியில் மிதந்தார்கள். என் அமிருதச் சுடரே! நான் இத்தகைய பேரானந்தத்தையடையும் பொருட்டுச் செய்த பிரார்த்தனையும், தவமும் கொஞ்சமன்று. கடவுள் எனக்கு வெகு காலத்திற்கு முன்னரே உன்னையளித்திருந்தும், நாம் செய்திருந்த பாபம் இடையில் மறைத்துத் திரை போட்டிருந்தது; இப்போதே அத்திரை நீங்கியது. என்ன யோசிக்கின்றாய்?'' என்று விமலநாதன் தன் காதலியின் மோவாய்க் கட்டையை ஒரு கரத்தினால் பற்றிக்கொண்டு, மற்றொரு கரத்தினால் அவளை அணைத்துக்கொண்டான்.

இதுகேட்ட வனிதை "நாதா! யோசனை யொன்று மில்லை. என்னுடைய பூர்வ சரித்திர விநோதத்தை நினைக்க என்னவோ செய்கின்றது. தங்களுக்கு என்ன பதிலளிப்பது என்பதை யறியாது தியங்கி நின்றுவிட்டேன். நாதா! நான் வேண்டிக்கொள்வதாவது,—என்னருமை அக்காவுக்கு ஒருவிதமான குறைவு மின்றி அவளை சந்தோஷமாக நடத்தவேண்டும். பிறகே என்னைக் கவனியுங்கள். அந்த அம்மாளை நான் என் குலதேவதையாக எண்ணி இருக்கிறேன். என்னால் அவர்களுக்கு ஒருவிதத்திலும் தீங்கு உண்டாவது கூடாது. அவர்களால் நாம் பிழைக்கின்றோமே யன்றி வேறல்ல. இதைத் தான் திரும்பத் திரும்பக் கூறுகிறேன். என்னுடைய ஜீவியத்தின் இன்பக் களஞ்சியம் அவர்கள் தான் என்பது நான் சத்தியமாகக் கூறுவேன். என்னுடைய உயிர் இருக்கும் பரியந்தம் நான் அந்த தேவதைக்கு முதல் அடிமை பிறகே உங்களுக்கு அடிமை. அவர்களின் ஆக்கினைப்படியே நான் நடப்பேன். ஏன்! நீங்களும் அப்படித் தான் நடக்கவேண்டும். அந்த அம்மாள்தான் என் குல தெய்வம்'' என்று கூறுகையில் "ஆஹா! இதென்ன பயித்தியக்காரத்தனம்! மனிதருக்கு மனிதர் குல தேவதையாவது, மண்ணாவது; நமக்கெல்லாம் ஒருவன் மேலே இருக்கிறானே அவனுக்கு அவ்வார்த்தைகளை அர்ப்பணம் செய்துவிடு. என் கண்ணே! சாமளா! உன் குணத்தை நானறிவேன். இதோ நானும், உன் கண்மணிகளாகிய இன்பமணி, செல்வமணி இருவரும் தயாராக வந்துவிட்டோம். நீ புறப்படு; லேட்டாகிவிடப்

போகிறது" என்று கூறிக்கொண்டே பரிமளா வந்தாள். பிறகு சாமளா சென்று அலங்கரித்துக்கொண்டு ரதி தேவி போன்று கிளம்பினள். விமலநாதன் பெற்ருேர் உள்பட எல்லோரும் புறப் பட்டு பிரயாணமாகி விருந்து நடக்கும் விடுதியை அடைந்தார்கள். அங்கு ஏற்கெனவே காத்துக்கொண்டிருந்த ஜனங்கள் கரகோஷம் செய்து, நமது எழிலார் மடந்தைகளாகிய சாமளா, பரிமளா ஆகிய இருவருக்கும், விமலநாதனுக்கும் மரியாதை செய்து ரோஜா மாலைகள் போட்டு புஷ்பச் செண்டுகள் கொடுத்து, உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தார்கள். புகைப்படம் எடுக்கப்பட்டது. பின் பார்ட்டி நடந்ததும் சிறிது நேரம் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது; சாமளாவுக்கு அனேக வாழ்த்துக்கள் கூறி எல்லோரும் தம் தம் இஷ்டமான—சக்தியான—பரிசுகளைக் கொடுத்து விதவிதமான மரி யாதையுடன் ஆஸ்பத்திரியின் தலைவி, சுலோசனுவின் பழைய வைத்திய மாது, அவள் சிநேகிதைகள், ராமச்சந்திரன். முதலிய எல்லோருமாக நல்வரவு கூறி வழி யனுப்பினர்கள்.

நமது நற்குணமணியும் அவர்களுக்குப் பிரதி வந்தனம் செய்து, அது விஷயமாகப் பிரசங்கமும் செய்துப் பின் எல்லோரிட மும் உத்தரவு பெற்றுக்கொண்டு ரயிலடிக்குச் சென்ருள். அங்கும் அனேகர் கூட வந்து ரயிலேறிச் செல்லும் பரியந்தம் தமது சந் தோஷக் குறியைக் காட்டினர்கள். வண்டியும் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டு சற்று நேரத்தில் மறைந்தது. இந்த அபாரமான ஆநந்தக் காட்சியைக் கண்ட எல்லோரும்—விமலநாத னின் பெற்ருேர் முதல்—பரமாநந்தத்தை யடைந்து சாமளாவைக் கொண்டாடினர்கள். விமலநாதனின், பரிமளாவின் சந்தோஷத்தைக் கூறவேண்டுமா!

* * * *

அரசனின் மாளிகைக் கொப்பான வேலைப்பாடுகள் விளங்கும் "பரிமள பவனம்" என்கிற பங்களாவின் வர்ணனையைக் கூறத் தரமன்று. ஆநந்த விலாசத்தை விட ஆயிரம் பங்கு அதிகரித்த எழிலுடன், அலங்காரத்துடன் விளங்குகின்றது. அந்த பங்களா வின் முன் பக்கத்துத் தோட்டத்தில் மூன்று சந்திரன்கள் உதய

மாகித் தவழ்வது போன்று செல்வமணி, இன்பமணி, குணமணி ஆகிய மூன்று குழந்தைகளும் ஒன்று ஓடுவதும், ஒன்று பிடிப்பதும் ஒன்று தவழ்ந்து செல்வதும் அதிஅற்புத மனோகரக் காட்சியாக விருக்கின்றது. இந்த ஆனந்தகரமான காட்சியை குழந்தைகளின் விளையாட்டத்தைக் கலைத்தால் அதன் எழில் குன்றிவிடுமென நினைத்து அத்தோட்டத்தில் மூலைக்கொருவராக நின்று, பார்த்துப் பரமானந்த மடைந்து தம் தம் போக்காகப் பேசிக்கொண்டிருக்கி றார்கள். பின்னர், சகோதரியைப் பிரிந்திருக்க மனமற்று தன் குடும் பத்துடன் வந்து சேர்ந்துவிட்ட கோபிநாதன் தன் மருமகனாகிய குணமணியை ஆவலுடன் வாரி அணைத்து எடுத்து முத்த மிட்டு மகிழ்ந்தான். விமலநாதனுக்கு அவ்வூரிலேயே முனிசிப் வேலையாகி விட்டதால் அவர்கள் குடும்ப சகிதம் அவ்விடத்திலேயே நிலைத்து விட்டார்கள். கனியும் இனிப்பும் போன்ற அக் குடும்பத் தினர் ஒருவரின் மனமும் கோணாமல், வருந்தாமல் சதா ஆனந்த மயமாகவே இருக்கின்றார்கள். எந்த நேரத்திலும் அந்த பங்களாவில் அதிதி போஜன மின்றி இருப்பதில்லை. தரும சாப்பாடும், அவுஷதமும் கணக்கின்றி வழங்கப்பட்டு வருகின்றன. அக் குடும்பத்தை வாழ்த்தாதோர் கிடையாது. விமலநாதனின் பெற்றோர்கள் சதா குழந்தைகளுடன் விளையாட்டிலேயே தம் காலத்தை ஆனந்தமாகக் கழிக்கலானார்கள். நித்ய கல்யாண வைப வத்துடன் எல்லோரும் மங்களகரமாக, தேனும் பாலும் போன்றும் மலரும் மணமும் போன்றும் நீடூழி வாழ்ந்து வருகின்றார்கள்.

"பெற்றாற் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்பும்
புத்தேளிர் வாழும் உலகு." (திருக்குறள்)

சுபம்! சுபம்!! சுபம்!!!

"சாமளநாதன்" முற்றிற்று.

ஓம் தத் ஸத்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

நாவல் உலகில் நவீனத்தில் நவீனமாகத் தோன்றி

இருக்கும் நவரச அலங்கார நாவல்!

ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய;

ருக்மிணீகாந்தன்

அல்லது

ஆபத்தில் காக்கும் அன்பர்கள்

(அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது)

அ லங்கார நடை! திசயக் கதை! பூர்வ சம்பவம்!	ஆ னந்தம்! ச்சர்யம்! ண்மை!	இ னிய மொழி! ன்பரசம்! ணையிலாக்கற்பனை!

இவை ஒருங்கு அமைந்து படிப்பவர் மனதைப் பிரமிக்கச் செய்யும் உன்னத துப்பறியும் நாவல்.

புத்தகப் படிப்பால் நீங்கள் எதையறிய ஆசைப்படுகிறீர்கள்?

கற்பனா சக்தியால் வர்ணிக்கப் படக்கூடியவை எவை?

சிருங்காரம்!, ஆச்சர்யம்!, வீரம்!, வைராக்கியம்!,
ஹாஸ்யம்!, காதல்!, ரௌத்திரம்!, சோகம்!, சமத்காரம்!

இந்த நவரச அலங்காரங்களும் அமைந்த புத்தகமே படிப்பவர் மனதைப் பரவசமாக்கக் கூடியது. ஆதலால் உடனே இந்த ஒப்புயர்வற்ற உயரிய நாவலை வாங்கி வாசித்து அதிலுள்ள அதிசய ஆனந்தக் கற்பனா விநோதத்தைப் படித்து மகிழுங்கள்!

இக்கதையின் முக்கியமான சாராம்சம்: பணத்தை! பொன்னையே எதிர்பார்க்கும் குணமற்ற கொள்ளிகள், உற்றார், உறவினர், உடன்பிறப்பு, சிநேகிதர் என்கிற ஒரு விதமான பந்தமும் இல்லாது எத்தகைய தீய தொழில் வேண்டுமாயினும் செய்து பணம் தேடுவதையே நாட்டமாகக் கொண்டு அலையும் விநோதத்தை நன்றாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

இணையிலா இன்பம் எங்கே என்றால்?

ருக்மிணீகாந்தனைப் படித்தால் நீங்கள் அறியலாம்.

15 அழகிய அத்தியாயங்களைக் கொண்டது விலை ரூ. 2-0-0

"ஜகன்மோகினி" சந்தா நேயர்களுக்கு விலை ரூ 1-12-0

வத்ஸா கம்பெனி,— திருவல்லிக்கேணி.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

இரண்டாம் பதிப்பு

நவநீதகிருஷ்ணன்

சென்ற ஆண்டின் முதற் சஞ்சிகையில் இதன் இரண்டாம் பதிப்பு அடுத்த மாத முடிவிற்குள் வெளியாய்விடுமென்று தெரிவித்தோமாயினும், பலவித அசந்தர்ப்பங்களினால் இதை அச்சிடுவதில் அதிக தாமத மேற்பட்டுவிட்டது பற்றி மிகவும் வருந்துகின்றோம். இது தற்போது அச்சாகிவிட்டது. வேண்டிய சந்தா நேயர்கள் ரூ. 1-12-0 முன்பண மனுப்பினால் தபாற் செலவின்றி அனுப்புகிறோம்.

ஒரு சந்தோஷச் செய்தி

நமது சந்தா நேயர்களில் பலர், நமது புத்தகங்களை வாங்கும்போது, தங்களுக்கு வேண்டிய இதர புத்தகங்களையும் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறார்கள். நாம் வேறு புத்தகங்களைக் கையில் வைத்துக்கொள்வதில்லையாகையால், மற்றவற்றை அனுப்ப முடியாதென்று எழுதவேண்டி யிருக்கிறது. அநேக நேயர்கள், தங்களுக்கு வேண்டிய புத்தகங்களை தனித்தனியாக ஒவ்வொரு புத்தகசாலையினின்றும் வரவழைப்பதென்றால் தங்களுக்கு அதிக தபாற் செலவு ஏற்படுகிறதென்று எழுதுவதால், எல்லோருடைய சௌகரியத்தையும் உத்தேசித்து, இனிமேல் நமது சந்தா நேயர்கள் கேட்கும் புத்தகங்களை வாங்கி யனுப்பத் தகுந்த ஏற்பாடு செய்துள்ளோம். ஆகையால் நேயர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களின் விபரமும், அவற்றின் முழு கிரயமும் முன் பணமாக அனுப்பினால் அவற்றை தபாற் செலவில்லாமல் அனுப்புகிறோம். ஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கே தபாற் செலவில்லாமல் அனுப்ப முடியு மாதலால், அதற்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கள் நாலணா சேர்த்து அனுப்பவும். இந்த ஏற்பாட்டின்படி வி. பியில் அனுப்ப முடியாது.

மேற்கண்ட ஏற்பாட்டினால் இனிமேல், நமது சந்தா நேயர்கள், தங்களுக்கு வேண்டிய சகல புத்தகங்களை தபாற் செலவும், வீண் அலைச்சலுமின்றி பெற்றுக்கொள்ள முடியு மென்பதைக் கவனிக்கக் கோருகின்றோம்.

மானேஜர், "ஜகன்மோகினி"

நியூ இந்தியா

அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

வட ஆர்காடு; கோயம்பத்தூர், நீலகிரீஸ், தஞ்சாவூர், திருச்சிஞப்பள்ளி, மதுரை ஜில்லாக்களுக்கு செல்வாக்கும், ஊக்கமும் வாய்ந்த ஏஜெண்டுகள் உடனே தேவை.

லைப் இலாகாவில் கம்பெனி அளிக்கும் வசதிகளாவன:—

பாலிஸிதார்களுக்கு:—

[1] தானுகவே கிடைக்கும் பறிமுதல் செய்யப்படாத உரிமை, [2] நீடித்த கால அஷியூரன்ஸ், [3] கஷ்டகாலத்துக்கான சாசுவத அனுகூலங்கள், [4] எதிர்பாராத சம்பவத்தால் மரணமேற்படுவதற்கு இரண்டு பங்கு தொகை அளிக்க உறுதி கூறப்படுவது, [5] ராஜீயக் குற்றத்துக்காகச் சிறை செல்லும் பாலிஸிதாரர்களுக்கு அவர்கள் சிறையிலுள்ள வரையில் பிரத்யேக ஏற்பாடுகள்.

ஏஜண்டுகளுக்கு:—

[1] தாராளமான கமிஷனும், போனஸும், [2] மீண்டும் தொடங்கப்படுவதற்குச் சாசுவதமான கமிஷன், [3] கம்பெனியுடன் நேரான சம்பந்தம்.

நெருப்பு, கப்பல் விபத்து, மோட்டார் விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்கட்கும் ஏஜண்சிகள் கிடைக்கும்.

கே. கே. ஸ்ரீனிவாஸன்
பிராஞ்சு மானேஜர்.

4—5, முதல் லைன் பீச்,
மதராஸ்.

அதியற்புதமான பன்னிரண்டு

நாவல்களின் களஞ்சியம்

" பன்னிரு மரகதங்களின் மர்மம் " என்ற நூல் 12 அபூர்வமான நாவல்களின் களஞ்சியமாகும். 'பிரஜானுகூலன்' நேயர் ஆநந்தத்துடன் வாசிக்கத் தருந்தது. இதிலுள்ள நாவல்களின் விவரம்.—(1) மோகனராமன், (2) சாணக்கிய தந்திரம், (3) மாலதீ மாதவம், (4) கிராதார்ஜுனியம், (1) அதிர்ஷ்ட உருமால், (6) ஜோதிஷ்மதி, (7) சந்திரா, (8) சிங்காரத்தின் காதல், (9) மோஹன கல்யாணி, (10) கொடுத்தும் கெட்ட பெயர், (11) திக்கற்ற இரு பெண்மணிகள், (12) மாமனார் மாறிய விசித்திரம். இந்த ஒவ்வோரு நாவலும் மிக்க அருமையானவை. இத்துடன் (1) சிநேக அனுபவங்கள், (2) உலக அனுபவங்கள், (3) வடமொழித் திரட்டு, (4) நீதிலதா, (5) ஆங்கிலப் பழமொழிகள், (6) பிரபஞ்ச விலாசம், (7) மாதங்களைப் பற்றி, (8) கடிதங்களின் ரகசியம், ஆக வேறு எட்டு விஷயங்களும் கண்டறிந்து அனுபவமாய் எழுதப்பட்டிருக்கிறன. 650 பக்கங்கள் கொண்டது. **விலை ரூபா 3.** உடனே எழுதுங்கள்,

இந்நாவல் " பிரஜாநுகூலன் " பத்திராதிபர் இயற்றியது. ஒவ்வொரு பக்கமும் அநுபவங்களும், நீதிகளும், உயரிய கற்பனைகளும் நிறைந்து வசீகரிக்கின்றது. இது ஒரு குடும்ப பொக்கிஷமாகும். எல்லாம் புதிய போதனைகளாகும்

பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

அகில இந்திய லா ஜர்னல்

ஓர் உயரிய மாதாந்திர சட்டப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் ஹிந்துலா, பீனல்கோட், கான்ட்ராக்ட் ஆக்ட் (ஜமீன் ஜமீன்தார்கள் சம்பந்தமான) எஸ்டேட் லாண்டு ஆக்டு, சிவில் புரோஸீஜர்கோட் (விக்ரயம், அடமானம், தானம் முதலிய விஷயங்களைப்பற்றின) டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டு, (உண்டி, செக், புரோநோட் இவை சம்பந்தமான) நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்ட் முதலிய ஆக்டுகளின்கீழ் ப்ரீவிகௌன்சில், சென்னை, பம்பாய், கல்கத்தா, ரங்கூன், அலஹபாத், லாகூர் முதலிய ஹைகோர்ட்டுகளில் தீர்மானிக்கப்படும் கேஸுகளும் அவைகளின் சாராம்சங்களும், தெளிவான தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு சட்ட வியாசங்களுடன் வெளியாகி வருகின்றன. இப்பத்திரிகை ஜமீன்தார்கள், வியாபாரிகள், வக்கீல் குமாஸ்தாக்கள், கொடுக்கல் வாங்கல் வர்த்தகர்கள், பெடிஷன் எழுதுவோர் முதலிய வியாபாரஸ்தர்களுக்கு வெகு அவசியமானது. சட்ட விஷயங்களை எளிதில் அறிந்துகொள்ளலாம். இப்பத்திரிகை மாதம் 1-க்கு 64 பக்கங்களுக்குமேல் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றது. வக்கீல்களால் இயற்றப்பட்டு வருகின்றது. முதல் வால்யம் 1929-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பித்து வெளிவருகின்றது. சந்தாவிவரம் இந்தியா, பர்மா, சிலோன், முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா (முன் பணம்) தபால் சார்ஜ் உள்பட ரூ. 5. மற்ற இடங்களுக்கு 5-12-0. (ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது) ஒரு வருஷத்திற்கு ஒரு வால்யம் முடியும். மாதிரி சஞ்சிகை 0—8—0 ஸ்டாம்புகளனுப்பினால், அனுப்பப்படும்.

அகில இந்திய லா ஜர்னல் ஆபீஸ், திருவள்ளூர் செங்கல்பட்டு ஜில்லா,

(M. & S. M. Ry.)

நாம் இச்சஞ்சிகையை ஆரம்பித்ததுமுதல் இதற்குள் நமது சந்தாதார்கள் படிப்படியாகப் பெருகி எமக்கு ஆதரவளித்து உற்சாகத்தை யுண்டாக்கியதற்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் பல்லாயிரக் கணக்கில் சந்தாதார்கள் சேர்ந்தாலன்றி சஞ்சிகையை நஷ்டமின்றி நடத்துவது கஷ்டமென்பது நேயர்கள் அறிந்த விஷயமாதலால் ஒவ்வொருவரும் சில புதிய சந்தாதார்களைச் சேர்த்துக்கொடுத்து உதவிபுரியும்படி கேட்டுக்கொள்கிறோம். அப்படிச் செய்பவர்களுக்குப் பிரதி உற்சாகமுண்டாவதற்காக கீழ்கண்டவாறு பரிசுகள் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள் இதை ஆமோதிப் பார்களென்று நம்புகிறோம்.

			பரிசு புத்தகங்கள்
(1)	ஒரு புதிய சந்தாதாரைச் சேர்த்து முன்பண மனுப்புகிறவர்களுக்கு		மாதவமணி அல்லது அமிர்தமாலினி
(2)	2 புதிய சந்தாதார்களை	,,	வீரவஸந்தா
(3)	3 ,,	,,	கோபாலரத்னம்
(4)	4 ,,	,,	சுகந்தபுஷ்பம்
(5)	5 ,,	,,	கௌரீமுகுந்தன் அல்லது ஒரு வருஷ சஞ்சிகை
(6)	6 ,,	,,	சண்பகவிஜயக
(7)	7 ,,	,,	நவநீதகிருஷ்ணன்
(8)	8 ,,	,,	வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசனை

210029

DON'T FAIL TO READ

THE MOVIE MIRROR

The Cinema Magazine of merit with the largest circulation. The only one of its kind in South India.

Containing the latest comment pictures, criticism and news concerning Indian pictures, reviews and personalities.

Carries more Producer, Distributor advertising matter than all other Cinema Film Papers combined.

THERE MUST BE A

Reason..................

For Rates & Subscription Apply:

THE MOVIE MIRROR

POST BOX 1205. G. P. O.

MADRAS.

கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம்!!;

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும், பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகாத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குவதே சரி.

அளவு 18 x 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 **2-வது ரகம்** ரூ. 4-0-0

பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்தளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. கேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 x 2¾ முழங்கள் விலை ரூ. 11-0-0

ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 x 2¾ விலை ரூ. 11-4-0

ரவிக்கை 1 முழம் 0-12.0

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3.0.0 அதிகம்.

குறிப்பு....உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன்பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0.1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,

65, அரமனைக்கார வீதி,

ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

“ஜகன்மோகினி” யில்
வெளிவந்த நாவல்கள்.

மலர் 1.	ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0
	ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை				
	கனகசபை	ரூ.	1	8	0
	கோகிலம்	ரூ.	0	6	0
	ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை				
மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் VI.	நவநீதகிருஷ்ணன் ...	ரூ.	2	0	0
மலர் VII.	சாருலோசனை (2-பாகங்கள்)	ரூ.	2	0	0
	ருக்மிணீ காந்தன்	ரூ.	2	0	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம்	ரூ.	1	0	0
	கோபால ரத்னம் ...	ரூ.	0	14	0
	வீரவஸந்தா	ரூ.	0	8	0
	மாதவமணி	ரூ.	0	3	0

“ஜகன்மோகினி” சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
ராதாமணி	ரூ.	2	0	0
சாருலோசனை	ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்	ரூ.	1	12	0
ருக்மிணீ காந்தன்	ரூ.	1	12	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0
கௌரீமுகுந்தன்	ரூ.	1	8	0

“ஜகன்மோகினி” ஆபீஸ்

26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இனாம் தபாற்செலவு இனாம்

இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு “போலீஸ் கிலி போதிராயர்” “ராவ்பகதூர் ரஸதுல்லா சாஹிப்” என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

தமிழ் நாவல்கள்

மதனசிங்கர்	ரூ.	1	0	0.	மர்மமுகி	ரூ.	0	12	0
வஸந்தசமுத்ரா	ரூ.	0	12	0	அமிருதமாலினி	ரூ.	0	4	0

வக்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி.

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.